Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :238 ஆடி 09ஆம் நாள் வெள்ளிக்கிழமை 24 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## இலங்கை சிங்கள பௌத்த நாடு

# நாங்கள் இட்ட பிச்சையில் வாழ்பவர்களே தமிழர்கள்!

### எள்ளிநகையாடுகிறது மஹிந்த அணி

கொழும்பு, ஜூலை 24

இலங்கை சிங்கள, பௌத்த நாடாகும். தமிழ், முஸ்லிம், கத்தோலிக்க மக்களுக்கு வாழ்வதற்கு வழிவிட்ட இனத்தவர்களே சிங்களவர்கள வர்கள். வயிற்றுக்கு சோறு இல்லாவிட்டால்கூட சேர, சோழ, பாண்டிய னுடன் சண்டையிட்டு அவர்களை வீழ்த்திய இனமே நமது இனமாகும். தமிழ், முஸ்லிம் அரசியலுக்கு நோக்கம் இருக்கின்றது. அதனை அடைவ தற்காக தாக்குதல்கள்கூட நடத்தப்பட்டுள்ளன. ஆனால், சிங்களவர்கள் இன்னும் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள்? யாழ்ப்பாணத் தில் சிங்களவரால் இடமொன்றை வாங்க முடியுமா? 2 ஆயிரத்து 500 வருடகால வரலாறு எமக்கிருந்தும் என்ன பயன்?.

27

## நல்லூர் கந்தன் கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 24

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் அலங்காரக் கந்தனுக்குகொடிச் சிலை எடுத்துவரும் நிகழ்வு இன்று வெள்ளிக்கி ழமை பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது. சட்டநாதர் வீதியில் உள்ள முருகன் ஆல யத்தில் இருந்து கொடிச் சிலை காலை

25

## விபத்தில் சிக்கிய முதியவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜூலை 24

கிளிநொச்சி, ஏ-9 வீதி யில் நடந்த விபத்தில் படுகாயமடைந்த முதி வர் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயி ரிழந்துள்ளார் என்று கிளிநொச்சி மருத்துவ மனைத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் முற் பகல் சைக்கிளில் பய ணித்த முதிய

25

## அங்கஜனின் படத்துடன் வாகனம் மடக்கப்பட்டது

### 270 ஸ்ரிக்கர்கள் மீட்பு 9 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியி டும் அங்கஜனின் படத்து டன் பயணித்த வாகனம் வட்டுக்கோட்டைப் பொலி ஸாரால் நேற்றுமுன்தி னம் இரவு 10.30 மணிய ளவில் மடக்கிப் பிடிக்கப் பட்டது. அதில் பயணித்த 9 பேர் கைது செய்யப்பட் டனர். அவர்கள் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அத் துடன் வாகனத்திலிருந்து அங்கஜனின்

25

## வேட்பாளரின் படத்துடன் பிடிக்கப்பட்டது வாகனம்

### 17 வயதுச் சிறுவன் உள்ளிட்ட 6 பேர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பா ளர் சுரேன் குருசாமியின் படம் பொறிக் கப்பட்ட நிலையில் பயணித்த வாகனம் நேற்று மாலை வட்டுக்கோட்டைப் பொலி ஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டது. வாகனத்திலிருந்து 18 வயது இளைஞர் கள் 4 பேரும், 17 வயதுச்

27

## யாழ். பிரதேச செயலகங்களில் முறைப்பாட்டு நிலையங்கள்

### தென்னிலங்கை அதிகாரிகள் வருகை

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் தொடர் பான முறைப்பாடுகள் அதிகரித்துள்ள நிலை யில், சண்டிலிப்பாய், சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலகங்களிலும் தேர்தல் முறைப்பாட்டு மத்திய

27

## பிரபாகரனின் கோரிக்கையே கூட்டமைப்பின் விஞ்ஞாபனம்

### பொங்குகிறார் எல்லாவல மேதானந்த தேரர்

கொழும்பு, ஜூலை 24

பிரபாகரனின் எண்ணங்களையே தேர் தல் விஞ்ஞாபனம் ஊடாக தமிழ்த் தேசி யக்கூட்டமைப்பு வெளிப்படுத்தியுள்ளது. கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாப னத்தை நாம் நிராகரிக்கின்றோம். ஆட் சிக்கு வருபவர்கள் அது தொடர்பில் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தவே கூடாது. இவ்வாறு தொல்பொருள் தொடர்பான ஜனாதிபதி செய

27

## சமுர்த்தி உத்தியோகத்தர்களை சந்திக்க டக்ளஸ்க்குத் தடை

### தேர்தல்கள் ஆணைக்குழு அதிரடி

யாழ்ப்பாணம், ஜூலை 24

கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களை கடற் றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இன்று சந்திக்க விருந்த நிலையில், அந்தச் சந்திப்பை நடத்துவதற்கு தேர்தல்கள்

25

### அபிவிருத்தியே நோக்கம்

## வடக்குக்கு ஒன்றும் தெற்குக்கு ஒன்றும் கூறுபவன் அல்லன் என்கிறார் மஹிந்த

கொழும்பு, ஜூலை 24

எமக்கு எந்தப் பேதமும் இல்லை. யாழ்ப்பாணம் முதல் அம்பாந்தோட்டை வரை கொழும்பு முதல் கல் முனை வரை எல்லோருக் கும் சமமான அபிவிருத் தியை மேற்கொள்

04

## கூரை பிரித்து நகை திருட்டு

அச்சுவேலி, ஜூலை 24

வீட்டில் உள்ளவர்கள் சுபநிகழ்வு ஒன்றுக்காகச் சென்றவேளை வீட் டின் கூரையைப் பிரித்து உள்ளே நுழைந்த திருடர்கள் 2 பவுண் நகை, 2 கமரா என்பவற்றைத் திரு டிச்சென்றுள்ளனர்.

27

## 'டில்லு குரூப்' நபர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 24

பொலிஸ் விசேட அதிரடிப்படையி னரால் நேற்றுமுன்தினம் யாழ்ப்பா ணம் நகரப்பகுதியில் வைத்து இளைஞன் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்த

27



## கறுப்பு ஜூலை நினைவேந்தல்

அச்சுவேலி, ஜூலை 24

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை யில் கறுப்பு ஜூலை நினைவேந்தல் நேற்று வியாழக்கிழமை காலை அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்ப்பா ணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டிலும் கறுப்பு ஜூலை நினைவேந்தல்

27

## சமல் நிகழ்வில் வேட்பாளர்கள்!

### நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறது தேர்தல்கள் ஆணைக்குழு

யாழ்ப்பாணம், ஜூலை 24

வேட்பாளர்களான அங்கஜன், டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் நேற்றுமுன்தினம் அமைச்சர் சமல் ராஜபக்சவுடன் இடம்பெற்ற நிகழ்வில்பங்கேற்றமை தொடர்பில் ஊடகங்களில் வெளியான செய்தி களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதித் தேர்தல் கள் ஆணையாளர் எஸ்.அச்சுதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத் தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகை யாளர் சந்திப்பிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

27



# இனவாதிகளை ஒடுக்குவதற்கு எம்மைப் பலப்படுத்த வேண்டும்

## கூட்டமைப்பின் வேட்பாளர் சரவணபவன் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 24

**இனவாதம் இந்த நாட்டில் இருக்கும் வரையில், இலங்கையின் நிகழ் காலத்தையும் எதிர்காலத்தையும் இனவாதிகள் தீர்மானிக்கும் வரையில் இலங்கைக்கு விமோசனமில்லை. இனவாதிகளின் கரங்களை ஒடுக்குவதற்கு மக்கள் எம்மைப் பலப்படுத்த வேண்டும் இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வரவிருக்கும் பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுபவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன்.**

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கறுப்பு ஜூலை இனக்கலவரமானது மிகவும் கொடியது. தமிழர் நெஞ்சங்களில் இன்னும் ஆறாத வடுவாக உள்ளது. அது இடம்பெற்று 37 ஆண்டுகள் கடக்கின்றபோதிலும் அதுதந்த காயங்கள் எம்மவர்களின் நெஞ்சங்களை விட்டு இன்னும் அகலவில்லை. இந்த நிலையில் தேசிய பௌத்த புத்திஜீவிகள் சங்க சபையின் தலைவர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தேசத்தைக் காத்த இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலுக்குப் பதில் தாக்குதலாக தமிழ் மக்கள் மீது சிங்கள மக்கள் கைவைக்க வேண்டி வந்தது. தமிழர்கள் வன்முறையை நாடினால் வன்முறைதான் பதில் என்பதற்குக் கறுப்பு ஜூலை சான்று என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடந்த காலமும், நிகழ் காலமும், எதிர்காலமும் இத்தகைய தேரர்களாலேயே தீர்மானிக்கப்பட்டது, தீர்மானிக்கப்படுகின்றது, தீர்மானிக்கப் படும். விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலுக்கு அப்பாவித் தமிழர்களை அரக்கத்தனமாகக் கொன்றொழித்தமை பெருமை பேசும் விடயம் அல்ல.

போர் முடிவுற்ற பின்னர் இன்று தேசியக் கட்சிகள் பலவும் நல்லிணக்கம் என்று வெளிச்சாயம் பூசிக் கொண்டிருக்கையில் இத்தகையவர்களின் கருத்துக்கள் இந்த அரசு இன நல்லிணக்கத்தை எந்த வகையில் பார்க்கின்றது என்பதை ஆழமாகப் புடம்போட்டுக் காட்டுகின்றன.

இத்தகையவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப இயங்கவும், அவர்களின் ஊதுகுழலாகவும் அடிவருடிகளாகவும் செயற்படுவதற்கு இங்கு பல எட்டப்பர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர். தேசியக் கட்சிகளின் சின்னங்களில் களமிறங்கினால் தமக்குத் தோல்வி கிட்டும் என்று உணர்ந்த அவர்கள் சுயேச்சைகளாகக் களமிறக்கி விடப்பட்டுள்ளனர். அவர்களைத் தவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டுள்ள தேசியக் கட்சிகளின் வேட்பாளர்களும் தற்போது தம்மை தமிழர்களின் ரட்சகர்கள் போன்று காட்டிக்கொள்ள ஆரம்பித்து விட்டனர். தமிழ் மக்கள் இந்த விடயத்தில் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும். கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும் என்றுள்ளது. (ம)

## தனிமைப்படுத்தல் நிலையங்களில் ஜூலை 31ஆம் திகதி வாக்கெடுப்பு

### தவிசாளர் மஹிந்த அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 24

தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு எதிர்வரும் 31ஆம் திகதி வாக்களிக்க வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். இந்த வாக்களிப்பை தபால் வாக்களிப்பு முறையிலேயே மேற்கொள்ள ஆணைக்குழு முடிவு செய்துள்ளது எனவும் அவர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கான வாக்களிப்பையும் எதிர்வரும் 31ஆம் திகதி மேற்கொள்வதா அல்லது ஓகஸ்ட் 5ஆம் திகதியை மேற்கொள்வதா என்பது தொடர்பில் தொடர்ந்தும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. ஆயினும், அவர்கள் அனைவரும் சாதாரண வாக்குச் சாவடியில் அல்லாமல், விசேட வாக்குச் சாவடியிலேயே வாக்களிக்க வசதி செய்யப்படும்.

வாக்காளர்களின் எண்ணிக்கை 10இலும் குறைவான வாக்குச் சாவடிகளில், வாக்காளர்களின் இரகசியத்தன்மை பேணப்படாது என்பதால், அவர்களின் வாக்குகள் தனியாக எண்ணப்படாது. அவ்வாக்குகளை எண்ணும் வேளையில் அதிகாரிகளுக்குப் பயம் ஏற்படலாம் என்பதன் காரணமாக, அவை விசேட அதிகாரிகள் குழுவால் தனியாக எண்ணப்பட்டு வாக்குச் சாவடியின் முடிவுகளுடன் சேர்க்கப்படும்.


இதேவேளை, உதவி, பிரதித் தேர்தல் ஆணையாளர்களின் மாவட்ட மட்டத் தகவல்களைக் கொண்டு, தபால் வாக்களிப்பை நிறைவு செய்யாதவர்கள் இருப்பார்களாயின், எதிர்வரும் 27ஆம் திகதியிலிருந்து 31ஆம் திகதி வரையான காலப்பகுதி வரை தபால் வாக்களிப்பை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படும்.

இராஜாங்கனைப் பிரதேசத்தில் தபால் வாக்களிப்பை எதிர்வரும் 28ஆம் திகதி அல்லது அதற்கு பின்னர் நடத்த முடியுமாக இருக்கும், என்றார். (ஓ,5)

### வாக்காளர் அட்டை கிடைக்காதோர்

## தபால் நிலையங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்

### தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 24

வாக்காளர் அட்டை விநியோகம் எதிர்வரும் 29ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்படும். வாக்காளர் அட்டை கிடைக்காதோர் தமது பகுதிக்குரிய தபாலகங்களுடன் தொடர்பு கொள்ளவும். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத் தேர்தலுக்கான அடிப்படை ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. தபால்மூல வாக்களிப்புக்கு இன்றும் நாளையும் மேலதிக சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

வாக்காளர் அட்டை விநியோகம் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எதிர்வரும் 29ஆம் திகதியுடன் அது முடிவுக்கு வரும். வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் தத்தமது பிரதேச தபால் நிலையங்களுக்குச் சென்று அதனைப் பெற்றுக் கொள்ள முடியும், என்றார். (ஓ,5)



# நாடாளுமன்றத் தேர்தல் - 2020

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி
## தேர்தல் மாவட்டம்

### எனது அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!

**ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப்போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் வடமாகாணத்தில் பாரிய அபிவிருத்தியை மேற்கொண்டு வேலையில்லாப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவோம் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.**

1. அபிவிருத்தி வேண்டாம் அரசியல் உரிமைக்கே முதலிடம் என்று கூறிய முன்னாள் முதலமைச்சர் அரச சலுகைகள் கொடுப்பனவுகள் ஓய்வுதியம் வேண்டாமென்று சொல்லுவாரா?
2. இதுவரை காலமும் தமிழ் மக்களைப் பிரதிநிதிப்படுத்தியவர்களின் உட்கட்சி பூசல்களைத் தீர்க்க முடியாதவர்கள் எம் பிரதேசத்தின் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத் தருவார்களா?
3. தேசியத் தலைவர் ஒன்றிணைத்த அரசியல் கட்சியின் ஒற்றுமையைக் குலைத்து சுய நலனுக்காகப் பிரிந்து நிற்கும் தலைமைகளால் எம் மக்களுக்கு விடிவுகாலம் வருமா?
4. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நம்பி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஏமாந்தார்கள். மேற்கொண்டு மக்களையும் இதுவரை காலமும் ஏமாற்றினார்கள். இனியும் மக்கள் ஏமாறத் தயாரா?
5. ஏமாற்றிய 20 ஆண்டுகள் மக்களாகிய உங்களுக்கு போதுமான காலமாக இல்லாமல் இருந்தால் மீண்டும் அவர்களுக்கே வாக்களியுங்கள்!
6. தொழில் முயற்சிகளுக்கான பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தாத நிலையில் மக்கள் வறுமையின் நிமித்தம் தங்களுடைய காணி பூமிகளை அந்நியர்களுக்கு விற்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்! இந்த நிலை தொடரும் பட்சத்தில் தமிழர் பிரதேசங்களிலும் தமிழர்கள் சிறுபான்மையினராக ஆக்கப்படுவார்கள் என்பதில் ஐயமில்லை.
7. விடுதலைப் போராளிகளும் மக்களும் இறுதிக்கட்ட யுத்தத்தில் பாரிய துன்பங்களுக்கு முகங்கொடுத்து யுத்தம் மௌனிக்கப்பட்டபோது ஓடி ஒளிந்து மௌனம் சாதித்தத் தமிழ் தலைமைகள் பேரழிவுக்குப் பின்னர் சொகுசு வாழ்க்கைக்காக மக்களைப் பகடைக் காயாக்கி வாக்குவேட்டை நடத்தி வெற்றி கண்டதன் பின்பு கோடீஸ்வராகியவர்களுக்கு நீங்கள் வாக்களிப்பீர்களா?
8. மக்களை பீதியூட்டி அங்கே இராணுவம் இங்கே இராணுவம் எல்லாம் இராணுவ மயமாக்கப்படுகின்றது என்ற கதையைக் கூறி தங்கள் வீட்டுக் காவலுக்கு முன்னுக்கு நான்கு பேர் துப்பாக்கியுடன் பின்னுக்கு நான்கு பேர் துப்பாக்கியுடனும் தமது அரசியலை முன்னெடுத்துச் செல்லும் தந்திர அரசியல்வாதிகளின் தரித்திர அரசியலுக்கு இந்தத் தேர்தலிலாவது முடிவு கட்டுவோம்.
9. அபிவிருத்தியும் அரசியல் தீர்வும் ஒன்றோடு ஒன்று சார்ந்து மேம்படுத்தவேண்டும் என்பதனைப் புரியாமல் பணம் பதவி சொந்த நலனை முன்னெடுத்துச் செல்லும் எமது தமிழ் அரசியல்வாதிகளை மக்களாகிய நீங்கள் அடையாளப்படுத்த முடியாமல் இருப்பதற்குரிய காரணங்கள் என்ன?
10. கீர்த்திவாய்ந்த தமிழ் அரசியல் தலைவர்களாலும் பேரழிவைத் தந்த விடுதலைப் போராட்டங்களாலும் சாதிக்க முடியாதவற்றைப் புதுப் புதுக் கட்சிகள் தொடங்கி சாதிக்க முடியும் என்று எம் மக்களை முட்டாள்களாக்கும் அரசியல்வாதிகளை நீங்கள் அடையாளப்படுத்திக் கொள்ளவேண்டும்.

***தமிழ்த் தேசத்தில் இருக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சரியான பலனடையக்கூடிய தூரநோக்குடைய திட்டங்களை நான் வகுப்பேன் என்றும் உங்களுக்கு உறுதிபடக் கூறுகின்றேன்.***



**" உங்கள் வாக்கு உங்கள் உரிமை
சரியான முறையில் வாக்களியுங்கள்! "**

# பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் (விண்ணன்)

X 1 5

தமிழ்த் தேசியமும்
தமிழ்த் தாயும் வாழ்க.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

facebook.com/vinnan05

**உண்மைகள் யாவும் அம்பலத்திற்கு....**

# முஸ்லிம் பிரதிநிதிகளைக் குறைக்க ராஜபக்சக்கள் அரசு சதித்திட்டம்!

## அசாத் சாலி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 24

முஸ்லிம்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்களை குறைக்கும் நோக்குடன் செயற்படும் ராஜபக்சக்களின் அரசாங்கம், இந்த முறை நடைபெறவுள்ள தேர்தலில் இப்பணியைக் கச்சிதமாக முடிப்பதற்கு சில கைக்கூலிகளைக் களமிறக்கியுள்ளதாக மேல்மாகாண முன்னாள் ஆளுநரும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பிரதமர் மஹிந்த தலைமையிலான 52 நாள் அரசாங்கத்தில் விஜயதாச ராஜபக்ச இதுபற்றி பகிரங்கமாகக் கூறியிருந்தார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்னாள் தலைவர் அஷ்ரபின் வேண்டுதலுக்காக ஐந்து வீதமாக மாற்றப்பட்ட விகிதாசார வெட்டுப் புள்ளியை, மீண்டும் 12 வீதத்துக்கு கொண்டு வந்து, முஸ்லிம்களின் அரசியல் பலத்தைத் தகர்க்க வேண்டும் என்றும் விஜயதாச ராஜபக்ஷ கூறியதை, மொட்டு அணியில் களமிறக்கப்பட்டுள்ள இந்தக் கைக்கூலிகள் கவனத்திற் கொள்ளாதமை வேதனையளிக்கிறது.

இந்தச் சதித் திட்டத்தை சட்டமாக்குவதற்கு முன்னர், ஒரு வெள்ளோட்டத்துக்காக ராஜபக்சக்கள் இதைப் பரீட்சித்துப் பார்க்க விரும்பியே, சில முஸ்லிம் கைக்கூலிகளை மொட்டுச் சின்னத்தில் களமிறக்கியுள்ளனர். இவ்வாறானவர்களுக்கு முஸ்லிம்கள் வாக்களிப்பது, முஸ்லிம் சமூகத்திற்குச் செய்யும் துரோகமாகும்.

கடந்த நடாளுமன்றத்தில் முஸ்லிம்களுக்கு இருந்த பலத்திற்கு அஞ்சியே இவர்கள் இச்சதியைச் செய்யத் துணிந்துள்ளனர். இந்த 21 முஸ்லிம் எம்.பிக்களில் ஒருவரைத் தவிர வேறு எவரும் ராஜபக்சக்களின் அணியில் இல்லாதமை பெரிதும் ஆறுதலளிக்கிறது. எனினும், புதிய முகங்களைக் களமிறக்கி எமது சமூகத்தின் வாக்குகளைச் சிதறடிக்கத் தீட்டப்பட்டுள்ள இத்திட்டத்தை, முஸ்லிம்கள் கட்டாயம் தோற்கடிக்க வேண்டும்.

இத் தோல்வியின் ஆரம்பத்திலிருந்துதான் சஜித் தலைமையிலான புதிய அரசாங்கம் அமைக்கப்படவுள்ளது. இழந்துபோன முஸ்லிம்களின் உரிமைகள், எரிக்கப்பட்ட முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள், சூறையாடப்பட்ட முஸ்லிம்களின் சொத்துக்களுக்கு நிவாரணம் பெறுவதற்கும், இதுபோன்ற இன்னல்கள் எமது சமூகத்துக்கு இதன் பின்னர் ஏற்படாதிருப்பதற்கும், சஜித் தலைமையிலான அரசாங்கத்தை உருவாக்கி, முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பலம், நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்களைப்

# விலங்குத்தீவன உற்பத்திகளுக்கு நெல், அரிசி பயன்படுத்தத் தடை

கொழும்பு, ஜூலை 24

விலங்குத் தீவன உற்பத்திக்கு நெல் மற்றும் அரிசியைப் பயன்படுத்த தடை விதித்து வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

நுவகர்வோர் விவகார அதிகார சபையால் நேற்று இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக நாட்டில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் நெல் உற்பத்தியில் வீழ்ச்சியைச் சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் இலங்கைக்கு அரிசியை இறக்குமதி செய்யக்கூடிய முகாந்திரங்களும் தற்போது இல்லாத காரணத்தால்தான் இந்த வர்த்தமானி அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று கருதப்படுகின்றது. (ம)

# மனநலம் பாதிக்கப்பட்ட சிறுமி துஷ்பிரயோகம்

## தம்பதியினர் கைது

மொனராகலை பகுதியில் மனநலம் பாதிக்கப்பட்ட 12 வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் நபர் ஒருவரும், அவரது மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களது உறவினரான பிரதான சந்தேகநபரின் மனைவியே குறித்த சிறுமியை வீட்டிற்கு அழைத்து சென்றார் என்றும், அங்கு சிறுமி பல முறை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

# வேட்பாளரின் வாகனம் மீது தாக்குதல்

பொதுத்தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அதனுடன் தொடர்புடைய வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் புதுமுக வேட்பாளரான முஹம்மது நசீரின் வாகனத்தின் மீது குருநாகலில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குருநாகல் - மல்லவபிட்டிய பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தின் பின்னர் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது இரவு 9.30 அளவில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தாக்குதலில் வேட்பாளரின் வாகனம் சேதமடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

### வடக்குக்கு...

வதே எமது நோக்கம் என்று தெரிவித்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச.

நேற்றுக் கல்முனையில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தமிழில் உரையாற்றினார். அதன்போதே அவர் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

வணக்கம், அஸ்ஸலாமுஅலைக்கும். நாங்கள் சொல்வதை செய்வோம், செய்வதைதான் சொல்வோம். இது உங்களுக்கு நன்றாக தெரியும்.

எமக்கு சிங்களம், தமிழ், முஸ்லிம், மலே, பேகர் என்ற பேதமில்லை. யாழ்ப்பாணம் முதல் அம்பாந்தோட்டை வரை கொழும்பு முதல் கல்முனை வரை எல்லோருக்கும் சமமான அபிவிருத்தி என்பது தான் எமது நோக்கம். என்றார்.

அதேவேளை, ஹோமாகம பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பொன்றில் கருத்து தெரிவித்த மஹிந்த ராஜபக்ச, நான் வடக்குக்கு ஒன்றும் தெற்குக்கு ஒன்றும் கூறும் தலைவனல்ல என்று தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது

அன்று இராணுவத்தினர் இருந்திருக்காவிடின் தற்போது இவ்வாறு தேர்தலொன்றை நடத்துவதற்கு வாய்ப்பு கிடைத்திருக்காது. சஜித் பிரேமதாச தெற்கு மக்களுக்கு தமது உண்மையான கொள்கையை மறைத்துள்ளார். பெரும் தியாகத்தை மேற்கொண்ட தேசத்தவர்கள் என்ற வகையில் இவ்வாறான இரண்டு விதமான கருத்துக்களை வெளியிடுவதைக் கண்டிக்க வேண்டும்- என்றார். (எ)






'13'ஐ மையப்படுத்தி அரசியல் தீர்வுத் திட்டம்

சபையில்
சரவணபவன்

யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சம் இந்த ராஜபக்ஷ ஆட்சியிலே எல்லாம் வஞ்சம். 2015ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ தனது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை மகா சங்கத்தினரிடம் கையளித்து ஆசி வாங்கினார்.

அன்று அவர்கள் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞா பனத்தில் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறையை மேலும் பலப்படுத்தவதற்குரிய அதிகாரங்களை உள்ளடக்கிய வகையிலான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை ஆட்சிப் பீடமேறிய பின்னர் ஆறு மாத காலத்துக்குள் முன்வைப்போம் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாத காலத்துக்குள் இது தொடர்பாக அனைத்து தேசியக் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படும். அனைத்து இலங்கைப் பிரஜைகளுக்கும் நியாயத்தையும் சமத்துவத்தையும் உறுதிசெய்வதற்கான தேசிய நல்லிணக்கக் கொள்கை ஒன்றையும் உருவாக்குவோம் என 2015ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அன்று அப்படிக் கூறிய ராஜபக்சக்கள் இன்று என்ன கூறுகின்றார்கள். இலங்கை ஒரு பௌத்தநாடு. பௌத்தத்துக்கே முதலிடம் என்று தனது பதவிப் பிரமாணத்தின்போது கூறிய ஜனாதிபதி கோத்தாபய இந்த நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களைப் பற்றி ஒரு வார்த்தைகூட உச்சரிக்கவில்லை. தமிழ், முஸ்லிம்களின் வாக்கு எப்போதும் எங்களுக்குத் தேவையில்லை. தனிச்சிங்கள வாக்குகளின் மூலமே தான் அதிகாரத்துக்கு வந்தேன். நான் வந்தது சட்டம், இட்டது கட்டளை என்கிறார்கள்.

13ஆவது திருத்தச் சட்டமாவது மண்ணாங்கட்டியாவது இந்த 13 மட்டுமல்ல 19 ஐயும் ஒழிப்போம் என்று பல்டி அடித்துவிட்டனர்.

இந்தக் குத்துக்கரணம் அடிக்கும் கோமாளிக் குடும்பத்துக்கு காவடி தூக்கிக்கொண்டு ஆடுகின்றனர் அங்கஜன்களும் டக்ளஸ்களும். இவர்களுக்கு நன்றாகவே தெரியும் ராஜபக்ஷ குடும்பத்தின் தில்லுமுல்லுகள். இவர்கள் நாடாளுமன்றம் செல்வதல்ல நோக்கம். தனக்கு இரண்டு கண்களும் போனாலும் பரவாயில்லை கூட்டணிக்கு ஒரு கண்ணாவது போக வேண்டும் என்பதே இவர்களின் நோக்கம். எனவே தேசிய உணர்வு கொண்ட தமிழ் நெஞ்சங்கள் இவர்களை உதறித் தள்ளிவிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றியடையச்செய்ய வேண்டும்.

1 2 3 4 5 6 7 8 9 10

இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# வடக்கின் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் புத்துயிர் பெறவேண்டும்

## வடக்கு ஆளுநர் கவலை

**யாழ்ப்பாணம், ஜூலை 24**

**வடக்கின் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் புத்துயிர் பெறவேண்டும். ஒரு காலத்தில் இந்தப் பிராந்தியம் இலங்கையே திரும்பிப் பார்க்கும் அளவுக்கு புலைமை மிக்கதாக இருந்தது. இன்று கல்வியறிவில் 9ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது – என்று தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர் சாள்ஸ்.**



சித்தன்கேணியில் இது தொடர்பில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு காலத்தில் இந்தப் பிராந்தியமே திரும்பிப் பார்க்கும் அளவிற்கு கல்வியறிவுமிக்க சமூகத்தைக் கொண்டிருந்த எமது வடமாகாணம் கடந்த நாற்பது வருடங்களாக புலம்பெயர்வினூடாகவும் பல்வேறு இடர்காலத் துன்பங்களினூடாகவும் கல்வியறிவில் ஒன்பதாவது மாகாணமாகப் பின்தள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இருந்து நாங்கள் விடுபட வேண்டுமானால் எமது கல்வி நடவடிக்கைகள் மீண்டும் புத்துயிர் பெறவேண்டும். எங்களுடைய மாணவர்களை கல்விபெற ஊக்குவிக்க வேண்டும். இப் பகுதி மக்கள் பல்வேறு வேதனைகளோடும் சுமைகளோடும் வாழ்ந்தவர்கள். மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளோடு தான் இந்த மாணவர்கள் கல்வியைப் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்த உலகிலே நாங்கள் எத்தனை அழகான கட்டடங்களைக் கட்டினாலும் அவற்றினால் கிடைக்கின்ற பயனைவிட ஒரு பாடசாலைக் கட்டடத்தைக் கட்டுகின்றபோது அதனால்கிடைக்கின்ற பயன் அளப்பரியது. ஏனென்றால் அந்தப் பாடசாலைக் கட்டடத்தினூடாக இந்த சமூகத்திலே எதிர்காலத்தினை உருவாக்குகின்ற எத்தனையோ மேதைகளும் கல்விமான்களும் புத்திஜீவிகளும் உருவாகின்றார்கள்.

மற்ற இடங்களோடு ஒப்பிடும்போது இங்கு கல்விக்கான வளவளர்ச்சி குறைவு என்று பெரிதாகச் சொல்ல முடியாவிட்டாலும் ஆசிரியர் பற்றாக்குறை போன்ற சில விடயங்கள் சுட்டிக்காட்டக் கூடியதாக உள்ளன. அதனை நிவர்த்தி செய்வதற்கான செயற்பாடுகளை எனது பிரதம செயலாளரும் கல்விச் செயலாளரும் முன்னெடுத்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள் - என்றார். (ம-27)

# கட்சித் தலைவர் தேர்வுக்கு இரகசிய வாக்கெடுப்பு அவசியம்

## நவீன் திஸநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 24



ஐ.தே. கட்சிக்கான அடுத்த தலைவர் இரகசிய வாக்கெடுப்பின்மூலமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் நுவரெலியா மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளருமான நவீன் திஸநாயக்க தெரிவித்தார்.

கினிகத்தேன பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரகசிய வாக்கெடுப்பு என்பது போட்டியொன்றான போதிலும் அது ஜனநாயக ரீதியிலானதொரு செயற்பாடாகும். கட்சியின் யாப்புக்கு அமைய கட்சி பிளவுபடாதிருக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடே இரகசிய வாக்கெடுப்பு.

2011ஆம் ஆண்டில் ஐ.தே. கட்சியின் பிரதித் தலைவராக இரகசிய வாக்கெடுப்பு முறையிலேயே சஜித் பிரேமதாச தெரிவாகியிருந்தாhர்.

மத்திய வங்கி பிணைமுறி ஊழல் விவகாரம் தொடர்பான அறிக்கையொன்று வெளியாகியுள்ளது. குறித்த விவகாரம் குறித்து விசாரணை செய்ய ஜனாதிபதி விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதில் குற்றவாளிகளாகக் காணப்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு.

புவனேகபாகு மன்னனது காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட அரச மாளிகை இடித்தளிக்கப்பட்டமை மிகப்பெரும் தவறு. அது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு தவறிழைத்தோர் தண்டிக்கப்படவேண்டியது அவசியமாகும் - என்றார். (ம)




# குருபரனின் நீதிக்கான குரலை இல்லாதொழிக்க சதி முயற்சி

## பேரவையைச் சாடுகிறது பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

**கலாநிதி கு.குருபரன் விடயத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை எடுத்த முடிவானது பல்கலைக்கழக சுயாதிபத்தியத்தை மானியங்கள் ஆணைக்குழுவுக்கு தாரை வார்த்துக் கொடுத்துள்ளது. இது நீதியின், நியாயத்தின் குரலை இல்லாதொழிக்கும் செயற்பாடே ஆகும். இவ்வாறு பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையின் முக்கிய பகுதிகள் வருமாறு:

குருபரன் மீதான அழுத்தம் என்பது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவையின் இந்தமுடிவானது பல்கலைக்கழக சுயாதிபத்தியத்தை மானியங்கள் ஆணைக்குழுவிற்கு தாரைவார்த்துக் கொடுக்கும் ஒரு செயற்பாடாக அமைந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவையானது தனதும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினதும் சுயாதிபத்தியத்தை இதற்கு முன்னரும் விட்டுக்கொடுத்திருந்தமை வரலாறேயாகும்.

அத்துடன் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவும் குறித்த முடிவினை தானாக மேற்கொள்ளவில்லை என்பதுடன் கலாநிதி குருபரன் முன்னிலையான வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பிலான வழக்கு ஒன்றின் பின்னணியில் அதில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் தூண்டுதலாலேயே மேற்கொள்ளப்பட்டதும் வெளிப்படையானது. இராணுவம் குருபரன் என்ற ஒருவர் பல்கலைக்கழகத்தில் கடமையிலுள்ளாரா? எனவும் அவர் நீதிமன்றங்களின் ஆஜராகி வழக்காடுகின்றாரா? எனவும் தன்னிடம் கோரியுள்ளதை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஏற்றுக்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுயாதீனத்தையும் பக்கச்சார்பின்மையையும் கேள்விக்குள்ளாக்குவதுடன், கல்வியாளர்களின் கல்விச் சுதந்திரத்தில் (Academic Freedom) கை வைக்கும் ஒரு செயற்பாடும் ஆகும்.

இங்கு பல்கலைக்கழக முறைமைக்குள் மருத்துவம், பொறியியல், கட்டடக்கலை மற்றும் சட்டம் போன்ற பாடங்களை கற்பிக்கும் கல்வியாளர்களுக்கு பல்கலைக்கழகங்களுக்கு வெளியில் உள்ள நிறுவனங்களில் அவர்களின் துறை மற்றும் துறை சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடவும் மற்றும் அரச, சமூக நிறுவனங்கள் மற்றும் தொழில்முறை நிறுவனங்களுடன் கலந்தாலோசிக்கவும் இதுவரையிலும் எவ்வித மட்டுப்பாடுகளும் இருந்ததில்லை என்பதும் இப்போதும் தனியே சட்டதுறை சார்ந்தோருக்கே கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கலாநிதி குருபரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தனியே கற்றல்கற்பித்தல் பட்டம் வழங்கல் செயற்பாடுகளுடன் மட்டும் நின்றுவிடாது அதனையும் தாண்டி மாணவர்கள் நடைமுறை சூழலுக்கு ஏற்ப செயற்படவும், சிந்தனையா ளர்களாகவும், தர்க்கரீதியில் சிந்தித்து விவாதிக்கவும், செயற்படவும், ஆராய்ந்து முடிவெடுக்கவும் களங்கள் அமைத்துக் கொடுத்ததோடு வழிகாட்டியும் நின்றார். மேலும் பல சமூக நலன் சார் வழக்குகளில் முன்னிலையாகி நியாயத்தை நிலைநிறுத்தியுமுள்ளார்.

இவ்வாறான முற்போக்கு செயற்பாட்டாளரான கலாநிதி குருபரன் பதவி விலகுமளவிற்கு வழங்கப்பட்ட நெருக்குதல்கள், அது பல்கலைக்கழகம் சார்ந்ததாகவோ, பேரவை சார்ந்ததாகவோ, மானியங்கள் ஆணைக்குழு சார்ந்ததாகவோ, இல்லையெனில் அரசு சார்ந்ததாகவோ, எதுவாயினும் ஒட்டுமொத்தத்தில் அவர் முன்னிலையான வழக்கின் அடிப்படையினதே. அது காணாமல் போன பொதுமக்கள் தொடர்பிலான நியாயம் கோரும் செயற்பாட்டின் அடிப்படையினதே. இது என்பதே எமது நிலைப்பாடு.

எனவே கலாநிதி குருபரனுக்கு நியாயம் கிடைப்பதற்கு ஒன்றிணைந்து குரல் கொடுப்போம் - என்றுள்ளது. (ரி3)



## மன்னாரில் 90 வீத வாக்காளர் அட்டைகள் விநியோகம்

மன்னார், ஜூலை 24

மன்னார் மாவட்டத்தில் இதுவரை 90 வீதமான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளர் ஜெ.ஜெனிற்றன் தெரிவித்துள்ளர்.

பொதுத்தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் 88ஆயிரத்து எண்ணூற்று 42பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி1-213)

## மாணவியிடம் சங்கிலி பறிப்பு!

முல்லைத்தீவு, ஜூலை 24

வீதியால் சென்ற பாடசாலை மாணவியிடம் சங்கிலி பறித்த சம்பவம் முல்லைத்தீவு முள்ளியவளை 3 ஆம் வட்டாரப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் மாலைநேர வகுப்பு முடித்து மாணவி ஒருவர் வீடு திரும்பிக்கொண்டிருந்த போது, முள்ளியவளைக் கிராமத்தில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த வழிப்பறி கொள்ளையன் ஒருவன் மாணவி அணிந்திருந்த ஒரு பவுண் தங்கச் சங்கிலியினை அறுத்துச் சென்றுள்ளான். அவசரத்தில் கொள்ளையன் தனது தலைக் கவசத்தைத் தவறவிட்டுள்ளான்.

அதே கொள்ளையன் வேறொரு பகுதியில் யுவதி ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுக்க முற்பட்ட வேளை அந்த யுவதி கூக்குரலிடவே கொள்ளையன் தப்பிச் சென்றுள்ளான்.

இச்சம்வம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனப் பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரி வித்துள்ளனர். (ரி1-19)

## வாக்களிக்கச் செல்வோருக்காக மேலதிக போக்குவரத்து சேவை

கொழும்பு, ஜூலை 23



பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கு மக்கள் சொந்த ஊர்களுக்குச் செல்வ தற்காக இலங்கைப் போக்குவரத்துச் சபை, தனியார் மற்றும் ரயில் சேவைகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பயணிகள் போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஜூலை மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகும் நீண்ட நாள் விடுமுறையுடன் இந்தப் போக்குவரத்துச் சேவை அதிகரிப்பு இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைப் போக்குவரத்து பஸ் சேவை ஆகக்கூடுதலான பஸ்களை இதற்காகச் சேவையில் ஈடுபடுத்தவுள்ளது. தனியார் துறையினரும் மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்தவுள்ளனர்.

சுமார் 600 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. தேவைக்கு அமைவாகப் பயண சேவைகளை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எந்தவித வருமானத்தையும் எதிர்பார்க்காமல் சேவைகள் முன்னெடுக்கப்படும். ரயில் சேவைகளையும் அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. விசேடமாக அனுராதபுரம், மட்டக்களப்பு, கண்டி, பதுளை, வெலிகந்த வரையில் மேலதிக ரயில் சேவைகளை ஈடுபடுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (ரி1)

## 40 மெற்றிக் தொன் நெல் இதுவரை அரசு கொள்வனவு

கொழும்பு, ஜூலை 24

அரசாங்கம் இதுவரை 40 மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்துள்ளது என்று நெற் சந்தைப்படுத்தும் சபை தெரிவித்துள்ளது. அதிகூடிய நெல் விளைச்சல் அம்பாறை மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது என்று அதன் தலைவர் கலாநிதி ஜடால் மானப்பெரும தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நெற்சந்தைப்படுத்தல் அதிகார சபையின் ஊடாக நெற்கொள்வனவு நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 40 தொன் வரை நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. கூடுதலாக அம்பாறை மாவட்டத்தில் இருந்தே கொண்டுவரப்பட்டுள்ளது. குருநாகல், மட்டக்களப்பு முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் நெற்கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த பெரும்போகத்தில் பின்பற்றப்பட்ட நடைமுறைகளைப் போன்றே தற்போதும் முன்னெடுக்கப்படு கின்றது. உலர வைத்த நெல் ஒரு கிலோ ஐம்பது ரூபா என்ற அடிப்படையில் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கொள்வனவு செய்யப்படுகின்றது. ஈரத் தன்மையுடன் காணப்படும் நெல் அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் பிரதிநிதிகளின் ஊடாக 44 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படுகின்றது. அதேபோன்று ஒவ்வொரு பிரதேசங்களிலும் நெற் கொள்வனவு நடவடிக்கைகளை முன்னெடுத்து நெற்சந்தைப்படுத்தும் அதிகார சபையின் களஞ்சிய சாலைகளுக்கு கையளிக்கும் செயற்பாடு முன்னெடுக் கப்படுகின்றது. இவற்றில் எவ்வித மாற்றங்களும் இல்லை. கடந்த வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட விலைக்கே கொள்வனவு செய்யப்படுகின்றது. விசேடமாக உர மானியத்தைப் பெற்றுக் கொண்டு ஒரு ஹெக்டயாருக்கும் கூடுதலாக நெற் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளிடம் இருந்து குறைந்தபட்சம் ஆயிரம் கிலோ கிராம் நெல்லை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். (ரி1)

## மகா சங்கு முழுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 24

நாவற்குழி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மகா சங்கு முழுக்கு நாளை 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

கடந்த 2ஆம் திகதி பெருஞ்சாந்திப் பெருவிழாவுடன் ஆரம்பமாகி தொடர்ந்து மண்டலாபிசேகம் இடம்பெற்று வந்த நிலையில் நாளை மகா சங்கு முழுக்கு இடம்பெறவுள்ளது. (ச)

# டிஜிட்டல் சான்றிதழில் இனம் அழிக்கப்படாது

யாழ்ப்பாணம், ஜுலை 24

புதிய டிஜிட்டல் பிறப்புச் சான்றிதழில் பெற்றோரின் இனம் தொடர்பான விபரங்கள் தொடர்ந்தும் இருக்கும் என்று பதிவாளர் நாயகம் திணைக்களம் நேற்று அறிவித்தது.

முன்னதாக நேற்றுமுன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்த பதிவாளர் நாயகம் திணைக்களம், புதிய டிஜிட்டல் சான்றிதழில் பெற்றோரின் திருமணம் மற்றும் இனம் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்படாது எனத் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் மேற்படி நிலைப்பாட்டில் இருந்து தற்போது அந்தத் திணைக்களம் மாற்றம் செய்துள்ளது. (ம)

# ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களினது அலைபேசிகளுக்கு தவறான படங்கள்!

## வடமாகாண அதிபர் சங்கம் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஜூலை 24**

**லொக் டவுன் காலத்தில் இணையக் கல்வித் தொலைபேசி இலக்கங்களைத் திருடி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அதிபர்களுக்குத் தவறான ஒளிப்படங்கள் அனுப்பப்பட்டது என்று வடமாகாண அதிபர் சங்கத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

**யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் தலைவர் வே.த.ஜெயந்தன் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை சூம் மற்றும் வைபர் ஊடாக முன்னெடுத்திருந்தோம். அந்த மூன்று மாத காலத்திலே அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் கல்வி நலன்கருதி குறித்த செயலிகளின் ஊடாக கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்தக் காலப் பகுதியிலும் அதன் பின்னரும்கூட சில அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரது அலைபேசி இலக்கங்கள் திருடப்பட்டு அவற்றுக்குத் தவறான ஒளிப்படங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

யாரோ சில விஷமிகளின் செயற்பாட்டால் பாதிக்கப்பட்டவர்கள் மிகுந்த மன உழைச்சலில் உள்ளனர். அவர்களால் ஆசிரியத் தொழிலின் மகத்துவம் பாதிக்கப்பட்டுள்ளது - என்றார். (ம)

# கூட்டமைப்பின் தோல்வி தமிழ் இனத்தின் வீழ்ச்சி

## மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் கோவிந்தன் கருணாகரம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோற்கடிக்கப்பட்டால் அது ஒட்டுமொத்த தமிழினத்தின் தோல்வியாகவே அமையும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'மட்டக்களப்பு மாவட்டத்தில் 38 குழுக்கள் ஊடாக 304 வேட்பாளர்கள் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். இதில் பல கட்சிகளும் வேட்பாளர்களும் சுயேச்சைக் குழுக்களும் பேரினவாத சக்திகளினால் இங்கு இறக்கிவிடப்பட்டுள்ளார்கள் என்பது வெளிப்படையான உண்மையாகும். தமிழர்களின் வாக்குகளைப் பிரிக்கவேண்டும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைக்கும் ஆசனங்களைக் குறைக்கவேண்டும் என்பதற்காகவே இவர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலத்தில் அரசாங்க அதிகாரிகளை மிகவும் கேவலமான முறையில் விமர்சித்த அம்பிட்டிய சுமனரத்ன தேரர்கூட மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுகின்றார் என்றால் அது தொடர்பாக தமிழ் மக்கள் சிந்திக்கவேண்டும்.

தமிழ் மக்களின் அரசியல் குரலாக இருக்கவேண்டும் என்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. முன்னர் இயக்கங்களிடையே பல முரண்பாடுகள் இருந்தாலும் கடந்தகால கசப்பான சம்பங்களை மறந்து ஒற்றுமையாக தமிழ் மக்களுக்காகப் போராடுவோம் என்ற ரீதியில் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

அன்று தொடக்கம் இன்றுவரையில் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக, தமிழ் மக்களின் குரலாக, தமிழ் மக்களுக்கு இன்னல் நேரும்போது அதனைத் தட்டிக்கேட்கும் சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே செயற்படுகின்றது - என்றார். (ம)

# நாவற்குழி சித்திர விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேக மண்டலாபிஷேக பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், ஜுலை 24

நாவற்குழி சித்திர விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேக மண்டலாபிஷேக பூர்த்தி விழா நாளை சனிக்கிழமை 1,008 சங்காபிஷேகத்துடன் நிறைவு பெறவுள்ளது.

மாலை வைரவர் பொங்கல் இடம்பெறும் என்றும் அனைத்து அடியார்களும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஆலயத்திற்கு வந்து அருள் பெறுமாறும் ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ம-159)

# பிரிட்டனில் கவனவீர்ப்பு

கொடிகாமம், ஜுலை 24

கறுப்பு ஜுலைக் கலவரத்தைக் கண்டித்து பிரிட்டனில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முன்பாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் கறுப்பு ஜுலைக் கலவரத்தில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழர்கள் நினைவுகூரப்பட்டனர்.

அத்தோடு தமிழ் மக்களுக்கு எதிரான இனவழிப்புக்கு நீதி வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (ம)




# யாழில் பல கோவில்களில் நேற்று தேர்த் திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், ஜுலை 24

யாழ்ப்பாணத்தில் பல கோவில்களில் நேற்றுத் தேர்த் திருவிழாக்கள் பக்திபூர்வமாக நடைபெற்றன.

சுகாதார நடைமுறைகளுக்கு அமைய தேர்த் திருவிழாக்கள் நடைபெற்றன. அரியாலை பிரப்பங்குளம் நாச்சியம்மன் கோயில், சட்டநாதர் சிவன் கோவில், கல்வியங்காடு இலங்கநாயகி அம்மன் கோவில், கோப்பாய் முத்துமாரி அம்மன் கோவில் உட்பட இன்னும் பல கோவில்களில் வருடாந்தத் திருவிழாக்களின் தேர்த் திருவிழாக்கள் நேற்று நடைபெற்றன. இன்று வெள்ளிக்கிழமை ஆடிப்பூரம். இன்று தீர்த்தத் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. (து-17)

# சிறுவர்களை தடுப்புக் காவலில் தடுத்துவைக்க அனுமதிக்கேன்!

## வடக்கு ஆளுநர் உறுதி

**யாழ்ப்பாணம், ஜூலை 24**
**“சிறுவர்களை தடுப்புக் காவல் இல்லங்களில் தடுத்து வைக்க நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன். ஏனெனில் அவ்வாறு தடுத்து வைத்தல், சிறைக்குள் அடைத்தல் என்பன சிறுவர்களை அதிக மன உளைச்சலுக்கு உள்ளாகி தவறான வழியில் பயணிக்க வைக்கக் கூடும் ”என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எம்.எம் சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**



அச்சுவேலி செல்வநாயகபுரம் பகுதியில் அரச சான்று பெற்ற பாடசாலையின் தடுப்புக்காவல் இல்லம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
“12 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்கள் குற்றங்கள் செய்தால், அவர்கள் நீதிமன்ற நடவடிக்கையின் பொருட்டுத் தடுப்புக்காவல் இல்லத்தில் தடுத்து வைக்கப்படுவார்கள். ஆனால் சிறுவர்களை இங்கு தடுத்து வைப்பதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். சிறுவர்கள் தவறுகளை உணர்ந்து செய்வதில்லை. எது சரி, எது பிழை என்று தெரியாத நிலையிலேயே அவர்கள் தவறு செய்கிறார்கள். இவ்வாறான இல்லங்களில் தடுத்து வைத்தல், சிறைகளுக்குள் அடைத்தல் என்பன அவர்களை அதிக மன உளைச்சலுக்கு உள்ளாக்குவதுடன், எதிர்காலத்தில் அவர்களை அதிதீவிர வாதப் போக்குடையவர்களாக மாற்றக்கூடிய சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்துகிறது. சிறுவர்களை சிறுவர்களாகக் கையாள வேண்டிய கடமை அரச அதிகாரிகளுக்கு உள்ளது ” என்றார்.
இந்தத் தடுப்புக்காவல் இல்லம் மாகாணசபைக்கு குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ், மூன்று மாடிக் கட்டடங்களாக கட்டப்பட்டுள்ளன.
சிறு தண்டனைக்கு உள்ளானவர்கள் மற்றும் நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளுக்கு உட்பட்ட சிறுவர்களைத் தடுத்து வைத்து மீண்டும் அவர்களைச் சிறைச்சாலை வாகனத்தின் மூலம் நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லும் பொருட்டு இந்த இல்லம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி1-25)

---

### அவளுக்கு ஒரு வாக்கு;

# தேர்தல் பிரசாரம் யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
அவளுக்கு ஒரு வாக்கு எனும் தொனிப்பொருளில் பெண் வேட்பாளர்களுக்கான வாக்கு சேகரிக்கும் பிரசாரப் பணி யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியுள்ளது.
வடமாகாணத்தைச் சேர்ந்த பொது அமைப்புக்களில் அங்கம் வகிக்கும் பெண்களின் கூட்டிணைவில் இந்தப் பிரசாரப்பணிகள் ஆரம்பமாகியுள்ளன. இப் பிரசாரப் பணி குறித்து செயற்பாட்டாளர்களான எஸ். தீபா, ஜ.நாகரஞ்சினி, எஸ்.சஹானா மற்றும் லயன் ஆனந்தி ஆகியோர் தெரிவித்துள்ளதாவது;
பெண்கள் அரசியலில் ஈடுபடல் வேண்டும். எமது உரிமைகள் குறித்து பெண்களால் தான் பேச முடியும். எந்தக் கட்சி என்று நாம் குறிப்பிட விரும்பவில்லை. கட்சிகளுக்கு அப்பால் ஆளுமையான கெட்டித்தனமுடைய பெண்களை நாம் தான் தெரிவு செய்ய வேண்டும். அந்தவகையில் மூன்று விருப்பு வாக்குகளில் ஒரு வாக்கை மட்டும் பெண்களுக்கு வழங்குவதனூடாக பெண் பிரதிநிதித்துவத்தை அங்கீகரிக்கச் செய்வோம். இதனைத் தான் நாம் அனைத்து பெண்களிடமும் கோரி நிற்கின்றோம் எனத் தெரிவித்தனர்.
வீடுகள் தோறும் செல்லும் இவர்கள் பெண் பிரதிநிதித்துவத்தின் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றனர்.
இச் செயற்பாடுகள் கொக்குவில், யாழ்ப்பாணம், நாவாந்துறை ஆகிய இடங்களில் இடம்பெற்றுள்ள மையுடன் மன்னார், வன்னி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இது குறித்து தெருவெளி நாடகங்ளை மகாலட்சுமி குருசாந்தன் தலைமையிலான மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் செயல்முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி2-27)

---

# கூரை பிரித்து நகை திருட்டு

அச்சுவேலி, ஜூலை 24
வீட்டில் உள்ளவர்கள் சுபநிகழ்வு ஒன்றுக்காகச் சென்றவேளை, வீட்டின் கூரையைப் பிரித்து உள்ளே நுழைந்த திருடர்கள் 2 பவுண் நகை, 2 கமரா என்பவற்றைத் திருடிச்சென்றுள்ளனர். இந்தத் திருட்டுச் சம்பவம் வளலாய் வடக்கு பகுதியைச் சேர்ந்த பெற்ரீரியர் நெல்சன் என்பவரது வீட்டிலேயே நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.
பருத்தித்துறை பகுதியில் உள்ள உறவினர் ஒருவரின் சுப நிகழ்வுக்காக வீட்டில் உள்ள அனைவரும் சென்றுள்ளனர் . நிகழ்வு முடிந்து அவர்கள் இரவு 9:30 மணியளவில் மீண்டும் வீட்டுக்கு வந்தபோது கூரை பிரித்து நகையும் கமராவும் திருடப்பட்டமை தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.
மேலதிக விசாரணைகளை அச்சுவேலி குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-25)

---

# ஆலயப் பொங்கலை அரசியலாக்காதீர்!

முல்லைத்தீவு, ஜூலை 24
முல்லைத்தீவு, பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயத்தின் பொங்கல் விழா நாளை ஆடிப்பூர நன்னாளில் இடம்பெறவுள்ளது. இந்தப் பொங்கல் விழாவை அரசியல் மயப்படுத்தவேண்டாம் என பிரதேச அரசியல்வாதிகளிடம், ஆலய நிர்வாகத் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.
அத்துடன், பொங்கல் விழாவில் சுகாதார நடைமுறையைப் பேணி, 50 பேர் மாத்திரமே கலந்துகொள்ள, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் அனுமதியளித்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். நாளை அதிகாலை 3 மணிக்கு கொக்குத்தொடுவாய் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து மடைப்பண்டம் எடுத்து வரப்பட்டு, வழிபாடுகள் இடம்பெறவுள்ளன . (அ)

---

# பாடசாலைகளுக்கு புதிய சுற்றறிக்கை

கொழும்பு, ஜூலை 24
எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மீண்டும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், மாலை 3.30 வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. அந்தந்த வகுப்புகளுக்கான ஆசிரியர்களைத் தவிர வேறு ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு வர வேண்டிய அவசியமில்லை எனவும் இந்த விதிகளுக்கான புதிய சுற்றறிக்கை இன்று அல்லது நாளை வெளியிடப்படவுள்ளதாகவும் அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
இதேவேளை, எதிர்வரும் திங்கட்கிழமை 11, 12 மற்றும் 13ஆம் வகுப்புகளுக்கான கற்றல் நடவடிக்கைகளே ஆரம்பிக்கப்படவுள்ளன. அத்துடன் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி ஏனைய அனைத்து வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

---

# கிளிநொச்சியில் வெடிபொருள்கள்



கிளிநொச்சி, ஜூலை 24
கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணைப் பகுதியில் 11 வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் அந்தப் பகுதியில் சந்தேகத்துக்கிடமாக பொருள்கள் காணப்படுவது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைவாக அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.
அங்குள்ள பற்றை ஒன்றில் காணப்பட்ட பொதி ஒன்று தொடர்பில் சோதனையிடுவதற்காக கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் அனுமதி பெறப்பட்டதை அடுத்து நேற்றுக் காலை இந்த விசேட அதிரடிப்படையினர் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். இதன்போது பை ஒன்றிலிருந்து 11 வெடிபொருள்கள் மீட்கப்பட்டன. சம்பவம் தொடர்பான விசாரணைகளை தர்மபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ரி2-6)

---

# கஞ்சாவுடன் இருவர் கைது

கிளிநொச்சி, ஜூலை 24
பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுத்துறைப் பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இவர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி3-316)

## தமிழர்களின் நலன்கள்

# பறிபோகப்போகிறதா? தக்கவைக்கப்படுமா?

### 5ஆம் திகதி புள்ளடியிலேயே தங்கியுள்ளது என்கின்றார் சாந்தி சிறீஸ்கந்தராஜா

**வவுனியா, ஜூலை 24**

**தமிழர்களின் நலன்கள் பறிபோகப் போகின்றதா அல்லது தக்க வைக்கப்படுமா? என்பது எதிர்வரும் 5ஆம் திகதி மக்கள் இடம் போகும் புள்ளடியில் தங்கியுள்ளது என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி தேர்தல் தொகுதியின் வேட்பாளர் சாந்தி சிறீஸ்கந்தராசா.**



வவுனியா - கனகராயன்குளத்தில் நேற்று இடம் பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் இதய சுத்தியுடன் மக்களுக்குச் சேவை செய்துள்ளேன். வன்னித் தேர்தல் தொகுதியில் உள்ள மூன்று மாவட்டத்திற்கும் சரியான முறையில் சேவைகளைப் புரிந்துள்ளேன்.

அத்துடன் எனது நிதி ஒதுக்கீடுகள் மற்றும் நான் விசேடமாக கேட்டுப்பெற்றுக்கொண்ட நிதி ஒதுக்கீடுகளில் சரியாக அரைவாசி நிதியை வவுனியா மாவட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்திருந்தேன். ஏனெனில் உங்களால் தெரிவு செய்யப்பட்டு கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்றம் சென்ற சிவசக்தி ஆனந்தன் இவ்வாறான நிதிகளைப் பெற்று உங்களுக்குத் தரக்கூடியவகையில் தன்னைத் தக்க வைத்துக் கொள்ளவில்லை. கூட்டமைப்பில் இருந்து வெளியேறிவிட்டார்.

இன்று அவர் பிடித்த கொப்பும் இல்லை மிதித்த கொப்பும் இல்லை என்ற நிலை இருக்கும்போது வவுனியா மாவட்டத்திற்கென ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இல்லாமல் போய்விட்டது. அதன் காரணமாக வவுனியா மாவட்டத்திற்கு அதிகளவு நிதியைச் செலவு செய்திருந்தேன்.

கொழும்பு மாவட்டத்திற்கு அடுத்ததாக அதிகப்படியான வேட்பாளர்கள் வன்னியில் இறக்கி விடப்பட்டுள்ளனர். இதில் வைத்தியர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், அரச உத்தியோகத்தர்கள் மாற்றுக்கட்சிகளில் களமிறங்கியுள்ளமை பெரும் வேதனையான விடயம்.

எங்களுடைய நிலங்கள் பறிபோய்க்கொண்டிருக்கின்றன. இன்னும் நிலங்களைப் பறித்தெடுப்பதற்கு அரசு எழுத்துருவில் பல சுற்றுநிருபங்களை உருவாக்கி வைத்துள்ளது. அந்த எழுத்துருக் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்கு இந்த அரசு தேர்தல் களத்தினை உருவாக்கி வைத்துள்ளது.

6 பேரில் 3 பேரே வெல்வார்களானால் எங்களுடைய நிலங்கள் பறிபோவது சிங்கள குடியேற்றங்கள் இடம்பெறுவது எவராலும் தடுக்கமுடியாது. இரண்டு இலட்சத்து இருபதாயிரம் தமிழ் வாக்காளர்களைக் கொண்ட வன்னியில் நாங்கள் ஒருமித்து வீட்டுச்சின்னத்திற்கு வாக்களிப்போமானால் வன்னியில் மாற்றுக்கட்சியினர் எவரும் வெல்ல முடியாது.

6 பேரையும் தமிழனாக வென்றெடுக்கக்கூடிய கைங்கரியம் உங்கள் கைகளில் உள்ளது. எங்கள் நிலங்கள் தக்கவைக்கப்படபோகின்றதா? ஆக்கிரமிக்கப்படபோகின்றதா என்பது 5ஆம் திகதி நீங்கள் இடும் புள்ளடியில் உள்ளது - என்றார்.

(ம-110)

# அனைத்து ஓய்வூதியர்களுக்கும் அக்ரகார காப்புறுதிச் சலுகை!

அரச சேவையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஆறு இலட்சம் பேர் வரையிலான சகல ஓய்வூதியப் பெறுநர்களுக்கும் 'அக்ரகார' காப்புறுதிக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளும் சலுகையை வழங்குவது தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் முன்வைக்கப்பட்ட யோசனை கடந்த 22ஆம் திகதி இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

குறித்த 'அக்ரகார' காப்புறுதிக் கொடுப்பனவுச் சலுகை, 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றவர்களுக்கு மாத்திரமே வழங்கப்படும் வகையில் இதுவரை காலமும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இதனால் குறித்த திகதிக்கு முன்னர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்று ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெற்றுவரும் 90 வீதமான ஓய்வூதியப் பெறுநர்களுக்கு குறித்த சலுகை கிட்டாத நிலையைக் கருத்தில் கொண்டு தற்போது பிரதமரால் முன்வைக்கப்பட்ட சகல ஓய்வூதியப் பெறுநர்களுக்கும் அக்ரகார காப்புறுதிக் கொடுப்பனவுச் சலுகையை வழங்கும் யோசனைக்கு அமைச்சரவையின் ஒப்புதல் கிட்டியுள்ளது.

ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவில் காணப்படும் முரண்பாடுகளை நேர் சீர் செய்யும் வகையில் சகல ஓய்வூதியர்களுக்கும் அக்ரகார காப்புறுதித் திட்ட உறுப்புரிமை வழங்கி அதன் மூலமான சலுகைகளை அனுபவிக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் விதத்தில் குறித்த காப்புறுதித் திட்டத்திலும் பொருத்தமான மாற்றங்களை மேற்கொள்ள அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அந்த வகையில் சகல அரச துறை ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியப் பெறுநர்களுக்கும் தரமான வைத்திய வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் விசேட சுகாதார சேவை நடைமுறையொன்றை அறிமுகப்படுத்துவது குறித்து அமைச்சரவை கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# குடிதண்ணீர் வழங்குக: பொதுமக்கள் கோரிக்கை

கொடிகாமம், ஜூலை 24

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு செல்லும் மக்கள் தண்ணீர் வசதி இல்லாமல் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இதனால் அங்கு குடிதண்ணீர் வசதி செய்யப்படவேண்டும் என்று சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் அ.நிமலரோகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்த அமர்விலேயே நிமலரோகனால் மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையம் சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்டது எனவே நகர சபையுடன் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. (ம-159)

பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



மாம்பழம் தமிழ்த் தேசியத்தின் குறியீடு
மாம்பழம் தமிழ்ச் சூழலின் அடையாளம்
பொ. ஐங்கரநேசன்
தமிழ்த் தேசியத்தினதும் சூழலியத்தினதும் உறுதிப்பாடு



# டிப்பர் விபத்து சிப்பாய் காயம்

கொடிகாமம், ஜூலை 24
வேகக்கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் மோதியதில் சிப்பாய் ஒருவர் உட் பட இருவர் காய மடைந்தனர். பிள்ளையார் கோயில் ஒன்றும் சேதமடைந் தது.
இந்தச் சம்பவம் தச்சன் தோப்பு சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் உள்ள தெரு வடிப் பிள்ளையார் கோயி லடியில் நேற்று வியாழக்கி ழமை காலை 6 மணிக்கு இடம்பெற்றுள்ளது.
நாவற்குழி தச்சன்தோப்பு பகுதியில் இருந்து டிப்பர் வாகனம் ஒன்று மண் ஏற்றி யபடி வந்துகொண்டிருந்தது. அதில் வாகனச் சாரதியும், நாவற்குழி படைமுகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவரும் பயணித்துள்ளனர்.
அப்போது எதிர்பாராதவித மாக வாகனத்தின் முன் சக் கர டயர் வெடித்ததால், வேகக் கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் அருகிலுள்ள பிள்ளையார் கோவில் மடப்பள்ளி மண்ட பத்துடன் மோதி விபத்துக்குள் ளானது . இதனால் ஆலயப் பகுதியும் சேதமடைந்துள் ளது. அத்தோடு வாகனத்தில் பயணித்த இருவரும் காயம டைந்தனர்.
சாரதி யாழ்.போதனா வைத் தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார். காயமடைந்த சிப்பாயை சிகிச்சைக்காக படையினர் அழைத்துச் சென் றுள்ளனர்.
இதேவேளை, இந்த விபத்து காலை 6 மணிக்கு இடம் பெற்றவுடனேயே, பொதுமக் கள் சாவகச்சேரிப் பொலி ஸாருக்குத் தெரியப்படுத்தி இருந்தனர். இருப்பினும் 8.45 வரை பொலிஸார் சம் பவ இடத்துக்குச் சென்றிருக் கவில்லை என்பது குறிப்பி டத்தக்கது. (அ-159)

# 70 வீதமானோர் வாக்களிப்பராம்!

## மஹிந்தவின் நம்பிக்கை இது

**கொழும்பு, ஜூலை 24**
**''எதிர்வரும் பொதுத்தேர்தலில் 70 சதவீதத்துக்கும் அதிக மாக வாக்குகள் பதிவாகும் என்று நம்புகிறேன்'' இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

அஞ்சல் மூல வாக்களிப்பில் அதிகளவு வாக்குகள் பதிவாகியிருப்பதால், 70 வீதத் துக்கும் அதிகமான வாக்குகள் பதிவாகும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார். இலங்கையில் ஜேர்மனியின் தூதுவராகப் பணியாற்றிய ஜோர்ன் ரொட், பணிக்காலம் நிறைவுற்று தாயகம் செல் லவுள்ளார். இதனால் நேற்றுக்காலை அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவை, ஜோர்ன் ரொட் சந்தித்து பிரியா விடை பெற்றுக் கொண்டார். அதன்போதே மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள் ளார். " கொரோனாத்தொற்றுக் காரணமாக இம்முறை பொதுத்தேர்தலில் வாக்களிப்பு வீதம் சடுதியாகக் குறையும் என்று பல அமைப்புக்களும் கருத்துக் கூறிவருகின் றன. ஆனால் நிலைமை அப்படியல்ல. இப்போது நடந்து முடிந்துள்ள தபால்மூல வாக்களிப்பில் கணிசமானோர் வாக்களித் துள்ளனர்.
இதனடிப்படையில் இம்முறை நிச்சயமாக நாடளாவிய ரீதியில் 70 சதவீதத்துக்கும் அதிகமானோர் வாக்களிப்பர் என நம்புகி றோம்" என்று அவர் தெரிவித்துள்ளார். (அ)

# பொதுத்தேர்தல் தொடர்பில் விசேட கலந்துரையாடல்

கொழும்பு, ஜூலை 24
நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர் பில் மாவட்ட செயலாளர்கள் மற்றும் உதவி தேர்தல் ஆணையாளர்களுக்கு இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று தேர்தல்கள் ஆணைக்குழுவில் எதிர்வரும் 26 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. தேர்த லுக்கு இன்னும் சில தினங்களே உள்ள நிலையில் குறித்த கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது.
விசேட கலந்துரையாடலின் போது, தபால் மூல வாக்களிப்பு சதவீதம் தொடர்பில் ஆய்வொன்று மேற்கொள்ளப்படவுள்ளது. தேவையேற்படின் தபால்மூல வாக்களிப் பிற்காக மேலும் ஒரு தினத்தைப் பெற்றுக் கொடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். அரச ஊழியர்கள் கட்டாயமாக தேர்தல் கடமைகளில் பங்கேற்க வேண்டும் என வும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ரி1)

# சரவணபவனின் வெற்றியைத்தான் பறைசாற்றுகின்றன பல இடங்களும்!

## காரைநகர் தவிசாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 24
நல்லூர், நவாலி, வட்டுக்கோட்டை, கோப்பாய், தென்மராட்சி மற்றும் காரைநகர் உள்ளிட்ட யாழ்ப்பாண மாவட்டம் சரவணபவனின் வெற்றி யைப் பறைசாற்றி நிற்கின்றன என்று காரை நகர் பிரதேச சபைத் தவிசாளர் வி.கேதீஸ்வரதாஸ் தெரி வித்தார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் வெற் றிக்கான தேர்தல் பரப்புரைக்கூட்டம் காரைநகர் பிரதேச சபை உப தவி சாளர் க.பாலச்சந்திரன் தலைமை யில் காரைநகரில் நடைபெற்றது.
அதில் உரையாற்றுகையில், தவிசா ளர் வி.கேதீஸ்வரதாஸ் மேலும் தெரி வித்ததாவது:
அமைச்சுப் பதவிகள் பெறாது நாடா ளுமன்றம் சென்று வெளியே நிற்பது என்ற விடயம் மலையேறிப்போய் விட்டது.
சிங்கள பெரும்பான்மை அரசுடன் இணைந்த வகையில் முஸ்லிம் மற் றும் மலையக சிறுபான்மை கட்சிகள் அமைச்சுப்பதவியை பெற்றுவிட்டு எமக்கெதிரான கருத்துக்களை முன் வைத்தே அவர்களின் வரலாறு எழு தப்படுகின்றது.ஆனால் நாம் கூட்ட மைப்பு சார்பாக அதிக ஆசனங்க ளைப்பெற்றுவிட்டு மீண்டும் வேதா ளம் முருங்கை மரத்தில் ஏறுவது போன்று வெளியே நிற்பது எம் போன்றவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கிறது.
எனவே உண்மையான அரசியல் இலக்கு அபிவிருத்தி தொடர்பில் ஆராய வேண்டுமெனில் தீர்மானம் மிக்க நாடாளுமன்ற உறுப்பினர்க ளாக மாறவேண்டும். எனவே அன் பான தமிழ் மக்களே எல்லோரும் ஒன்றையே சிந்தித்து வீட்டுக்கட்சி யினரை வெற்றிபெறச்செய்து 21 ஆம் நூற்றாண்டில் இமாலய சாதனை படைத்திட வீட்டை நினை யுங்கள்- என்றார். (த-50)





# மதத் தலைவர்களை சந்தித்த கூட்டமைப்பின் வேட்பாளர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 24
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் கிளி நொச்சி மாவட்ட வேட்பாளர்கள் நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமி மற்றும் யாழ்ப்பாண ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண் டகையை ஆகியோரை அவர்களின் இடங்களில் நேற்று வியாழக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடி னர்.
கூட்டமைப்பின் வேட்பாளரான தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா தலைமையிலான ஈ.சரவணபவ், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், திருமதி சசிகலா ரவிராஜ், இமானுவேல் ஆனல்ட், தபேந்திரன் ஆகிய வேட்பாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.
இதன் போது சமகால அரசியல் நிலைமைகள் தொடர் பிலும் தேர்தல் கள நிலைமைகள் குறித்தும் கலந்து ரையாடியிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

# கூட்டுறவை அழியவிடாது பேணுவதில் பனை,தென்னை கூ. சங்கங்கள் முதன்மை

## யாழ். பிரதேச செயலாளர் புகழாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
கூட்டுறவை அழியவிடாது பாது காப்பதில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங் கங்கள் முதன்மை பெறு கிறது என்று யாழ் பிரதேச செயலர். எஸ்.சுதர்சன் புகழாரம் சூட்டினார்.
கடந்த ஜூலை 22 அன்று இடம் பெற்ற பனை அபிவிருத்தி வார கண்காட்சி நிகழ்வு யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசம், யாழ். கொத்தணி, வலிகாமம் கொத்தணி ஆகியவற்றின் அங் கத்துவ சங்கங்கள் ஆகிவற்றால் ஒழுங்குசெய்யப்பட்டு நடைபெற் றது.
இந்த நிகழ்வில் பிரதம அதிதி யாகக் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே யாழ் பிரதேச செயலர் எஸ்.சுதர்சன் மேற் கண் டவாறு தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரி வித்ததாவது:
இன்று எமது மக்களின் நவீன முறைமைப் பழக்கங்களினால் எமது பெரும் வளங்களில் ஒன் றான பனை வளத்தின் பயன் பாட்டை மறந்து வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.
இவ்வாறான நிகழ்வின் மூலம் எல்லோரையும் பனையின் பயன் பாட்டினை ஈர்க்கும் நிலை உருவா கும். எனவே இதுபோன்ற நிகழ்வு களை ஆண்டுதோறும் நடத்த வேண்டும் - என்றார். (ரி2.63)

# மன்னாரில் நேற்று குருதித்தான முகாம்

மன்னார், ஜூலை 24
மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் உத விக்கரம் பிரிவின் மாபெரும் குருதித்தான முகாம் 7 ஆவது தடவையாக நேற்று வியாழக்கிழமை வாழ்வுதய மண்டபத்தில் இடம்பெற்றது.
இக் குருதித்தான முகாம் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் இயக்குநர் அருட்பணி செ.அன்ரன் அடிகளார் தலை மையில் நேற்று காலை நடைபெற்றது. (ரி2-56)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எல்லாம் பகல்கனவு

'என்னதான் கொரோனாப் பூச்சாண்டி காட்டினாலும் இம்முறை எப்படியும் 70 வீதத்துக்கும் அதிகமான வாக்குகள் பதிவாகும்' என்று மிக நம்பிக்கையோடு சொல்லியிருக்கின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச. வேலிக்கு ஓணான் சாட்சி என்பதைப்போல தன்னுடைய இந்தப் பிதற்றலுக்கு அவர் சாட்சியாக இழுத்திருப்பது தபால்மூல வாக்குப்பதிவை. இம்முறை நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பில் 90 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் பதிவாகியுள்ளன என்று தரவுகள் கூறுகின்றன. அதனை அடிப்படையாக வைத்தே பிரியாவிடை பெறவந்த ஜேர்மன் தூதுவரிடம் இப்படியொரு 'கப்சா'வை அடித்து விட்டிருக்கின்றார் பிரதமர்.

இலங்கையில் இடம்பெறுகின்ற எந்தவொரு தேர்தலிலும் தபால்மூல வாக்குப்பதிவை அடிப்படையாக வைத்து சாதாரண வாக்குப்பதிலும் அதேபோல் அமையும் என்று சொல்லிவிட முடியாது. இங்குள்ள சட்டம் மற்றும் அது சார்ந்த நடவடிக்கைகள் அப்படியானவை. தபால்மூல வாக்களிப்புக்குத் தகுதிபெற்ற வாக்காளர்கள் கட்டாயம் தமது வாக்குகளைப் பதிவுசெய்ய வேண்டும் என்பது இலங்கையிலுள்ள விதி. இவ்வாறிருக்கையில் 90 சதவீதத்துக்கும் குறைவான வாக்குகள் பதிவானால்தான் ஆச்சரியப்பட வேண்டுமேதவிர 90 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் பதிவாகியதில் ஆச்சரியப்படவோ அல்லது பெருமைப்படவோ ஒன்றும் இல்லை. இந்த விடயம் ஜேர்மனியத் தூதுவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்ற வழக்கமான தோரணையில் பிரதமர் இப்படியொரு கருத்தை அவரிடத்தில் அவிழ்த்துவிட்டிருக்கலாம். எனினும், ஒன்று புலப்படுகின்றது. அது யாதெனில் 'கொரோனா இலங்கையில் இல்லை. அதன் இரண்டாவது அலைக்குச் சாத்தியம் இல்லை' என்ற பிம்பத்தைத் தோற்றுவிக்க இலங்கை அரசு படாதபாடுபடுகின்றது கடும் முனைப்புக் காட்டுகின்றது.

கந்தகாடு தனிமைப்படுத்தல் மையங்களில் அண்மையில் ஏற்பட்ட கொரோனாப் பெருந்தொற்றால் இலங்கையே பெரும் கிலிக்கு உட்பட்டது. இரண்டாவது அலைக்குள் இலங்கை இறுகிவிட்டது என்ற பீதிக்குள் மக்கள் தள்ளப்பட்டனர். அந்த பதற்ற நிலைக்குள் இருந்து இன்னமும் அவர்கள் விடுபடாத நிலையே உள்ளது. கந்தகாடு மறுவாழ்வு நிலையத்துக்குள் கொரோனா எவ்வாறு ஊடுருவியது என்பது இன்னமும் புரியாத புதிராகவே உள்ளது. இந்த இரண்டாவது அலையின் தொடக்கமுனை அறியப்படும் வரையில் கொரோனாவின் இரண்டாவது இன்னிங்ஸ் இலங்கையில் எப்போது வேண்டுமானாலும் ஆரம்பிக்க வாய்ப்புக்கள் இருக்கத்தான் செய்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணி நிலைமையின் தீவிரத்தை உணராது, மேற்கொள்ளக்கூடாத ஒப்பீட்டின் மூலம் தம் செயலுக்கு பிரதமர் நியாயம் கற்பிக்க முனைவதால் எந்தப் பயனும் இல்லை. பிரதமர் சொல்வதுபோன்று 70 வீதமாக வாக்குகள் பதிவாகின்றன என்று வைத்துக் கொண்டாலும் வாக்களிப்பு நாளானது இலங்கைக்கு கத்தி முனையில் நடப்பதைப் போன்றதே.

# சர்வதேச நாடுகளுடன் சண்டித்தனம் காட்டோம்

## பணிகின்றது அரசு



**கொழும்பு, ஜூலை 24**
**இராஜதந்திர நடவடிக்கைகளின்போது உணர்ச்சி வசப்பட்டு, சண்டித்தனம் காட்டும் அணுகுமுறையை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ தலைமையிலான அரசு பின்பற்றாது என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனை விவகாரம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்புத் துறைமுகம் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் சிற்சில குழப்பங்கள் ஏற்படும் விதத்திலேயே கடந்த அரசு முடிவுகளை எடுத்தது. எனவே, மிகவும் அவதானமாகவும், பொறுப்புடனுமே இவ்விவகாரத்தை கையாளவேண்டியுள்ளது.

அமெரிக்கா, இந்தியா மற்றும் சீனா உட்பட எந்தவொரு நாடாக இருந்தாலும் மோதல் போக்கை கடைப்பிடிக்காமல், கலந்துரையாடல்கள் ஊடாகவே பிரச்சினைகளைத் தீர்க்கும் விதத்திலேயே அரசு செயற்பட்டு வருகின்றது. குறிப்பாக இராஜதந்திர தொடர்புகளின்போது உணர்ச்சி வசப்பட்டு, சண்டித்தனமாக செயற்படுவது எமது அரசாங்கத்தின் கொள்கை அல்ல. தேசிய பாதுகாப்பு, அரசமைப்பு மற்றும் நாட்டிலுள்ள பொதுச் சட்டங்களுக்கு பாதிப்பு ஏற்படாத விதத்தில் எமது அரசின் வெளிநாட்டு உறவுகள் தொடரும்.

மத்தள விமான நிலையத்தை கடந்த அரசு இந்தியாவுக்கு விற்பனை செய்யவிருந்தது. ஆனால், ஜனாதிபதியும், பிரதமரும் இந்தியாவுடன் பேச்சு நடத்தி நாட்டு வளத்தைப் பாதுகாத்தனர். எதிர்காலத்திலும் அவ்வாறே நடைபெறும் - என்றார். (ஒ.ஐ.44)

# யானை தாக்கி இரு பிள்ளைகளின் தந்தை உயிரிழப்பு

திருகோணமலை, ஜூலை 24
யானையின் தாக்குதலுக்கு இலக்காகி இரு பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் திருகோணமலை அல்லை - கந்தளாய் வீதியில் நேற்றுஅதிகாலை இடம்பெற்றது.
இதில் கந்தககனாவ அசலகல மகியங்கனை பகுதியைச் சேர்ந்த கத்தரசிங்க ஆராச்சிலாகே அந்துன் டத்துர கத்தப்பான்கொட என்கின்ற 52 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த நபர் தொழில் ரீதியாக சேருவில பகுதியில் தங்கி நின்று மணல் அகழ்வு வேலைகளை மேற்கொண்டு வருபவர் என்று ஆரம்பக் கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# தேர்தல் தொடர்பான பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஜூலை 24
வன்முறையற்ற தேர்தல் தொடர்பான அறிவூட்டும் பயிற்சிப் பட்டறை, தேர்தல்கள் திணைக்கள அலுவலர்களாலும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தினாலும் (கபே) நாளை 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை, யாழ்ப்பாண நூலக கேட்போர் கூடத்தில் நடத்தப்படவுள்ளது. (ஒ,5)

# இரவில் நடமாடியவர் கைதாகிப் பிணை

கொடிகாமம், ஜூலை 24
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவிலில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடினார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.
அவர் இரவு நேரம் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுகின்றார் என்று தமக்கு கிடைத்த தகவலுக்கமைய அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-159)

## கசிப்பு உற்பத்தி;

# பொலிஸார் மீது மக்கள் விசனம்

சாவகச்சேரி. ஜூலை 24
கசிப்பு உற்பத்தி செய்தவரை விட்டுவிட்டு, அதை வாங்கிக் குடித்தவரை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.
கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி தனங்களப்பு வீதியில் உள்ள வீடொன்றைச் சுற்றிவளைத்த பொலிஸார் அங்கு கால் போத்தல் கசிப்பு வைத்திருந்த நபரைக் கைது செய்து அழைத்துச் சென்றுள்ளனர். ஆனால் கசிப்பு விற்பனை செய்தவருக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் பொலிஸாரால் மேற்கொள்ளப்படவில்லை.
கால் போத்தல் கசிப்பு கொள்வனவு செய்தவர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு நீண்ட நேரத்தின் பின்னர் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார் எனவும் இப்பகுதியில் நீண்டகாலமாக குறித்த வீட்டில் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் பொலிஸாருக்கும் மதுவரி நிலையத்தினருக்கும் பலதடவைகள் முறையிட்டும் அவர்கள் கசிப்பு உற்பத்தி செய்பவர்களுக்கோ விற்பனை செய்பவர்களுக்கோ எதிராகச் சட்ட நடவடிக்கைகளை எடுக்காதுள்ளனர் என்றும் மக்கள் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர். (ஐ)

## ஊரடங்கில் உலாவியோரின் வழக்குகள் ஒத்திவைப்பு

சாவகச்சேரி ஜூலை. 24
ஊரடங்கு வேளையில் நடமாடியோருக்கு எதிரான வழக்குகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

ஊரடங்குச் சட்டத்தை மீறி நடமாடியமை தொடர்பில் 20க்கும் மேற்பட்ட வழக்குகள் கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்த வழக்குகள் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்காக எடுக்கப்பட்டன.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றில் சமுகமளிக்காததால் ஒக்ரோபர் மாதத்திற்கு வழக்குகளை ஒத்திவைக்க நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். ஆஜராகத் தவறிய நபர்களுக்கு நீதிமன்றினால் அழைப்பாணை அனுப்புமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ரி1- 9)

### விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க

# கைகொடுத்த பாகிஸ்தானை ஒருபோதும் மறக்கமாட்டோம்

### பாதுகாப்புச் செயலர் கமால் குணரட்ண தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 24
நீண்ட தசாப்தங்களாக நாட்டில் காணப்பட்ட பயங்கரவாதத்தை முற்றாக இல்லாதொழிக்கும் நடவடிக்கையின்போதும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை இலங்கைக்கு எதிராக சுமத்திய சந்தர்ப்பத்திலும் பாகிஸ்தானினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஒத்துழைப்பை ஒருபோதும் மறக்கமுடியாது என பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரட்ண தெரிவித்தார்.

பாகிஸ்தான் கட்டளை மற்றும் பதவிநிலை அதிகாரிகள் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'நூற்றாண்டு பதக்கங்கள்' வழங்கும் வைபவம் பாகிஸ்தான் குவெட்டா நகரில் நேற்று இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
ஆபத்தில் உதவும் நண்பனே உண்மையான நண்பன் அதன்படி இலங்கை பயங்கரவாதத்திற்கு எதிராக யுத்தத்தை முன்னெடுத்த சமயத்தில் பாகிஸ்தானால் இலங்கைக்கு வழங்கப்பட்ட பங்களிப்பை இலங்கையர்கள் என்ற வகையில் நாம் ஒருபோதும் மறக்கமாட்டோம்.



புலிகளைத் தோற்கடிக்கும் கடுமையான போர் நடவடிக்கையின் போதும் இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகள் வலுவாகக் காணப்பட்டன.

இலங்கையும் பாகிஸ்தானும் தமது உறவுகளை மிகவும் ஆரோக்கியமாக பேணி வருகின்றன. இந்த உறவுகள் அன்று முதல் இன்று வரை வளர்ச்சி அடைந்து வருகின்றன எனத் தெரிவித்தார். (ரி1)

## மழையுடனான வானிலை அதிகரிக்கும்

கொழும்பு, ஜூலை 24
நாட்டில் மேல், சப்ரகமுவ, தென் மற்றும் மத்திய மாகாணங்களில் மழையுடனான வானிலை சற்று அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் அதிகாலை வெளியிட்டுள்ள வானிலை முன்னறி விப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
மேல், சப்ரகமுவ, தென் மற்றும் மத்திய மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வடமேல் மாகாணத்திலும் அனுராதபுரம் மாவட்டத்திலும் பல தடவைகள் மழை பெய்யும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. சப்ரகமுவ மாகாணத்திலும் நுவரெலியா, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி. மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன்கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

### 33 பிக்குகள் படுகொலை;

## உரிமைமீறல் மனு நவம்பரில் விசாரணை

கொழும்பு, ஜூலை 24
அரந்தலாவையில் 33 பிக்குகள் படுகொலைசெய்யப்பட்ட சம்பவத்தில் கடும் காயங்களுடன் தப்பிய பிக்கு ஒருவர் தாக்கல்செய்த அடிப்படை உரிமைமீறல் மனுவின் விசாரணை எதிர்வரும் நவம்பர் 12ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உயர்நீதி மன்றம் இந்தத் தீர்மானத்தை அறிவித்துள்ளது. இந்தப் படுகொலையில் தொடர்புடைய தற்போது உயிருடன் இருக்கும் தீவிரவாதிகள் தண்டிக்கப்படவேண்டும் என்று கோரி அன்டௌல்பத்த புத்தசார என்ற பிக்குவே மனுவைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை சனி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். மாவட்டத்தில்** இராஜ வீதி இருபாலை வீதி, இராஜ வீதி கோப்பாய், கோப்பாய் கல்வியியற் கல்லூரி, கோப்பாய் இராணுவ முகாம், கோப்பாய் கிருஷ்ணன் கோவிலடி, வடலியடைப்பு, தொல்புரம், வழக்கம்பரை, கள்ளவேம்படி, சுழிபுரம், பத்தனைக்கேணியடி, பிரான்பற்று, பண்டத்தரிப்பு, இடும்பன், சில்லாலை, சாந்தை, மாதகல், காஞ்சிபுரம், யம்புகோளப்பட்டினம், குசுமாந்துறை, காட்டுப்புலம், இளவாலை, பெரியவிளான், மாரீசன்கூடல், சேந்தாங்குளம், மெய்கண்டான் பாடசாலை, யம்புகோளப்பட்டின விடுதி, அராலி, செட்டியார் மடச் சந்தி, கரம்பிட்டிபிள்ளையார் கோவிலடி, சங்கானை, துணைவி, சங்கரத்தை, சண்டிலிப்பாய் ஒருபகுதி, சங்கானை வைத்தியசாலை, தொட்டிலடி, முல்லையடி, சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, மாவடி, மூளாய், K.M.K. Sea Foods பிறைவேற் லிமிற்ரெட், புத்தூர், ஊறணி, வீரவாணி, ஆவரங்கால், வாதரவத்தை, பெரிய பொக்கணை ஆகிய இடங்களிலும், **வவுனியா மாவட்டத்தில்** கோவில்குளத் திலிருந்து சிதம்பரபுரம் வரை, வாரிக்குட்டியூர், கிறிஸ்தவகுளம், புளியங்குளம், சின்னதம்பனை, வீரபுரம், பெரியநொச்சிக் குளம், கெலசியம்பலாவ ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

## இன்றைய நாள்

**மேடம்:** சமூகத்தில் உங்களின் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். வெளியூரில் இருக்கும் உறவினர் மூலம் எதிர்பார்த்த ஆதாயத்தைப் பெறுவீர்கள். அவசரப் போக்கு வேண்டாம்.

**இடபம்:** குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனக்கசப்புகள் தீரும். கலைத் துறையினருக்கு மிகப் பெரிய அளவில் பாராட்டுக் கிடைக்கும். பெண்களின் ஆர்வம் காரணமாகச் சிறு சிக்கல் ஏற்பட்டு விலகும்.

**மிதுனம்:** வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் சாதுர்யமாக பேசி லாபத்தை அதிகப்படுத்துவீர்கள். அலுவலகத்தில் உள்ள நிலுவைப் பணிகளை முடிப்பதற்கு மேலதிகாரி ஆதரவாக இருப்பார்.

**கடகம்:** சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்து கொள்வீர்கள். உறவினரிடமிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். பெண்கள் பணத்தின் அருமையை உணர்ந்து சேமிப்பை அதிகப்படுத்துவர்.

**சிம்மம்:** தொழில் ரீதியான பயணங்கள் சிறப்பாக அமையும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் சில முக்கியமான முடிவுகளை எடுப்பீர்கள். புதிய முயற்சிகள் உற்சாகம் அளிக்கும்.

**கன்னி:** நெருங்கிய ஒருவரின் சந்திப்பால் கடந்த கால இனிய அனுபவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். பணியாளர்களுக்கு பொறுப்பு அதிகரிக்கும். வியாபார விஷயமாக திடீர் பயணத்தை மேற்கொள்வீர்கள்.

**துலாம்:** எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். வீடு வாங்குவது சம்பந்தமான முயற்சிகளில் உதவி கிடைக்கும். வியாபாரிகள் எடுத்த செயல்களை செய்து முடிப்பதில் சிறிய அளவில் தாமதம் ஏற்படும்.

**விருச்சிகம்:** பணவசதி எதிர்பார்த்த அளவில் இருக்கும். வியாபார வளர்ச்சிக்கு கூடுதலாக உழைக்க வேண்டியிருக்கும். முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

**தனுசு:** பழைய கசப்பான சம்பவங்களால் நிம்மதி குறையலாம். அலுவலகத்தில் மற்றவர்களை நம்பி முக்கியப் பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம்.

**மகரம்:** தாயாரின் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு பின் சரியாகும். வியாபாரத்தில் கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. எடுத்த முயற்சிகளை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும்.

**கும்பம்:** பிள்ளைகளின் மூலம் பெருமை கிடைக்கும். எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் வளரும். உத்தியோகத்தில் சிறு சிக்கல்கள் வந்து நீங்கும்.

**மீனம்:** எதிர்கால வாழ்க்கை குறித்து நம்பிக்கை உருவாகும். வியாபாரிகளுக்கு பணப்புழக்கம் அதிகரிக்கும். பணியாளர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி வரும்.

# மகோற்சவம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பத்துநாள்கள் திருவிழாவில் ஓகஸ்ட் இரண்டாம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது.

மறுநாள் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. இம்முறை சுகாதார நடைமுறைக்கு ஏற்ப திருவிழா நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது. (ரி1-17)

# சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 24

கொரோனா காலத்தில் பாடசாலை மாணவர்களின் வாசிப்புத் திறனையும், படைப்பாக்கத்திறனையும் வீட்டிலிருந்தவாறே மேம்படுத்தும் முகமாக மூலிகை சுகவாழ்வு நிறுவனத்தின் நூல் வெளியீட்டுப் பிரிவால், வடக்கின் தென்றல் என்ற ஆங்கிலச் சஞ்சிகை நூல் வெளியிடப்படவுள்ளதாக தெல்லிப்பழை மூலிகை சுகவாழ்வு நிலையப் பணிப்பாளர் வெற்றிவேல் சக்திவேல் அறிவித்துள்ளார்.

இதனால், வடக்கின் தென்றல் சஞ்சிகைக்கான ஆக்கங்கள் விரைந்து கோரப்படுகின்றன. எனவே, வடக்கில் உள்ள எழுத்தாளர்கள், மாணவர்கள் ஆக்கங்களை அனுப்ப விரும்பின் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பாக வெ.சக்திவேல், மூலிகை சுகவாழ்வு நிறுவனம், கிளவ் வீதி, தெல்லிப்பளை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ரி2-50)

# தேர்தலை நடத்துவதற்கு ஜப்பான் 8.5 மில்லியன் நிதி

கொழும்பு, ஜூலை 24

**இலங்கை பொதுத்தேர்தலை நடத்துவதற்காக ஜப்பான் அரசாங்கம் 47,019 அமெரிக்க டொலர்களை (சுமார் 8.5 மில்லியன் ரூபா) நிதியுதவி வழங்கியுள்ளது.**



இலங்கையில் சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தலை நடத்துவதன் மூலம், ஜனநாயக மயமாக்கலை தக்க வைக்கும் திட்டத்தின் கீழ் இந் நிதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்று ஜப்பானியத் தூதரகம் வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்தத் திட்டத்தின் கீழ், ஒரு முன்னணி உள்ளாட்சி தேர்தல் கண்காணிப்பு அமைப்பாக, பவ்ரல் நடுநிலை அடிப்படையில் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும், இதனால் ஓகஸ்ட் 5ஆம் திகதி வரவிருக்கும் பொதுத் தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்தப்படும்.

இந்தத் திட்டத்தில் நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு வாக்குச் சாவடி மற்றும் வாக்கெண்ணும் நிலையத்திலும் 460 தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் உள்ளன.

இலங்கையின் நீண்டகால நண்பராக ஜப்பான், இலங்கையில் ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்கு கடந்த இரண்டு தசாப்தங்களாக பவ்ரலுக்கு தனது ஆதரவை அளித்து வருகிறது. கொரோனாவுக்கு எதிரான போரில் ஜப்பான் நாட்டிற்கு தனது ஒற்றுமையை மீண்டும் வலியுறுத்துகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

# கதிர்காம ஆடிவேல் விழா அன்னதானம் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 24



கதிர்காம ஆடிவேல் விழாவையொட்டி கடந்த 17 வருட காலமாக நடத்திவந்த அன்னதானம் இம்முறை நிறுத்தப்பட்டுள்ள தாக அன்னதான சபையின் இணைப்பாளர் எஸ்.ஞானசுந்தரம் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 17 வருடகாலமாக இந்து கலாசார திணைக்களத்தின் கதிர்காம இந்து யாத்திரிகர் விடுதியில் சிவபூமி அன்னதான தொண்டர் சபையினரால் அன்னதானம் சிறப்பாக நடைபெற்று வந்ததோடு, அதில் பல இலட்சக்கணக்கான பக்த அடியார்கள் பசியாறி வந்தனர். ஆனால் இம்முறை அதனை நடத்தக் கூடிய சூழ்நிலை இல்லை என்பதால், அதனை நிறுத்துவதற்குத் தீர்மானித்ததாக இணைப்பாளர் எஸ். ஞானசுந்தரம் மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை, இந்து யாத்திரிகர் விடுதியும் இம்முறை பக்தர்களுக்கு அல்லாமல் கொரோனாத் தடுப்பு அலுவலர்கள் தங்குவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அதேபோல் கதிர்காமம் மற்றும் உகந்தமலை முருகன் ஆலய ஆடிவேல் விழாக்காலங்களில் மேற்கொள்ளப்படும் வழமையான விசேட போக்குவரத்து ஒழுங்குகள் நாட்டின் கொரோனா கட்டுப்பாடுகள் காரணமாக மேற்கொள்ளப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ரி2)

# ஆலயப் பெருவிழா பயண ஏற்பாடுகள் பூர்த்தி

யாழப்பாணம், ஜூலை 24

பலாலி தெற்கு, வயாவிளான் புனித யாகப்பர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா திருப்பலி, நாளை சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. இதற்கான வழமையான பயணிகள் ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

புனித யாகப்பர் ஆலய பெருவிழா கடந்த 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நவநாள் திருப்பலிகள் இடம்பெற்று வந்துள்ளதுடன் நாளை சனிக்கிழமை திருவிழா திருப்பலி இடம்பெறவுள்ளது.

புனித யாகப்பரின் பக்தர்கள், இடம்பெயர்ந்து வேறு பகுதிகளில் வசித்து வரும் மக்களின் நன்மை கருதி ஆலய நிர்வாகத்தினரால் பயண ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு புறப்படும் பேருந்து குருசோ வீதி ஊடாக சாள்ஸ் மகாவித்தியாலயம், கச்சேரி நல்லூர் வீதியூடாக 6.30 மணிக்கு கோப்பாய் மாதா கோவில் வந்தடைந்து அங்கிருந்து புனித யாகப்பர் ஆலயத்தை நோக்கிச் செல்லவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)

# முல்லை வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை

முல்லைத்தீவு, ஜூலை 24

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் குறிப்பாக மருத்துவ விடுதியில் வைத்தியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதனால், இந்த மருத்துவ விடுதியில் அனுமதிக்கப்படும் நோயாளிகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும் மற்றும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றனர். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ளக பயிற்சி முடிந்து முதல் நியமனம் பெறக் காத்திருக்கும் 4 அணிகள் கொண்ட வைத்திய குழாமில் இருந்து 3 பேரை மட்டும் விடுவிக்க பல தடவைகள் சுகாதார அமைச்சு கோரியும் இன்னும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகம் அசண்டையாக உள்ளது.

இந் நிலையில், கூடிய விரைவில் தீர்வு எட்டப்படாத நிலையில் தொழில் சங்க போராட்டம் ஒன்றை முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் மேற்கொள்ளவுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். (ரி2)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு: இணைய விளம்பரம் மூலம் மோசடி

கொழும்பு, ஜூலை 24

வேலைவாய்ப்பைப் பெற்றுத்தருகின்றோம் என்று இணையத்தளம் ஊடாக விளம்பரத்தை வெளியிட்டு பண மோசடி இடம்பெற்றுள்ளது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

தாய்லாந்தில் பாதுகாப்பு சேவையில் உள்ள தொழில் வாய்ப்புக்காக நபர்களைத் தெரிவுசெய்து அந்தத் தொழில் வாய்ப்புக்காக பணத்தைச் செலுத்திய பின்னர் குறிப்பிட்ட வகையில் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொடுக்கவில்லை என்று சிலர் முறைப்பாடு செய்துள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தாய்லாந்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தை தொடர்புகொண்டபோது, இலங்கையர்களுக்கு தாய்லாந்தில் இவ்வாறான தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பம் இல்லை என்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையில் ஈடுபட்டோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக இந்த முறைப்பாடு குற்றப்புல னாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ரி1)

# ஊடகச் செய்திகள் தொடர்பில் ஜனாதிபதி அதிருப்தி


கொழும்பு, ஜூலை 24

இலங்கையில் கொரோனாத் தொற்று தொடர்பில் பிழையான புள்ளிவிவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன எனவும், கொரோனாவை எதிர்த்துப் போராடுவதற்கான திட்டங்கள் குறித்த துல்லிய மான மற்றும் தெளிவான தகவல்களைப் பெற அனைத்து வழிகளும் கிடைத்திருந்தாலும், உண்மைகளைத் தவறாக சித்திரிப்பது பொதுமக்களின் அமைதியின்மை மற்றும் அரசாங்கத்தின்மீது அதிருப்தியை ஏற்படுத்தும் என்றும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் கொரோனா நிலைமை தொடர்பில் ஊடக அமைப்பு ஒன்று வெளியிட்டுள்ள செய்திகள் தொடர்பிலேயே ஜனாதிபதி அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

மேலும், கொரோனாவை எதிர்த்துப் போராடுவதில் இலங்கை வெற்றிகரமாக இருந்தாலும், இது போன்ற தவறான தகவல்கள் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றமை மிகவும் துரதிர்ஷ்டவசமானது. இதுபோன்ற சம்பவங்கள் ஏற்படாமல் தடுக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ரி3)

# நாடு விழிவதற்கு நல்லூரான் துணை வேண்டும்!



■ கலாநிதி.ஆறு.திருமுருகன்.
(உப தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்.)

நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனால் நாட்டில் உள்ள பிணிகள் ஓடும்" என்று பாடியவர் தவத்திரு யோகர் சுவாமிகள். ஈழத் தமிழர்களின் முதன்மைத் திருக்கோயில் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் என்றால் மிகையாகாது. நல்லைக் கந்தனை தரிசிப்பதற்காக உலகம் முழுவதும் அடியார்கள் காத்திருப்பார்கள். நல்லூர் கொடியேறிவிட்டால் யாழ்ப்பாண குடாநாடே புனிதமாகிவிடும். வீடுகள் தோறும் விரத அனுட்டானங்கள் தொடங்கிவிடும். இருபத்தைந்து நாள்களும் வேறு சிந்தனைகள் இன்றி நல்லூர் வேலவனின் சிந்தனை யோடு மக்கள் வாழ்வார்கள். சின்னஞ்சிறு குழந்தை முதல் மூத்தோர் வரை ஆலய வீதியில் நடமாடுவதால் பெறும் இன்பம் எல்லையற்றது.

நல்லூரான் மகோற்சவம் நாளை 25ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் மங்களகரமாக ஆரம்பமாகிறது. திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழல் களைகட்டத் தொடங்கிவிட்டது.சேவற்கொடி வீதி எங்கும் பறக்கிறது. விடிவுதரும் வேலவனிடம் வாருங்கள்! வாருங்கள்!! என சேவற்கொடி வரவேற்கிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள நோய் பற்றிய அச்சமான சூழல் விரைவில் தணிய வேண்டும் என்று கந்தனை வேண்டுதல் செய்வோம்.

இவ்வருட பெருந்திருவிழாவில் வேடிக்கைகள் எதற்கும் இடமில்லை. விழாக்கால வாணிபக் கடைகள் எதுவும் இல்லை. சுகாதாரத்துறை சார்ந்தவர்களின் அறிவுறுத்தல்களை உள்வாங்கிய வண்ணம் பக்தர்கள் பக்குவமாக தமது வழிபாட்டைத் தொடரவேண்டும். ஆலயத்தில் நடைபெறும் பூசை வழிபாடுகளுக்கு பக்தர்களாகிய நாம் பரிபூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். முண்டியடித்துக் கும்பிடவேண்டும் என்ற ஆதங்கத்தைக் குறைத்து அகத்தினால் ஆறுமுகனை அழைத்து கும்பிடுவதே சாலப் பொருத்தமானதாகும். நல்லூர் விழாக்காலத்தில் நடைபெறவேண்டிய உற்சவ நியதிகளுக்கு பக்தர்களாகிய நாம் ஒத்துழைப்பு நல்கிய வண்ணம் பெருந்திருவிழா நிறைவேற பெருந்தன்மையோடு நடந்து கொள்ளவேண்டும்.

நல்லைக் கந்தனை தரிசிக்க வருபவர்கள் வழிபாட்டுக்குரிய பண்பாட்டு உடைகளுடன் உள்ளும் புறமும் புனிதமாக வரவேண்டும். புண்ணிய ஷேத்திரத்துக்குப் போகின்றோம் என்ற மனநிலையில் புனிதமான பாரம்பரிய பண்பாடுகளை கருத்தில் கொண்டு அவற்றைப் பாதுகாக்க வேண்டும்.

இயற்கை எமக்கு போதிய தண்டனைகளை தந்து கொண்டிருக்கிறது. இயற்கைக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்பது எமது சமயம் சொல்லும் அடிப்படைக் கருத்தாகும். எம் முன்னோர்கள் மண்ணைத் தொட்டுக் கும்பிட்டார்கள், விண்ணை நோக்கியும் விழுந்தவுடன் கும்பிட்டார்கள். தண்ணீரை கடவுளின் பரிசாகக் கருதினார்கள் பஞ்சபூத வழிபாட்டை நேசித்தார்கள். இவை எல்லாவற்றையும் நாம் கைவிட்டோம். இன்று நாம் அச்சத்துடன் வாழ்கிறோம்.எனவே நல்லூர்த் திருவிழா காலத்தில் கந்தனிடம் கண்ணீர்விட்டு மன்னிப்புக்கேட்போம். கண்ணுக்குத் தெரியாத பூச்சியொன்று உலகத்தைக் கலக்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் "கந்தா! வேலா! கருணைக் கடவுளே! உலகத்தைக் காப்பாற்றி எல்லோரும் மகிழ்ச்சியாக வாழ விடிவு தா " என்று வேண்டுவோம்.

இவ்வருட நல்லைக் கந்தன் பிரார்த்தனை தனிமனித பிரார்த்தனையாக இல்லாமல் உலகையே அச்சுறுத்தும் கொடிய நோயினால் ஏற்படும் துன்பச் சூழலில் இருந்து அனைத்து மக்களையும் நீ காப்பாற்று என முருகப் பெருமானைப் பிரார்த்திப்போம்.

நல்லைக் கந்தன் ஆலயத்தை மிகப் புனிதமாக நிர்வகித்து வருபவர்கள் புண்ணிய சீலர்கள். முற்றாக ஆலயம் அழித்தொழிந்த பின்பு தங்கள் சொந்தச் செலவில் தங்களது சொந்த முயற்சியில் மாப்பாண முதலியார் என்ற மகத்தான மனிதர் உருவாக்கிய இன்றைய கோவிலின் மேன்மையை நாம் உணரவேண்டும்.

அன்று ஒரு தனிமனிதன் துணிந்து எடுத்த முயற்சியானது இன்று எமது இனத்தினதும் சமயத்தினதும் அடையாளமாக நல்லூர் விளங்குகிறது. இன்றைய நல்லூர் ஆலயம் முருகன் அருளாலும் மாப்பாண முதலியார் வழியில் வந்த குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் மேலான நிர்வகிப்பி னாலும் சிறப்புற்று விளங்குகிறது. அந்தப் பெருமகனார் ஆயிரம்பிறை கண்ட நிலையில் தளராத உறுதியோடு எச்சூழலிலும் ஆலய நியதிகளைக் காத்து வருவது நாம் செய்த புண்ணியமாகும். எனவே நல்லூர் ஆலய நியமங்களை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு அடியார்களும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் நல்லவண்ணம் ஒத்துழைக்க வேண்டும். திருவிழாக் காலத்தில் யாழ்.மாநகர சபை தாம் செய்யும் மகத்தான திருத்தொண்டுகளை வழமைபோல மேற்கொண்டு அடியார்களை ஆற்றுப்படுத்த வேண்டும். வழிபாட்டுக்கு வருபவர்கள் நடந்து கொள்ளும் ஒழுங்கு விதிகள் காலத்துக்கு உகந்ததாக இருத்தல் வேண்டும். ஒருசிலர் விடும் தவறுகளால் உண்மையான பக்தர்களுக்கு இடையூறுகள் ஏற்படலாம். தரிசனத்துக்கு வருபவர்கள் தரிசனம் முடிந்ததும் தாமதிக்காமல் தங்கள் இருப்பிடம் சென்று விட வேண்டும். இம்முறை பக்தர்கள் மிகக் கவனமாக நடந்துகொண்டார்கள் என்று உலகம் உணருவதற்கு அனைவரும் ஒத்துழையுங்கள்.

இந்த ஆண்டு எமக்கு ஏற்பட்ட சூழல் நல்ல படிப்பினையாகும்.இதுவே எம் வினைப்பயனாகும். நாம் தெளிவதற்காக இறைவன் தந்த சந்தர்ப்பமாக இருக்கலாம்.

"வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை" என்ற நம்பிக்கையோடு நல்லூரான் திருவிழாவை நாம் சந்திக்கிறோம். ஆபரணங்கள் ஆடை அலங்காரங்கள் நாகரிக உடைகள் இவற்றை எல்லாம் தவிர்த்து எளிமையின் வடிவமாக ஆலயம் சென்று எமது முறையீடுகளை முருகனிடம் சமர்ப்பிப்போம்.நல்லூரான் பெருவிழாவோடு நாடு விடியும் என்று நம்புங்கள்!. ■

# அன்னையின் அருளைத் தரும் ஆடிப்பூரம்

■ சிவரம்யா

ஆடி மாதம் பல வகையிலும் சிறப்புடைய மாதம். இந்த மாதத்தில் ஆடி அமாவாசைக்கு சிறப்பளித்த இந்துக்கள் ஆதிபராசக்தியின் அற்புதவடிவான மதுரை மீனாட்சி அவதரித்த நாளான ஆடிப்பூரத்தை மனங்குளிரக் கொண்டாடுவது சாலப் பொருத்தமானதாகும்.

ஆடிப்பூரம் அம்பாளுக்கு உரிய விசேட நாளாக அமைகிறது. இந்நாளில் ஆதி பராசக்தியான அம்பிகைக்கு அபிசேகம் ,பூர்வகர்மச் சடங்கு, உற்சவம் என்பன வெகு விமரிசையாக நடைபெறும். இந்நாள் ஆண்டாளின் அவதாரத் திருநாள். பூமாதேவியானவள் ஆண்டாளாக அவதரித்தாள் என்கிறது புராணம்.

இந்தியாவில் ஸ்ரீவில்லிபுத்தூரில் இந்நாளை மிக்க அற்புதமாகக் கொண்டாடுகிறார்கள். தேவியின் திருநாளாகிய ஆடிப்பூரத்திலே ஸ்ரீவில்லிபுத்தூரில் தோன்றியவர்தான் ஸ்ரீ ஆண்டாள். அவளும் கண்ணனை (விஷ்ணுவை) வழிபட்டு அவரை மணந்தபடியால் வைணவர்கள்கூட ஆடிப்பூர நாளை சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.



இந்நாள் சிறப்படைவதற்கு பல வகை காரணங்களுண்டு. எல்லா மாதங்களிலும் பூரம் நட்சத்திரம் வந்தாலும் கூட ஆடி மாதத்தில் வரும் பூரம் நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும்போது கொண்டாடுவது ஆடிப்பூர விழாவாகும்.

இது தேவிக்குரிய திருநாட்களில் மிக வும் மேன்மைகளையும் பல நன்மைகளையும் தரக்கூடியதாகும்.

சிவன் கோவில்களிலுள்ள அம்பாளுக்குத் திருவிழா நடைபெற்று ஆடிப்பூரத்தில் தான் தீர்த்தோற்சவம் நடைபெறும். தேவியின் சாமர்த்தியச் (ருது) சடங்கு நிகழ்ந்த தினமெனவும் ஆடிப்பூரம் கூறப்படும். இந்தத் தினத்தில் சிவாலயங்களில் உள்ள அம்மனுக்கும் மற்றும் அம்மன் கோயில்களிலும் விசேட விழா நடைபெறுவது சிறப்பாகும்.

அம்பாளின் எட்டுவகை சித்திகளையும் பெற இந்நாள் வழிபாடு உன்னதமானது. ஆடிப் பூரம் வெள்ளிக்கிழமை களில் வருவது இன்னும் சிறப்பாகும்.

செவ்வாய் தோஷமுள்ள பெண்கள் ஆடிச் செவ்வாய் விரதமிருந்து ஆடிப்பூர நாளில்தேவியைநினைத்து விரதம் அனுட்டிப்பதால் செவ்வாய்க் குற்றம் ஓரளவு நீங்க வாய்ப்புண்டு என்பது நம்பிக்கை.

இந்தியாவில், வட இந்தியாவில் வைணவர்கள் விசேட விழா எடுப்பது போல தமிழ் நாட்டிலும் தேவி திருத்தலங் களில் ஆடிப்பூரம் சிறப் பாக கொண்டாடப்படுகிறது.மதுரை மாநகரை ஆண்ட மலையத்து வம்ச பாண்டிய மன்னன் மக்கட் பேறின்மையால் மிகவும் வருந்தினான். அப்போது ஞானிகளும் முனிவர்களும் சிவனை நினைத்து மாபெரும் யாகம் நடத்தினால் மக்கட்செல்வம் கிடைக்கும் என அரசனுக்குக் கூறினர். பாண்டிய மன்னனும் முனிவர்களின் சொல்லைத் தட்டாது சிவனை நினைந்து மாபெரும் யாகம் ஒன்றை நிகழ்த்தினான். இந்த யாகத்தினால் அகம் மகிழ்ந்த பரமன், பார்வதி தேவியரை நோக்கி குழந்தையாக அக்கினியின்றும் தோன்றும்படி வேண்டியதோடு, பின்னால் தானே வந்து முறைப்படி மணம் செய்வதாகவும் வேண்டிக் கொண்டார். பரமனின் ஆணைப்படி பார்வதி தேவியர் அக்கினியில் இருந்து எழில்மிகு குழந்தையாகத் தோன்றினாள். இவர் குழந்தையாக பூவுலகில் அவதரித்த பொன்னாளே இத்தினம் ஆகும்.

மீன் கொடியுடைய பாண்டிய அரசின் குலத்தில் உதித்தமையாலும், மீன் போன்ற எழில் பொங்கும் கண்களையுடையதாக குழந்தை அமைந்ததாலும் பாண்டிய மன்னன் மீனாட்சி எனப் பெயரிட்டு வளர்க்கலானான். எனவே மக்களின் இடர்நீங்க மதுரை மீனாட்சியாக மானிட வடிவில் வந்து பாண்டிய மன்னனின் பிள்ளையில்லாக் குறையைப்போக்க பார்வதி தேவிக்கும் பரமன் ஆணையிட்டான்.

பூரம் நட்சத்துக்கு அதிபதி வெள்ளி. எனவே இந்தவருடத்து ஆடிப்பூரம் மகத்துவம் நிறைந்தது. மானிடர் துன்பம் நீங்க எல்லாம் வல்ல இறைவியைத் துதிப்போம். தொல்லைகள் நீங்கும். வல்லமை வாழும். ■

முன்னாள் வடமாகாண சபை உறுப்பினரும், யாழ்.மாநகர மேயரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட வேட்பாளருமான இம்மானுவல் ஆனல்ட் உதயனுக்கு அளித்த நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.

# “சயனைட் ஏந்தியோரின் தியாகத்தை மறக்காதோர் கூட்டமைப்பையே ஆதரிப்பார்கள்”



## இ.ஆனல்ட் நம்பிக்கை

நேர்காணல்: இரா.புத்திரசிகாமணி

**கேள்வி:** வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினராகவும் , தற்போது யாழ்.மேயராகவும் செயற்படும் நீங்கள் அதனை உதறிவிட்டு, நாடாளுமன்றத் தேர்தலில் களம் இறங்கியது ஏன்?

**பதில்:** எனது இளமையில், பல்கலைக்கழக காலம் முதலே தமிழ்த் தேசியப் பற்றுடையவன். அக்காலம் முதலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகளின்பால் ஈர்க்கப்பட்டவன். தலைமைக்கு விசுவாசம் உடையவன். கட்சியே என்னை மாகாண சபை உறுப்பினராகவும் மேயராகவும் ஆக்கியது. நான் எதிர்பாராத வேளையில் கட்சியின் அழைப்பை ஏற்றே இம்முறை போட்டியிடுகிறேன்.

**கே:** நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டால் உங்களுடைய வேலைத்திட்டம் எப்படி இருக்கும்?

**ப:** மூன்று தசாப்தமாக இடம்பெற்ற விடுதலைப் போராட்டம், பின்னர் சிங்கள இராணுவத்தின் அட்டகாசம், மாறி மாறி வந்த அரசுகளின் அராஜகம் என்பவற்றால் இழப்பதற்கு எதுவுமே இல்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். பெரிதும் பாதிக்கப்பட்டு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடமும் இல்லாமல் எமது பிரதேசத்தில் மக்கள் இன்றும் துன்பியல் வாழ்வோடு உழல்கின்றனர்.

இந்த நிலைமையை மாற்றி அமைக்க வேண்டும். தெரிவுசெய்யப்படும் எல்லா உறுப்பினர்களும் தமக்கு ஒதுக்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியை ஒட்டுமொத்தமாக பிரதேச அபிவிருத்திக்கு செலவிட வேண்டும். மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான வீடு, குடிதண்ணீர், சுகாதார வசதிகள் மற்றும் வாழ்வாதாரத்துக்கான சுயதொழில் வாய்ப்புக்களை ஒரே நோக்குடன் செயற்படுத்தி அந்த மக்களின் அவலத்தைப் போக்க முடியும். அப்படியே ஒன்றன்பின் ஒன்றாக எமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய முடியும். அதற்கான திட்டம் என்னிடம் இருக்கின்றது.

**கே:** யாழ்.- கிளிநொச்சி மாவட்டத்தில் பெருமளவிலான போராளிக் குடும்பங்கள் பெரிதும் துன்பப்படுகின்றார்கள். அவர்கள் விடயத்தில் என்ன செய்யப் போகின்றீர்கள்?

**ப:** 'டயஸ் போரா' என்று வெளிநாடுகளில் இருந்து பலர் குரல் எழுப்புகின்றனர். சுமார் ஒரு லட்சத்தில் அதிகமானவர்கள் வெளிநாடுகளில் இருக்கின்றனர். விடுதலைப் போராட்டத்தின்போது தமது உடம்பில் குண்டையும், கழுத்தில் சயனைட்டையும் கட்டிக்கொண்டு எமக்காக உயிர்த் தியாகம் செய்தவர்கள் இன்று கால் கைகளை இழந்து, கண்பார்வை இழந்து வீடு வாசல்களை இழந்து துயரப்படுகின்றனர். வெளிநாடுகளில் வாழும் எம்மவர்கள் பாதிக்கப்பட்ட இந்தப் போராளிகளின் குடும்பத்தில் ஒரு பிள்ளையையாவது தத்தெடுத்து அவர்களின் உயர்கல்வி வரையிலான அனைத்து செலவினங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதனைக் கோரிக்கையாக வைத்து, புலம்பெயரிகளின் ஆதரவோடு அந்தக் குடும்பங்கள் மீட்சிபெற உழைப்பேன்.

**கே:** எமது பிரதேசத்தில் போரால் பாதிக்கப்பட்ட 80 ஆயிரத்துக்கும் அதிகமான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இருக்கின்றன. தமது வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றனர். ஆனால் கூட்டமைப்பு இவர்களின் நலன்கருதி எதையும் செய்யவில்லை என்று குற்றம் சாட்டப்படுகின்றதே?

**ப:** முற்றும் முழுதாக எதுவும் செய்யவில்லை என்று சொல்லிவிட முடிய்யாது. அரசினூடாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீடுகளின் மூலமும் பல்வேறு வேலைத்திட்டங்கள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அதை மட்டும் சொல்லிக்கொண்டு திருப்தியடைந்து விட முடியாதுதான். எமது பிரதேசத்தில் சகல விதமான இயற்கை வளங்களும் இருக்கின்றன. நிலப்பரப்பும் இருக்கின்றது. அவற்றைப் பயன்படுத்தி பெரிய தொழிற்சாலைகளையும் ,விவசாயப் பண்ணைகளையும்,தொழிற்பயிற்சி நிறுவனங்களையும் அமைத்து தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்த அரசை வலியுறுத்துவோம். உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தொழில் வாய்ப்புக்களை உருவாக்க நடவடிக்கை எடுப்போம்.

**கே:** இப்போது களநிலவரம் எப்படி இருக்கின்றது. உங்களுக்கு ஆதரவு இருக்கின்றதா?

**ப:** அரசியல் அனுபவமும் முதிர்ச்சியும் உள்ள பலர் களத்தில் இருக்கின்றனர். என்னைப் பொறுத்தவரையில் மாநகர மேயராகவும் ,மாகாண சபை உறுப்பினராகவும் பல நன்மையான திட்டங்களைச் செயற்படுத்தி மக்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்றுள்ளேன். பாடசாலைக் காலம் முதல் பல்கலைக்கழகம் வரை சகல துறை விளையாட்டு வீரனாகவும், பல கழகங்களின் அமைப்பாளராகவும், மத்தியஸ்தராகவும் செயற்பட்டுள்ளதால் இளைஞர் சமுதாயத்தின் ஆதரவும் உண்டு.

பல்வேறு விதமான அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் முதலாவது பொங்குதமிழ் நிகழ்வை யாழ். பல்கலைக்கழகத்தில் தலைமையேற்று நடத்தினேன். இதனால் சமுதாயத்திலும் வரவேற்புண்டு. நான் வெற்றி பெறுவேன் என்பது நிச்சயம். இம்முறை நாங்கள் ஐந்து இடங்களைக் கைப்பற்றுவோம். அதனை ஆறாகவும் ஏழாகவும் அதிகரிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் செயற்படுகின்றோம்.

**இப்போது அபிவிருத்தி அபிவிருத்தி என்று பலர் குறைகூறிக்கொண்டு வருகின்றனர். தமிழ்த் தேசியத்தையும் எமது ஐக்கியத்தையும் இல்லாதொழிக்கும் நோக்கிலேயே அரசின் கைக்கூலிகளாகப் பலர் வந்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் எம்மவர்கள் சிலரும் போட்டியிடுகின்றார்கள். இது எம்மைப் பலம் இழக்கச்செய்யும் ஒரு சதி.**

**கே:** மக்களிடம் நீங்கள் முன்வைக்கும் வேண்டுகோள் என்ன?

**ப:** இப்போது அபிவிருத்தி அபிவிருத்தி என்று பலர் குறைகூறிக் கொண்டு வருகின்றனர். தமிழ்த் தேசியத்தையும் எமது ஐக்கியத்தையும் இல்லாதொழிக்கும் நோக்கிலேயே அரசின் கைக்கூலிகளாகப் பலர் வந்துள்ளனர். தமிழ்த் தேசிய கூட்டமைப்பை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் எம்மவர்கள் சிலரும் போட்டியிடுகின்றார்கள். இது எம்மை பலம் இழக்கச் செய்யும் ஒரு சதி. நீங்கள் இடுப்பில் குண்டையும் வாயில் சயனைட்டையும் வைத்துக்கொண்டு வாழ்ந்த தியாகங்களை ஒருமுறை நினைத்துப்பார்த்து எமது வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

கூட்டுறவு அபிவிருத்தி வங்கியால்

# வறிய குடும்பங்களுக்கு கூப்பன் திட்டம் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

**வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் நலன் கருதி 'கூட்டுறவின் நுகர்வியம்'' என்னும் கூப்பன் திட்டம் ஒன்றை வடக்கு மாகாண கூட்டு றவு அபிவிருத்தி வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.**

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் நாளாந்த அத்தியாவசிய நுகர்வுப் பொருள்தேவைகளை பூர்த்தி செய்வதற்காக இந்தக் கூட்டுறவு கூப்பன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்படும் மக்கள் இந்தக் கூப்பன்களைப் பெற்று தமது பிரதேச பலநோக்குக் கூட்டுறவு சங்க கிளைகள் ஊடாக தமக்குரிய அத்தியாவசியப் பொருள்களை பெற்றுக்கொள்ள முடியும்.

இது ஒரு வட்டி அறவிடப்படாத கடன் கூப்பன் திட்டமாகும். இந்தக் கூப்பனின் ஆகக் குறைந்த பெறுமதி 2000 ரூபாவாகும். ஒரு குடும்பத்துக்கு ஒரு கூப்பன் அட்டை மட்டும் வழங்கப்படும்.

மாதாந்த அதிக உச்ச எல்லையாக 10,000 ரூபா வரைக்கும் கூப்பன் கடன் அடிப்படையில் பொருள்களைக்கொள்வனவுசெய்ய முடியும். இக்கடன் முப்பது நாள்களுக்குள் மீளச் செலுத்தப்பட வேண்டும்.

இதற்கான மூன்றுவீத ஊக்குவிப்பு உரித்துடையவரின் பெயரில் கிராமிய வங்கியில் வைப்பிலிடப்படும். கூட்டுறவின் நுகர்வியம் கூப்பன் திட்டத்தை முதற்கட்டமாக காரைநகர், அச்சுவேலி, பளை ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமுல்படுத்தியுள்ளன. இந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட சங்கங்களின் கிளை நிலையங்களில் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. (ஜ-17)

## இராணுவச் சிப்பாய் தற்கொலை முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 24

நிலாவரை பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவச் சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலைக்கு முயற்சி செய்து ஆபத்தான கட்டத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

வென்னப்புவ நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த திலக் துசிந்த (வயது23) என்ற சிப்பாயே இவ்வாறு தற்கொலைக்கு முயற்சித்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது இவர் தனக்குத் தானே துப்பாக்கியால் சுட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நெஞ்சுப் பகுதியில் காயமடைந்த இராணுவச் சிப்பாய் ஏனைய சக சிப்பாய்களின் உதவியுடன் காப்பாற்றப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை 521 படையணியின் இராணுவப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.5,25,26)

## மாமனுக்கு விரலில், மாமிக்கு கையில்; பளையில் மருமகன் வெறியாட்டம்

பளை, ஜூலை 24

மருமகனின் வெறியாட்டத்தினால் மாமனுக்கு கைவிரல் துண்டிக்கப்படும் நிலை ஏற்பட்டதுடன், மாமியாருக்கு கை மணிக்கட்டில் பலத்த காயமும் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை நள்ளிரவு பளை வேம்பொடுகேணியில் இடம்பெற்றது.

குடும்பத்தகராறு காரணமாக தனது மாமனாரையும், மாமியாரையும் மருமகன் கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளார். இதனால் அவர்கள் இருவரும் படுகாயமடைந்தனர். வேம்பொடுகேணி இந்திராபுரத்தைச் சேர்ந்த அ.பரமானந்தம் (வயது - 52) மற்றும் அவரது மனைவியான, டெய்சி (வயது-50) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

அவர்கள் காயமடைந்ததைக் கண்ணுற்ற மகள் மயங்கி வீழ்ந்துள்ளார். இதனால் மூவரும் அம்புலன்ஸ் மூலம் கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அத்தோடு சச்சரவில் ஈடுபட்ட மருமகன், வீட்டில் இருந்த ஏனையோரையும் விரட்டியடித்ததால், அவர்கள் உறவினர் வீடொன்றில் தஞ்சமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-9)



## காட்டு யானையால் குடியிருப்பு வீடு சேதம்

கிண்ணியா, ஜூலை 24

காட்டு யானையின் அட்டகாசத்தால் குடியிருப்பு வீடு சேதமாக்கப்பட்டது. வீட்டில் எவரும் இல்லாததால் எந்தவித உயிராபத்தும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட, பூவரசந்தீவுப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு யானைகள் அடிக்கடி ஊருக்குள் உட்பிரவேசித்து சேதம் விளைவிப்பதனால், மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக கிராமவாசிகள் தெரிவித்தனர். இது சம்பந்தமாக உரிய அரச அதிகாரிகளிடம் தெரிவித்தும் இதுவரை எதுவித தீர்வும் பெற்றுத் தரவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர். (ஐ)

## தனிமைப்படுத்தல் நிறைவு; 126 பேர் வீடு திரும்பினர்

கிளிநொச்சி, ஜூலை 24

கிளிநொச்சி இரணைமடு விமானப்படை முகாமில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 126 பேர் நேற்று வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

வெளிநாடு ஒன்றுக்கு தொழில் வாய்ப்புக்காகச் சென்ற நிலையில் கடந்த ஐந்தாம் திகதி இவர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

14 நாள்கள் கிளிநொச்சி இரணைமடு விமானப்படை முகாமில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த நிலையில் பி.சி.ஆர் பரிசோதனையின் போது இவர்களுக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்படாத நிலையில் நேற்று வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ஜ-113,6)





மன்னார் பெரியகடை ஞானவைரவர் தேவஸ்தானத்தில் ஆடிஅமாவாசையை முன்னிட்டு பிதிர்க்கடன் கடந்த திங்கட்கிழமை நிறைவேற்றப்பட்டது. கோவில் நித்திய குரு பிரம்ம ஸ்ரீ ஸ்ரீஹர சர்மா தலைமையில் பிதிர்க்கடன் நிறைவேற்றல் சிறப்பாக நடைபெற்றது. பக்தர்கள் தனியாள் இடை வெளியைப் பேணி பிதிர்க்கடன்களை நிறைவேற்றினர். (து-213)

# ஹோட்டலாகப் பயன்படுத்தப்பட்ட பழைமையான கட்டடம் சேதம்

பிரதமரிடம் இடைக்கால அறிக்கை

கொழும்பு, ஜூலை 24

குருநாகல் புவனேக ஹோட்டல் நடத்தப்பட்டுவந்த கட்டடம் சேதமாக்கப்பட்டமை தொடர்பான இடைக்கால அறிக்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது. இந்த அறிக்கையில்,

கட்டடத்தின் முன்பக்கத்தில் கூரையின் ஒரு பகுதிக்கும், ஜன்னல்களுக்கும் சேதம் விளை விக்கப்பட்டுள்ளது என்பதால் அப்பகுதிகளை தொல்பொருள் ரீதியில் ஆராய்ச்சிக்கு உட்படுத்த வாய்ப்புள்ளது. முழுமையாகச் சேதமாக்கப்பட்டுள்ள பின்பக்கத்திலுள்ள மரத்தாலான விட்டங்கள் மற்றும் செங்கல்கள் உள்ளிட்ட கட்டப் பொருள்கள் பாதுகாப்பாக உள்ளன. அதனால் இதற்கு முன்னர் தொல்பொருள் திணைக்களத்தினால் விரிவாக அறிக்கையிடப்பட்டுள்ளமை மற்றும் பாதுகாப்புத் திட்டங்கள் தயாரிப் படுத்தப்பட்டுள்ளமையால் அந்த பழைமைவாய்ந்த பகுதியை மீண்டும் மீட்டெடுப்பதற்கான வாய்ப்புள்ளது. அதனால் பழைமை வாய்ந்த கட்டடம் விரைந்து பாதுகாக்கப்பட வேண்டும், இக்கட்டடத்தை தொல்பொருள் திணைக்களத்துக்கு கையளித்தல் குறித்த இத்தை விரிவாக்கும்திட்டத்தைமேற்கொள்ளுமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஆலோசனை வழங்கல், இந்த சேதமாக்கலுக்கு பொறுப்புகூற வேண்டிய நிறுவனம் அல்லது நபர்கள் மூலம் பாதுகாப்புக்கு அவசிய மான ஏற்பாடுகளைச் செய்தல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ஐ)

# வடக்கில் 6,000 ஏக்கரில் மஞ்சள், இஞ்சி செய்கை

## பனை அபிவிருத்தி சபையின் வடமாகாண பணிப்பாளர் பத்திராஜா தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 24

**வடக்கு மாகாண பனை அபிவிருத்தி சபையினூடாக, வடக்கு மாகாணத்தில் எள்ளு, மஞ்சள், இஞ்சி, கஜூ செய்கைகளை மேம்படுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்று பனை அபிவிருத்தி சபையின் வடமாகாண பணிப்பாளர் பி.ஏ. கிரிஷாந்த பத்திராஜா தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வடக்கு மாகாணத்தில் உள்ள மண்வளத்தை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு திட்டங்களை முன்னெடுக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அமைச்சர் விமல் வீரவன்சவின் எண்ணக்கருவுக்கு அமைய வடக்கு மாகாணத்திலுள்ள இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்பை வழங்குவதற்காக நாங்கள் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். குறிப்பாக வடக்கு மாகாணத்தில் உள்ள இடப் பிரச்சினை தொடர்பில் அதற்கு ஒரு நிரந்தரமான தீர்வைப் பெற்றுக் கொள்வதற்காக நாங்கள் நடவடிக்கை எடுக்கின்றோம். உண்மையில் சந்தோசம் அடைகின்றோம். அவர் தெற்கிலுள்ள அமைச்சர், வட மாகாணத்துக்கு வந்து பனை அபிவிருத்தி சபை ஊடாக எள்ளுச் செய்கை, மஞ்சள் செய்கை மற்றும் இஞ்சி செய்கை என்பவற்றை மேம்படுத்தும்முகமாக பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முன் நின்றார்.

வடக்கு கிழக்கு மக்களின் அபிவிருத்தி மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேலும் மேம்படுத்தும் முகமாக அவர்களின் வாழ்க்கை மட்டத்தை மீண்டும் உயர்த்திச் செல்வதற்காக இந்தப் பயிர்ச்செய்கைகளை நாங்கள் முன்னெடுக்கவுள்ளோம். மன்னார் மற்றும் கொண்டச்சி போன்ற பகுதிகளில் கஜு அபிவிருத்தி சபையின் இடத்தில், அந்தப் பகுதிகளில் இந்தப் பகுதி வாழ் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முகமாக இந்தச் செய்கைகளை நாங்கள் முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். கொண்டச்சி பகுதியில் 6,000 ஏக்கர் நிலப்பரப்பில், வெங்காயம் இஞ்சி மற்றும் மஞ்சள் செய்கையை முன்னெடுக்க நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம் - என்றார். (ஐ)



## இளையோரை வழிப்படுத்த ஒன்றுகூடல்களே சிறந்தவை

### கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

இளையோருக்கு சந்தர்ப்பத்தைக் கொடுத்துப் பாருங்கள், அவர்கள் சாதித்துக்காட்டுவார்கள். இன்றைய காலத்தில் எமது இளையோர்கள் ஆற்றல், திறன், நவீன உத்திகளை காட்டாற்று வெள்ளம் போல் பரவலாகப் பாய விடுகிறார்கள். இதனை அணைகட்டி வழிப்படுத்தும் முயற்சிகளையே இளையோர் ஒன்றுகூடல்கள் மூலம் இலக்கு நோக்கிய பயணத்தை முன்னெடுத்து வருகிறோம் என்று கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் தந்தை ச. இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் தெரிவித்தார்.

சாட்டி ஆலய முன்றிலில் நடைபெற்ற இளையோர் ஒன்றுகூடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இளையோர் உலகு அதிசயமானது. பல்வேறு உணர்வுகளுடன் மாறுபட்ட சிந்தனைகளைக் கொண்டது. அதனை இலக்கு நோக்கி ஒழுங்குபடுத்தலே மிகவும் பயன்தரவல்லது. இவை போன்ற சந்திப்புக்கள் உங்கள் உணர்வுகளைக் கையாழும் வல்லமையை நீங்களாகவே நெறிப்படுத்தக் கிடைத்த சந்தர்ப்பமாகும். அதனை ஆர்வமுடன் பங்கேற்க முன்வந்த வர்களை பாராட்டுகிறேன் - என்றார். (ஐ)

## வர்த்தகர்கள் மூவருக்கு ரூபா 6,000 தண்டம்

மன்னார், ஜூலை 24

சட்டத்தை மீறிச் செயற்பட்ட வர்த்தகர்கள் மூவருக்கு ரூபா 6,000 தண்டம் விதிக்கப்பட்டது. மன்னார் மாவட்ட நுகர்வோர் அலுவலக அதிகார சபை அதிகாரிகள் மன்னார் நகர் மற்றும் அடம்பன் பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது 3 வர்த்தகர்களுக்கு எதிராக மாவட்ட நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்தனர். இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது கோதுமை மாவை கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்த வர்த்தகருக்கு 3,000ரூபாதண்டமும், கோதுமை மாவின் விலையை காட்சிப்படுத்தாத வர்த்தகர் இருவருக்கு தலா 1,500 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ)



காரைநகர் பிரதேசத்தில் உள்ள மருதபுரம் ஜே/40 கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் 92 மாணவர்களுக்கு யாழ்ப்பாணம் கே.கே.பி இளைஞர் கழகத்தால் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. அத்துடன் கொரோனா பேரிடர் காலத்தில் சிறுவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் மன அழுத்தத்தைக் கருத்திற்கொண்டு "வன்முறையற்ற தொடர்பாடல்" என்ற தலைப்பில் கருத்தமர்வும் நடைபெற்றது. (ஐ-159)

*நல்லூர் சூழலில்*

## கட்டாக்காலி நாய்கள் பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கட்டாக்காலிகளாக நடமாடும் நாய்களைப் பிடிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாள்கள் நடைபெறவுள்ளது. இதனையடுத்து ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கு இடையூறை விளைவிக்கும் கட்டாக்காலி நாய்களே பிடிக்கப்படவுள்ளன.

இவ்வாறு பிடிக்கப்படும் நாய்கள் மிருக வைத்திய திணைக்களத்தின் உதவியுடன் தடுப்பூசி ஏற்றப்பட்டும், கருத்தடை செய்யப்பட்டும் நாய்களின் காப்பகத்துக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

எனவே ஆலயச் சூற்றாடலை அண்மித்த பகுதிகளில் இருக்கும் குடியிருப்பாளர்கள் தமது வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-17)

## தேசிய கலைஞர் தரவுத்தளத்தில் விவரங்களைப் பதிவு செய்யுங்கள்

### யாழ். கலைஞர்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 24

நாடு முழுவதும் உள்ள கலைஞர்களின் விவரங்களைப் பதிவுசெய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள தேசிய கலைஞர் தரவுத்தளத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கலைஞர்களையும் தவறாது பதிவு செய்துகொள்ளுமாறு யாழ்ப்பாண மாவட்ட கலாசார உத்தியோகத்தர். இ.கிருஷ்ணகுமார் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

நாடு பூராகவும் தேசிய கலைஞர் தரவுத்தளத்தில் கலைஞர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குடாநாட்டில் பல கலைஞர்கள் இதற்காக விண்ணப்பிக்காதிருப்பதை அவதானிக்க முடிகிறது. இந்தத் தரவுத்தளத்தில் கலைஞர்களின் தகவல் உள்ளடக்கியிருப்பது அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக இருக்கும். ஆகையினால் கலைத்துறைசார் ஆர்வலர்கள் கலைஞர்களுக்கு இத் தகவல்களை வழங்கி விண்ணப்பங்களை அனுப்பிவைக்க உதவவேண்டும். இதுவரையும் யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்குறிப்பட்ட தகுதி பெற்றும் தங்களைப் பதிவு செய்யத் தவறிய கலைஞர்கள் நாளை சனிக்கிழமை 25 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொண்டு விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்து வழங்குங்கள் - என்றார். (ஐ)

## கொடிச் சீலை எடுக்கும் நிகழ்வு

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச் சீலை எடுத்துவரும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

சட்டநாதர் கோவிலை அண்மித்துள்ள வேல் மடம் முருகன் கோவிலில் காலை 8 மணிக்கு நடைபெறும் விஷேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து, அங்கிருந்து சிறு தேரில் கொடிச்சீலை நல்லூர் ஆலயத்துக்குக் கொண்டு வரப்பட்டு நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்படும். ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-17)

# மதுபோதையில் சாரத்தியம்; 15 சாரதிகளுக்கு வழக்குத் தாக்கல்

மன்னார், ஜூலை 24
மதுபோதையில் வாகனம் செலுத்தினர் என்ற குற்றச்சாட்டில் 15 சாரதிகளுக்கு எதிராக மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.
இதில் 6 வழக்குகள் அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்டவையும், ஏனையவை மடு மற்றும் மன்னார் நகர் புறங்களில் பதியப்பட்ட வழக்குகள் என்றும் தெரிவிக்கப்பட்டது.
இந்த வழக்குகள் நேற்று மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதில் ஒரு சாரதிக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
ஏனையவர்களுக்கு மது போதையுடன் வாகனங்களுக்கான காப்புறுதிகள், வாகன ஓட்டுனருக்கான அனுமதிப் பத்திரங்கள், வாகன வருமான அனுமதிப் பத்திரங்கள் ஆகியன இன்றி வாகனங்கள் செலுத்தியதாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.
இதன்போது நீதிவான் ஒவ்வொருவரையும் தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் வழக்குகளை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி வரை ஒத்திவைத்துள்ளார். (ஐ-60)



யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா நேற்று வியாழக்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது. (ஐ)

# சந்தையின் கீழ் தளத்தில் வியாபாரத்துக்குத் தடை

யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ்ப்பாணம், திருநெல்வேலிச் சந்தையின் கீழ் தளத்தில் வியாபாரம் செய்வதற்கு தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வியாபாரிகள் சிலர் அனுமதி இன்றி மரக்கறி விற்பனையில் ஈடுபட முயற்சித்தபோது அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

சந்தைக் கட்டடத்தின் மேல் தளத்திலேயே மரக்கறி விற்பனை இடம்பெற்று வருகின்றது. சுகாதார விதிகள் மற்றும் சமூக இடைவெளிக்காக மரக்கறி வியாபாரத்துக்கான சந்தையின் மேல்தளம் விஸ்தரிக்கப்பட்டது. எனினும் இவ்வாறு மரக்கறி வியாபாரம் இடம்மாற்றப்பட்டுள்ளதால் வியாபார நடவடிக்கை பாதிக்கப்பட் டுள்ளது என்று காரணம் காட்டி வியாபாரிகள் சிலர் கீழ் தளத்துக்கு வந்து மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பில் அறிந்துகொண்ட இராணுவத்தினர். சமூக இடைவெளி மற்றும் சுகாதார ஒழுங்குக்கு அமைய கீழ் தளத்தில் வியாபாரம் செய்ய அனுமதி வழங்கப்படாது என்று தெரிவித்து வியாபா ரத்தைத் தடுத்தனர்.
இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் தி.தியாகமூர்த்தி;
மரக்கறி சந்தையின் மேல் தளத்தில் மட்டுமே சமூக இடைவெளியுடன் மரக்கறி விற்பனைக்கு சுகாதார பிரிவால் அனுமதி வழங்கப்பட்டது. வியாபாரிகளின் கோரிக்கை குறித்து விரைவில் நடவடிக்கை மேற்கொள்ள ப்படும் - என்றார். (ஐ-17)

# உரிமை கோராத சடலம் அரச செலவில் அடக்கம்

சாவகச்சேரி, ஜூலை 24
சாவகச்சேரிப் பகுதியில் ரயில் மோதி உயிரிழந்தவரின் சடலம் சம்பவம் இடம்பெற்று ஒன்பது நாள்களாகியும் இன்னமும் உரிமை கோரப்படாத நிலையில் சாவகச்சேரி மருத்துவமனை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. 14 தினங்கள் உரிமை கோரப்படாத பட்சத்தில் அரச செலவில் அடக்கம் செய்ய மருத்துவமனை நிர்வாகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.
இந்த விபத்து கடந்த 15 ஆம் திகதி சாவகச்சேரி சந்தைப் பகுதிக்கு அருகில் இடம்பெற்றது. இவரது சடலம் பொலிஸாரால் சாவகச்சேரி மருத்துவமனை சவச்சாலையில் வைக்கப்பட்டது. இவரின் சாவு தொடர்பாக மரண விசாரணைகளின். பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு திடீர் மரண விசாரணை அதிகாரியால் பொலிஸாருக்கு பணிக்கப்பட்டது.
இந்த நபரிடம் கனேமுல்ல பகுதியில் கொள்வனவு செய்த தேசிய லொத்தர் சபையின் அதிஷ்டலாபச்சீட்டு காணப்பட்டது.
சாவகச்சேரி பொலிஸார் கனேமுல்ல பிரிவுக்கான பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டபோதிலும் இதுவரை உறவினர்கள் உரிமை கோரிவரவில்லை. இந்நிலையில் சடலத்தை தொடர்ந்து சவச்சாலையில் வைத்திருக்க முடியாத நிலையில் மேலதிக நடவடிக்கைகளை மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மேற்கொண்டு வருகிறார். (ஐ - 9)

# கொள்கலன் வாகனம் தடம்புரண்டு விபத்து!

வவுனியா, ஜூலை 24
பால் ஏற்றிச்செல்லும் கொள்கலன் வாகனம் ஒன்று தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. அதன் சாரதி காயமடைந்தார். இந்த விபத்து வவுனியா கனகராயன்குளம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.
மாங்குளம் பகுதியிலிருந்து வவுனியா நோக்கிச்சென்ற இந்தக் கொள்கலன் கனகராயன்குளம் பகுதியில் சென்றுகொண்டிருந்த போது, வாகனத்தில் ஏற்பட்ட பழுது காரணமாக கட்டுப்பாட்டை இழந்துதடம்புரண்டுவிபத்திற்குள்ளானது. விபத்தில் கொள்கலனின் சாரதியான கேகாலை பகுதியைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார். விபத்து தொடர்பாக கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-110)



# கொரோனா பரிசோதனையில் சுகாதார மருத்துவ அதிகாரிகள்




சாவகச்சேரி, ஜூலை 24
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கொரோனாத் தொற்று உள்ளிட்ட செயற் பாடுகளிலிருந்து விலகியுள்ளதால் கொரோனா பரிசோதனைக்கு வருவோரை. சுகாதார மருத்துவ அதிகாரிகளே பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கை வழங்கி வருகின்றனர்.
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தினர் தொழிற்சங்க நடவடிக்கையாக கொரோனாத் தொற்றுத் தொடரபான செயல்பாடுகளிலிருந்து விலகி, கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் கடமைக்கு வருகின்ற போதிலும் எந்தவொரு செயற்பாட்டிலும் ஈடுபடாமல் அலுவலகங்களிலேயே உள்ளனர்.
வெளிநாடுகள் மற்றும் தென்பகுதிக்குச் செல்வோர் கொரோனாத் தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழ் பெறுவதற்கு சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்கு வருகின்றனர்.
பணியகத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இவர்களைப் பரிசோதனை செய்தபின்னர் கையொப்பத்திற்காக. மருத்துவ அதிகாரிக்கு அனுப்பி வைப்பர். தற்போது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அப் பணியிலிருந்து விலகியதால் சுகாதார மருத்துவ அதிகாரிகள் பொதுமக்களின் நலன் கருதி தாமே பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கை வழங்கி வருகின்றனர்

# தென்னைச் செய்கை; விரிவாக்கல் நிகழ்வு


யாழ்ப்பாணம். ஜூலை 24
யாழ்ப்பாண விவசாய கல்லூரியில் என்.வி.கியூ - 5 தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தென்னைப் பயிர்ச்செய்கை தொடர்பான விரிவாக்கல் நிகழ்வொன்று நடைபெற்றது.
கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வில் தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் மற்றும் சக உத்தியோகத்தர்கள் இணைந்து வளவாளர்களாகக் கலந்துகொண்டனர்.
தென்னை வகைகள், நாற்றுமேடை முகாமைத்துவம், நிலங்களை வளப்படுத்தலும் தென்னை நடுகை முறைகளும், பசளைப் பிரயோகமுறைகள், நோய்க்கட்டுப்பாட்டு முறைகளும் பராமரிப்பும் போன்ற பல விடயங்களை உள்ளடக்கியதாக களப்பயிற்சி மற்றும் விரிவாக்கல் பயிற்சி என்பன நடைபெற்றன. (ஐ-7)

# உரிமைகளை விட்டுக்கொடுக்கின்ற அபிவிருத்தி எமக்குத் தேவையில்லை

## அடித்துக் கூறுகின்றார் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்

**திருகோணமலை, ஜூலை 24**

**நாம் பலவிதமான இழப்புகளை அடைந்துள்ளோம். அபிவிருத்தி எமக்கு முக்கியம். ஆனால் உரிமையை விட்டுக் கொடுத்து அபிவிருத்தியைச் செய்வதற்கு நாங்கள் தயாராக இல்லை. அடிபணிந்து அபிவிருத்தி பெறுவோம் என்பது எம்மிடம் செல்லாது. உரிமையுடனான அபிவிருத்தி எனின் அதற்கு நாங்கள் எப்போதும் தயாராக இருக்கின்றோம்.**



இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டடைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமாகிய இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலையில் அவருடைய இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஜனநாயகப் போராளிகள் கட்சியினருடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது இருக்கும் அரசியல் சாசனம் தொடர்பில் எமக்கு அதிருப்தி இருக்கின்றது. 1994ஆம் ஆண்டின் பின்னர் சிங்கள மக்களும் இதனை நிராகரிக்கும் வண்ணமே செயற்பட்டுள்ளனர். இன்று இந்த நாட்டில் அனைத்து மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் அரசியல் சாசனம் இல்லை. மக்களின் இணக்கப்பாட்டுடன், மக்களின் சம்மதத்துடன், மக்களின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்பட்ட ஓர் அரசியல் சாசனம் இங்குஇல்லை.எமதுகோரிக்கை நியாயமான நியாயப்படுத்தக் கூடிய ஒன்றே.

நாங்களும் கடந்த அரசின் காலத்தில் அபிவிருத்தி செய்திருக்கின்றோம். எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அபிவிருத்தியை மேற்கொண்டுள்ளார்கள். ஆனால் அது எமது உரிமையை விட்டுக்கொடுத்து பெற்ற அபிவிருத்தி அல்ல. எமது உரிமை தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்துக் கொண்டே இந்த அபிவிருத்திகளை மேற்கொண்டோம்.

போராளிகளின் அர்ப்பணிப்பு வீணாகிவிடக் கூடாது. அந்தப் போராட்டத்தின் வெற்றி தோல்வி என்பது வேறு விடயம். ஆனால் அவர்களின் அர்ப்பணிப்பு வீணாகும் வகையில் ஓர் அரைகுறைத் தீர்வுக்கு நாம் ஒருபோதும் சம்மதிக்கமாட்டோம்.

எனவே நாங்கள் போராளிகளுடன் ஒருமித்துச் செயற்படுவதற்குத் தயாராக இருக்கின்றோம். இது தேர்தலுக்காக மாத்திரம் அல்ல. தேர்தலுக்குப் பிறகும் இந்த ஒற்றுமை தொடரும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்தவதற்காக எமது முன்னாள் போராளிகள் செயற்பட்டுக் கொண்டு வருகின்றார்கள். இதனை நாங்கள் வரவேற்கின்றோம்.

தமிழ் மக்கள் தங்கள் உரிமையுடன் இந்த நாட்டில் தலைநிமிர்ந்து வாழ வேண்டும். அது அவர்களின் பிறப்புரிமை. அதற்காகப் பணியாற்ற வேண்டியது எனது கடமை. அபிவிருத்தி என்ற பெயரில் பின்கதவால் சென்று உதவி பெற்று எமது சமூகம் வாழ முடியாது என்று தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்த பின்னரும் கூட்டமைப்பு ஜனநாயகப் போராளிகள் கட்சியினரை அரவணைத்தே செயற்படவுள்ளோம். அவர்களுடன் இணைந்து செயற்பட இருக்கின்றோம். தமிழ் மக்களுடைய தீர்வுக்காக எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பது என்பது தொடர்பாகவும் நாம் திறந்த மனதுடன் பேசவுள்ளோம்.

நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கிலும் கிழக்கிலும் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளான ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே ஆதரவு வழங்கவுள்ளனர் என்று எமக்கு அறிவித்துள்ளனர் - என்று மேலும் தெரிவித்தார்.

(த-150,40)

# தமிழ்க் கூட்டமைப்பை புலிகள் எதிர்மறையாகக் கூறியதில்லை!

## முன்னாள் போராளிகள் கட்சியின் பேச்சாளர் துளசி தெரிவிப்பு

திருகோணமலை, ஜூலை 24



போர் மௌனிக்கின்ற தறுவாயிலில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பில் எதிர்மறையான செய்தியைத் தெரிவிக்கவில்லை. ஆயுதம் மௌனிக்கப்பட்ட பின்னரும் தமிழ் மக்கள் அரசியல் பலம் பெற்றிருக்க வேண்டும் என்பதே அதன் நிலைப்பாடு என்று ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி தெரிவித்தார்.

திருகோணமலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை நேற்றுமுன்தினம் சந்தித்த பின்னர் ஊடகங்களிடம் கருத்துக் கூறும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் மௌனிக்கின்ற தறுவாயில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பில் எதிர்மறையான செய்தியைத் தெரிவிக்கவில்லை. ஆயுதம் மௌனிக்கப்பட்டதற்குப் பின்னரும் தமிழ் மக்கள் அரசியல் பலம் பெற்றிருக்க வேண்டும் என்பதற்காகப் போராளிகள் சரணடைய வைக்கப்பட்டார்கள். அவர்கள் தொடர்ந்தும் அரசியற் பணியாற்றுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்திருக்கின்றார்கள்.

தமிழ் மக்களுக்குரிய கௌரவமான தீர்வைப் பெற்றுக் கொண்டு அதனூடாக அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவின் வழிநடத்தலின் கீழ் செயற்பட்டுக் கொண்டு வருகின்றது. தற்போதுதமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு எதிராக அரசியல் செய்து கொண்டிருப்பவர்கள் ஒருபோதும் தமிழர்களுக்கான மாற்று அரசியலைச் செய்வதாக இல்லை. மாறாக அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சிப்பதையே அரசியலாகச் செய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் தமிழ் மக்களுக்கான மாற்று அரசியல் என்பதற்கான தகுதியைப் பெற்றுக் கொள்ள முடியாது.




குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு இணைந்து பயணித்தவர்களே கூட்டமைப்பிலிருந்து வெளியில் வந்தபின்னர் கூட்டமைப்பைக் குற்றம்சாட்டும் வேலையைச் செய்துகொண்டிருக்கின்றனர். அவ்வாறு குற்றம் சாட்டுபவர்கள் அனைவருக்குமாக போராளிகள் என்ற ரீதியில் நாங்கள் ஒரு விடயத்தைச் சொல்கின்றோம்.

தமிழர்களின் ஒட்டுமொத்த ஜனநாயகத் தலைமையாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா உள்ளார். அவ்வாறானதொரு பதவிநிலையில் இருந்து கொண்டு சர்வதேச நாடுகள், இலங்கை அரசு போன்ற பல்வேறு தரப்புகளுடன் பேச வேண்டிய நிலைமை ஏற்படும்:

சம்பந்தன் ஐயா விடுதலைப் புலிகளின் உறுப்பினர் இல்லை. அவர் பேச்சு மேடைகளுக்குச் செல்லும் போது, விடுதலைப் புலிகளால் அனுப்பப்பட்ட பிரதிநிதி தான் என்று சொல்ல முடியாது. அவர் ஒரு ஜனநாயகக் கட்டமைப்பின் தலைவர். எமது மக்களுக்கு நிறைய வேலைகள் செய்ய வேண்டி இருக்கின்றன.

நாங்கள் தற்போது ஓர் இக்கட்டான நிலைமையில் இருக்கின்றோம். சிங்கள தேசம் தனித்து ஒரு ஜனாதிபதியை அமைத்துள்ளது. எனவே இந்த ஜனாதிபதி தலைமையில் தமிழர்களுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும். இந்தத் தருணத்தில் நாங்கள் நியாயமான தீர்வை நோக்கி நகர்வதற்கு சம்பந்தன் ஐயா தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற அணியை வலுவுள்ளதாக 20க்கும் மேற்பட்ட ஆசனங்களைப் பெற்று அனுப்பி எமது தீர்வு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இணையத்தளம் பார்க்கத்தெரிந்த சிறு பிள்ளைகளுக்குக் கூடத் தெரியும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் உருவாக்கம் பற்றி - என்று தெரிவித்தார். (த-150)

# மக்கள் சக்தியும் ஐ.தே. கட்சியும் மக்களிடம் தோல்வியடைந்துள்ளன

## இப்படிக் கூறுகின்றார் பிரதமர் மஹிந்த

கொழும்பு, ஜூலை 24



ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் மக்கள் மத்தியில் தோல்வியடைந்த இரண்டு தரப்புகளே. அதனால் இன்று வரையில் மொட்டுக் கட்சியின் வெற்றி தெளிவாகியுள்ளது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு மாலபே நகரத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரண்டாக உடைந்து போயுள்ள ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்குகளைப் பயன்படுத்துவதற்கு பதிலாக நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக இந்தமுறை வாக்குகளை மொட்டு சின்னத்துக்கு வழங்கி அரசுக்கு உதவுமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

ஹம்பாந்தோட்டை ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்கள் இன்று வரையில் தலைமைத்துவமில்லாத நிலைமைக்குள்ளாகியுள்ளனர். கொழும்பு ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்களுக்கும் அவ்வாறான ஒரு தலைவிதி ஏற்படும் தினம் மிகத் தொலைவில் இல்லை.

ரணில் விக்கிரமசிங்க கடந்த அரசில் பிரதமர் பதவியில் இருந்த போதிலும் நாட்டுக்கு வேலை செய்யவில்லை. எங்கள் வெற்றியை மாபெரும் வெற்றியாக்குவதற்கு ஆதரவளியுங்கள்- என்றார். (த)

# சேறுபூசும் அரசியல் கண்டியில் செல்லாது

## கூறுகின்றார் வேலுகுமார்

கண்டி, ஜூலை 24



கண்டி மாவட்டத்தில் போட்டியிடும் வங்குரோத்து வேட்பாளர்களின் சேறுபூசும் அரசியலானது, தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்கு சவாலாக அமையாது.

வாக்காயுதம்மூலம் இம்முறையும் சாதனை படைக்க கண்டி மாவட்ட தமிழ் மக்கள் ஓரணியில் திரண்டு விட்டனர். அதுமட்டுமல்ல வெற்றி வேட்பாளர்களுக்கும் தக்கபாடம் புகட்டுவார்கள் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளருமான வேலுகுமார் தெரிவித்தார்.

கம்பளையில் பரப்புரைக் கூட்டமொன்றில் உரையாற்றியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் என்பது தமக்கான உரிமை, அடையாளம் என்ற உணர்வும் அவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. எனவே, இந்தமுறை மக்கள் வரலாற்றுச் சாதனை படைப்பார்கள் என்பது உறுதி.

இதனால் கதிகலங்கிப் போயுள்ள சில பேரினவாதிகள், தமிழர்களின் சாதனையை தடுப்பதற்காக பிறப்பால் மட்டுமே தமிழர்களான சில வெற்று வேட்பாளர்களை தேர்தலில் களமிறக்கியுள்ளனர். அவர்கள் ஊடாக சேறுபூசும் அரசியலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இருந்தாலும் விழிப்பாகவே இருக்கவேண்டும். - என்றார். (த)

# சர்வாதிகாரியான சம்பந்தனையா மீளத் தேர்ந்தெடுக்கப்போகிறீர்கள்?

## கேள்வியெழுப்புகின்றார் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஜூலை 24

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் சுயநலம் கொண்டவர். பந்தாவுக்கும் படாடோபத்துக்கும் அடிமை என்பதை நான் அறிந்திருக்கவில்லை. தனது கூட்டுக் கட்சியில் ஒருவித சர்வாதிகாரப் போக்கையே கடைப்பிடித்தார். இவ்வாறான ஒருவரை மீண்டும் ஒருமுறை தேர்ந்தெடுக்கப் போகின்றீர்களா?**



இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் முதன்மை வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன்.

தமிழ்மக்கள்தேசியக்கூட்டணியின் திருகோணமலை பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் எதிர்காலம் இப்பொழுது உங்கள் கைகளில் உள்ளது. சம்பந்தன் ஐயாவை நம்பினால் எதுவுமே கிடைக்காமல் போகும். ஏன் என்றால் அவரால் எதுவுமே இதுவரையில் பெற்றுக் கொடுக்கமுடியவில்லை. ஒன்றுமே பெற்றுக்கொடுக்கவில்லையென்றாலும் பரவாயில்லை. மன்னிக்கலாம். ஆனால் அவர் சென்றமுறை பதவிக்கு வந்த காலம் தொடக்கம் இன்று வரையில் தமிழ் மக்களுக்குத் தொடர்ச்சியாக இன்னல்களை ஏற்படுத்தி வந்துள்ளார். 2015ஆம் ஆண்டில்இருந்ததிருகோணமலை அல்ல நாம் இப்போது காணும் திருகோணமலை. சிங்கள ஆதிக்கம், பௌத்த ஆதிக்கம், படையினர் ஆதிக்கம் கூடிய நகரத்தையும் அதன் சுற்றுப் புறங்களையுமே நாம் இன்று காண்கின்றோம்.

தமிழர்களுக்கு இதோ ஒரு புதிய அரசமைப்பு வருகின்றது. அவர்களின் பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டுவிடும் என்று கூறி சிங்கள அரசை கோபமூட்டாமல் இருங்கள், உங்கள் பிரச்சினைகளை வெளிக்காட்டாதீர்கள் என்று தமது கட்சிக்காரரையும் தமிழ்ப் பொது மக்களையும் கட்டுப்படுத்தி வைத்த சம்பந்தன் இப்பொழுது மௌனம் சாதிக்கின்றார். ஆனால் அரசுக்கு சவால் விடுகின்றார். தான் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்த போது சவால் விடவேண்டியவர் பதவி இழந்து வீட்டுக்கு வந்த பின் சவால் விடுகின்றார்.

தமிழ் மக்களின் உரிமைகளைப் புறக்கணித்தால் அரசுக்கு கேடு விளையும் என்கின்றார். 15 பேர் நாடாளுமன்றில் இருந்தபோதே அரசுக்கு நெருக்குதல்கள் கொடுத்து பெறுவதைப் பெறவேண்டும் என்ற போது "இல்லை! நாங்கள் கனவான்கள் அரசியல் நடத்துகின்றோம். அவர்கள் எமது மேன்மையான இணக்க அரசியலுக்கு செவிசாய்ப்பார்கள்" என்றவர் இன்று சவால் விடுகின்றார். கூட்டிலிருந்து பறவை பறந்து சென்றபின் கூட்டை மூடுவது போல் இருக்கின்றது அவரின் செயல்கள்.

கருணா அம்பாறையில் இருந்து கொண்டு "தமிழர்களே! கூடப் பிள்ளைகளைப் பெறுங்கள். முஸ்லிம்களை விஞ்சப் பிள்ளைகளைப் பெறுங்கள்" என்கின்றார். பிள்ளைகளைப் பெறுவது சிரமமில்லை. அவர்களை வளர்ப்பது எப்படி என்று பெற்றோர்கள் அவரைக் கேட்கின்றார்கள்.

கிழக்கு மாகாணநிலை தற்போது எப்பொழுதும் இல்லாத வகையில் தமிழ் மக்களுக்கு சிரமம் மிகுந்ததாக மாறியுள்ளது. அவ்வாறான ஒரு நிலை ஏற்பட சம்பந்தன் பெருங்காரணம். அவரின் மூன்று குணங்களே அதற்கான காரணம்.

அவையாவன எந்த ஒருபிரச்சினையையும் அவர் அப்போதே தீர்ப்பதில்லை. "பேசுவோம்", "பார்ப்போம்" என்று தட்டிக்கழிக்கும் போது பிரச்சினை விஸ்வரூபம் எடுக்கின்றது.

மற்றையது கனவான் அரசியலை சிங்களத் தலைவர்கள் மெச்சுவார்கள். எமக்குரியவற்றைத் தருவார்கள் என்ற அவரின் தப்புக் கணக்கு. ஏற்கனவே திட்டமிட்டு தமிழர்களை ஒதுக்கும், விரட்டும் மனோபாவத்தில் இருக்கும் சிங்களத் தலைவர்கள் தமது கனவான் அரசியலை மெச்சுவார்களா என்று சற்றேனும் அவர் சிந்தித்துப் பார்க்கவில்லை.

அடுத்தது இணக்க அரசியல் மூலம் தான் சுகமாக, வசதியாக இருக்க வேண்டும் என்ற அவரின் சுயநலப் போக்கு. அடிப்படையில் அவர் அரசியலை சுயநலக் காரணங்களுக்காகத்தான் இதுவரை பாவித்து வந்துள்ளார் என்பதை இப்போது நாம் உணர்கின்றோம்.

ஓரிருவர் தாம் நினைத்தபடி தமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப முடிவுகளை எடுத்து எமது மக்களின் பிரச்சினைகள், உரிமைகள் தொடர்பில் செயற்பட முடியாது. அதனால் தான் நிலத்திலும் புலத்திலும் உள்ள எமது புத்திஜீவிகளை உள்வாங்கி நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும் என்று கூறிவருகின்றேன். இதுவே தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்கும்- என்றார். (த)

# சில்லறைகளுடன் விவாதிக்கத் தயாரில்லை

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆணித்தரம்



யாழ்ப்பாணம், ஜூலை 24

கொள்கைசார்ந்த ஆரோக்கியமான விவாதமொன்றை முன்னெடுப்பதற்கு எப்போதுமே தயாராகவிருக்கின்றேன். அதற்காக சில்லறைகளுடன் விவாதத்தில் ஈடுபடமுடியாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், அதன் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்கினேஸ்வரன் ஆகியோர் பொதுவெளியில் விவாதிப்பதற்கு முன்வருவார்களாயின் தாயகத்தின் எந்தப்பகுதியில் அதனை நடத்தினாலும் பங்குகொள்வதற்குத் தயாராகவே உள்ளேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும், வேட்பாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தமிழ் மக்கள் கூட்டணியின் பங்காளிக்கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி என். சிறிகாந்தா மற்றும் தமிழ் மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் பகிரங்க விவாதத்துக்கு தயாராக இருக்கின்றோம் என்று அறிவித்திருந்தனர்.




அத்துடன் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் நான்கு தடவைகள் ஏற்கனவே விவாதம் நடத்தியுள்ள நிலையில் தற்போது நொண்டிச்சாட்டுக்களை முன்வைத்து விவாத மேடையைத் தவிர்த்துச் சென்றுகொண்டிருக்கின்றார் என்றும் சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார். இந்தநிலையிலேயே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கொள்கை சார்ந்து விவாதமொன்றுக்கு நான் எப்போதுமே தயாராகவிருக்கின்றேன். என்னுடன் விவாதம் செய்பவர்கள் பொறுப்புக்கூற வல்லவர்களாக இருக்க வேண்டும். அவர்களின் நிலைப்பாடுகளுக்கும், கட்சியின் நிலைப்பாடுகளுக்கும் மாறுபட்ட நிலைமை இருக்கக்கூடாது.

அவ்வாறு இரண்டு வேறுபட்ட தரப்பினருடன் பொதுவெளியில் விவாதம் நடத்துவது பொருத்தமற்றது. சுருங்கக்கூறின் சில்லறைகளுடன் விவா திப்பதில் எவ்விதமான பயனுமில்லை. சுமந்திரன் பேச்சாளராக இருந்தாலும் கூட்டமைப்பின் ஏனைய தலைவர்களும் அந்தக்கருத்துக்கள் அவரின் தனிப்பட்ட கருத்துக்கள் என்றே குறிப்பிட்டனர். (த)

# தமிழர் தரப்பு எதைக் கேட்டாலும் தென்னிலங்கைக்கு அது பிரிவினையே!

## சாடுகின்றார் சித்தார்த்தன்

யாழ்ப்பாணம், ஜூலை 24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை தமிழ் மக்களின் கோரிக்கையை முன்வைத்துள்ளது. தமிழர் தரப்பு எதனை வலியுறுத்தினாலும் பிரிவினைவாதத்தைக் கோருகின்றார்கள் என்றே தென்னிலங்கைத் தலைவர்கள் பரப்புரை செய்கின்றனர். இதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை தொடர்பில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் கூறிவரும் கருத்துக்கள் தொடர்பில் கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை தொடர்பில் சிங்கள மக்கள் மத்தியில் கடுமையான பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன. தேர்தலுக்காக தென்னிலங்கையில் வழமையாகவே இந்தச் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது. இதனை நான் முக்கியமாகக் கருதவில்லை. தமிழர் தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சொல்லுகின்ற கருத்துக்கள் பிரிவினைவாதத்தை மையப்படுத்தியதாகவே தென்னிலங்கைத் தலைவர்களின் கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன எங்களுக்கு இது பிரச்சினை அல்ல.

எங்களுடைய தேர்தல் அறிக்கையைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய அரசியல் தீர்வு தொடர்பில் குறிப்பாக கடந்த அறுபது எழுபது வருடங்களாக தமிழ் அரசுக் கட்சி. அதற்குப் பின்னராக தேர்தல் களங்களில் நின்ற இயக்கங்கள்கூட சமஷ்டி அரசமைப்பையே கோரிநின்றன. மக்களும் அதற்காகவே பெருமளவில் வாக்களித்து வந்துள்ளார்கள். ஆகவே இன்றும் எமது மக்கள் அந்தக் கோரிக்கைகளை முன்வைக்கின்ற நிலையில் இருக்கின்றார்கள். எனவே தமிழ் மக்கள் மத்தியில் இந்தத் தேர்தல் அறிக்கை சரியானதாகவே இருக்கும். அரசியல் தீர்வு மட்டுமன்றி அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இந்தமுறை நாங்கள் கூறியுள்ளோம். கடந்த ஆட்சிக் காலத்தில் எங்களால் - எங்களுடைய அழுத்தங்கள் காரணமாக பல அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டுள்ளன. அதனை மக்கள் திருப்திகரமாகவே பார்க்கின்றார்கள்.



எனவேதான் அரசியல் தீர்வையும் அபிவிருத்தித் திட்டங்களையும் ஒரு சமாந்தரக் கோடுகளில் கொண்டு செல்லவுள்ளோம். இதுவே எங்கள் நோக்கமாக வுள்ளது - என்றார். (த)

# பிரச்சினையைத் தீர்க்காது நீர்த்துப் போகச்செய்துள்ளனர்

*கூட்டணியின் வேட்பாளர் குற்றச்சாட்டு*



மன்னார், ஜூலை 24
தேசிய பிரச்சினையை அரசியல் ரீதியில் தீர்த்து வைப்பார்கள் என்று நம்பியவர்கள் அதை நீர்த்துப் போகச் செய்துள்ளார்கள். போரின் பின் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் கட்டியெழுப்பப்படவில்லை. இவற்றை தேசியத்தோடு கூடிய அபிவிருத்தியாகச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் அரசியலுக்குள் வந்துள்ளேன் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வன்னித் தேர்தல் தொகுதியின் மன்னார் மாவட்ட பெண் வேட்பாளர் யூட் மாலினி வெனிற்றன் தெரிவித்தார்.

அவருடைய அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மக்களின் வாழ்க்கையை அவர்களுடைய பொருளாதாரத்தை அவர்களின் கல்வியை மிகவும் உன்னதமான இடத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பாகவுள்ளது.

அதேவேளை, நான் அரசியலுக்கு வருவதற்கு பல காரணங்களில் மிக முக்கியமான காரணம் எமது மக்களின் இனவிடுதலை. அதற்காக சர்வதேசத்துக்கு போர்க் குற்றங்களையும் எம்மீது திணிக்கப்பட்ட பல்வேறுபட்ட கொடுமைகளையும் இனச் சுத்திகரிப்பை யும் கடந்தகால அரசியல் நீர்த்துப் போகச் செய்துள்ளது.




ஆகவே அதற்கான மாற்றுவழியை நோக்கி இட்டுச் செல்ல வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது.

போரில் பாதிக்கப்பட்ட மக்கள் மீளக்குடியேறிய பின்னர் அவர்களுக்குரிய எந்த வாழ்வாதார உதவித்திட்டங்களும் செய்யப்படவில்லை. மாவீரர் குடும்பங்கள் பெண்தலைமைத்துவ குடும்பங்கள் பரிதாபமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன. போராளிகள் வேலையற்று என்ன செய்வது என்று தவித்துக் கொண்டிருக்கிறார்கள். பெற்றோரை இழந்த பிள்ளைகள் ஊனமுற்ற பிள்ளைகள் சமூகத்தில் துன்பப்படுகிறார்கள். அவர்களுக்கான எந்த வேலைத்திட்டங்களும் சரியாக முன்னெடுக்கவில்லை.

ஆகவே என்னுடைய அரசியல் நகர்வு என்பது இவ்வாறு செயற்படுத்தப்படாமல் உள்ளவற்றையும் சீர் செய்ய வேண்டும்; கல்விக்கான விவசாயத்துக்கான முன்னேற்றமான வேலைத்திட்டங்களையும் மாவீரர் குடும்பங்கள் மாற்றுத்திறனாளிகள் போன்றவர்களுக்கான சுய தொழில் மூலம் முன்னேற்றமடையச் செய்யும் வேலைத்திட்டங்களை செய்வதே-என்றார். (த-213))

# மனோ கணேசனை வெல்லவைப்பது கொழும்புத் தமிழர்களின் கடமையே

*கூட்டமைப்பின் சிறிதரன் கூறுகின்றார்*



**கிளிநொச்சி, ஜூலை 24**
**ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற தொழிற்சங்கத்தின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டியது கொழும்பு மாவட்ட தமிழர்களின் கடமை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வேட்பாளருமான சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.**

அவர் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளில் தமிழர்கள் செறிந்து வாழ்கின்றனர். அவர்கள் தமிழ்க் கட்சிகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற தமிழ் வேட்பாளர்களுக்கே வாக்களிப்பார்கள். ஆனால் கொழும்பு மாவட்ட நிலைவரம் அவ்வாறானதல்ல.

இதற்கு நேர்மாறானது. காரணம் இலங்கையிலுள்ள அனைத்து இன மக்களும் வாழுகின்ற மாவட்டம். அங்கு வசிக்கின்ற சிங்கள மக்கள் சிங்கள தேசியக் கட்சிகளுக்கே தமது வாக்குக்களை வழங்குவார்கள். ஆகவே அங்கு இருக்கின்ற தமிழர்கள் தமது வாக்குகளை சிதறடிக்காது தமது விருப்பு வாக்குகளை மனோகணேசனுக்கு வழங்கி கடந்த நாடாளுமன்ற தேர்தலில் கொடுத்த ஆணையை விட பல மடங்கான ஆணையை வழங்க வேண்டிய கடமை உள்ளது.

இலங்கையில் உள்ள தமிழர்கள் பாதிப்புக்கு உள்ளாகும்போது அல்லது அவர்களுக்கு அநீதி இழைக்கப்படும்போது குரல் கொடுக்கின்ற ஒரு மனிதநேய வாதியாகவே மனோ கணேசனைப் பார்க்கின்றேன். தமிழர் தரப்பு நியாயங்களையும் சிங்கள பேரினவாத அரசின் போலிப் பரப்புரைகளையும் தகர்த்து அதன் உண்மைத் தன்மைகளை சிங்கள மக்களுக்கு வழங்கக்கூடிய பேச்சாற்றல் மற்றும் மொழியாற்றல் உள்ள தமிழ் அரசியல்வாதிகளில் இவரும் ஒருவர். ஆகவே இவ்வாறானவர்கள் என்றுமே தவிர்க்கப்பட முடியாதவர்கள் என்ற உண்மையை கொழும்பு மாவட்ட தமிழர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நாடு இராணுவ ஆட்சியை நோக்கி நகர்ந்து கொண்டுள்ளதை அனைவரும் அறிகின்றோம், பார்க்கின்றோம். இந்த நிலையில் தமிழர்களின் இருப்பைத் தக்கவைக்க தமிழர்கள் தங்களின் அடையாளங்களுடன் வாழ அனைத்துப் பகுதிகளிலும் தமிழர் நலன்களுக்காக உருவாக்கப்பட்டு செயற்படுகின்ற தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் தமிழர்கள் ஒன்றாகப் பயணிக்க வேண்டிய சந்தர்ப்பத்தை காலம் உருவாக்கியுள்ளது - என்றுள்ளது. (த)

# மன்னார் அபிவிருத்திக்கு மட்டும் 106 மில்லியன்

*செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு*



மன்னார், ஜூலை 24
கடந்த காலங்களில் மன்னார் மாவட்ட அபிவிருத்திக்கு மாத்திரம் தனது பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் துரித அபிவிருத்தி நிதி மூலங்களிலிருந்து நூற்றி ஆறு மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் செல்வம் அடைக்கலநாதான் தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதுவும் செய்யவில்லை என்று சிலர் பொய்ப் பிரசாரங்கள் செய்து வருகிறார்கள். ஆனால் நாங்கள் அபிவிருத்தி செய்துள்ளோம். இதன்படி வழிபாட்டுத்தலங்களுக்கு 36.5 மில்லியன், பாடசாலைகளின் உள்ளகவீதிகள், பொதுக் கட்டடங்கள், மக்களின் வாழ்வாதாரங்களுக்கு என்று 69.95 மில்லியனுமாக மன்னார் மாவட்டத்துக்கு மாத்திரம் 106 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (த-213)

# உங்கள் கட்சிக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்?

*யாழில் நாளை மக்கள் மன்றம்*

மன்னார், ஜூலை 24
"நாடாளுமன்றத் தேர்தலில் உங்கள் கட்சிக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்" என்னும் தொனிப்பொருளிலான மக்கள் மன்றம் ஒன்று நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் பல கட்சிகள் வட மாகாணத்தில் களம் இறங்கியுள்ளன. இதனால் வாக்காளர்கள் மத்தியில் என்றும் இல்லாதவாறு யாருக்கு வாக்களிப்பது என்ற ஒரு தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது. இவற்றை கவனத்துக்கு எடுத்துள்ள தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் "நாடாளுமன்றத் தேர்தலில் உங்கள் கட்சிக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்" என்ற தலைப்பில் அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களும் சமூக பிரதிநிதிகளும் பங்கேற்கும் மக்கள் மன்றம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரனின் நெறிப்படுத்தலின் கீழ் இந்த மக்கள் மன்றம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9.15 மணி முதல் நண்பகல் வரை நடைபெற உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் அரசியல் கட்சிகளின் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் (த.தே.கூ.), க.சுரேஸ் பிரேமச்சந்திரன் (த.ம.தே.கூ.), சி.தவராசா (ஈ.பி.டி.பி), பொ.ஐங்கரநேசன் (த.தே.ப.இ.), திருமதி. விஜயகலா மகேஸ்வரன் (ஐ.தே.க.)ஆகியோரும். சிவில் சமூக பிரதிநிதிகள் சார்பாக கலாநிதி.கே.ரீ. கணேசலிங்கம், அருட்பணி எஸ்.ஜெயகுமார் அடிகளார், தவத்திரு வேலன் சுவாமிகள், மறவன்புலவு க. சச்சிதானந்தன், செல்வி.டிலோஜினி மோசேஸ் ஆகியோரும் கலந்து கொள்ளுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-60)

# 'கித்துல்' கைத்தொழிலை மீள ஆரம்பிக்க நடவடிக்கை

*பரப்புரையில் ஜனாதிபதி கோத்தா*



கொழும்பு, ஜூலை 24
மதுவரி அதிகாரிகளின் சுற்றிவளைப்புகள் காரணமாக கைவிடப்பட்டுள்ள கித்துல் கைத்தொழிலை மீண்டும் கட்டியெழுப்பப்படும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ காலியில் நேற்றுமுன்தினம் பரப்புரை மேற்கொண்டார். அதன் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்கள் பல இடங்களில் முன்வைத்த பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்திய ஜனாதிபதி, மாதாந்த கொடுப்பனவு ஒன்றை வழங்குவது குறித்து கவனம் செலுத்தினார்.

அறநெறிப் பாடசாலைகளின் பாட விதானத்தில் உள்ள சில பகுதிகளை பாடசாலை பாட விதானத்திற்குட்படுத்தி பிள்ளைகளை அறநெறி பாடசாலைகளை நோக்கி வழிப்படுத்த முடியும் என்று சந்திப்புக்கு வருகை தந்திருந்த மகாசங்கத்தினர் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். அதற்கான குறித்த பரீட்சையில் சித்தி பெற்றிருப்பது அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு கட்டாயமாக்கப்படவேண்டுமென்றும் மகாசங்கத்தினர் தெரிவித்தனர்.

பாதாள உலகக் குழுவினர் மற்றும் போதைப்பொருள் பிரச்சினையை ஒழிப்பதற்கு விசேட செயலணியொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# விஞ்ஞாபனத்துக்கு வக்கில்லாதோர் விமர்சிப்பது வெட்கக்கேடானது!

## மஹிந்தவைப் போட்டுத் தாக்குகின்றார் சஜித்



கொழும்பு, ஜூலை. 24

"நாடாளுமன்றத் தேர்தலுக்கான விஞ்ஞாபனத்தை வெளியிட வக்கில்லாமல் அஞ்சுகின்ற அரசு, எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை திரிவுபடுத்துவதும், விமர்சிப்பதும் வெட்கக்கேடானது."

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினதும் நாடாளுமன்றத் தேர்தல் விஞ்ஞாபனங்களுக்கிடையில் ஒருமித்த பண்புகள் காணப்படுகின்றன என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாடாளுமன்றத் தேர்தலுக்கென அரச கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி விஞ்ஞாபனம் வெளியிடவில்லை. ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தைவைத்தே அரசு சமாளிக்கின்றது. ஏனெனில் ஜனாதிபதித் தேர்தலின்போது நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் அரசு நிறைவேற்றவில்லை. அதனால் நாடாளுமன்றத் தேர்தலுக்கென விஞ்ஞாபனத்தை வெளியிட அரசு அச்சமடைகின்றது.

இப்படிப்பட்ட அரசு எமது கட்சியின் விஞ்ஞாபனமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விஞ்ஞாபனமும் ஒத்துப்போகின்றது எனத் தேர்தல் மேடைகளில் விமர்சிப்பது வெட்கக் கேடானது.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு அவர்களின் ஆணையைப் பெறும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளது.

எமது கட்சி நாட்டிலுள்ள சகல மக்களினதும் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்களின் ஆணையைப் பெறும் வகையில் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும், ஒருமித்த நாட்டுக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கருத்தை நாம் வடக்கிலும் தெற்கிலும் எந்த மாற்றமும் இல்லாமல் தெரிவித்து வருகின்றோம். அதைத் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் உள்ளடக்கியுள்ளோம். ஆனால், அரசு அதைத் திரிபுபடுத்தி எமக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது" - என்றார். (அ.22)

# இலங்கை அரசுடன் பேசுவதால் உரிமையை வென்றுவிடமுடியாது

## விக்னேஸ்வரன் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜூலை 24

இலங்கை அரசுடன் பேசுவதாலோ அல்லது இலங்கைக்குள் பேசுவதாலோ எமக்கான உரிமையை நாம் என்றுமே பெற்றுவிட முடியாது என்பதையே வரலாறு எமக்கு இடித்துரைக்கின்றது. எமது மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணை ஒன்றின் மூலமான பரிகார நீதிக்கூடாகவே எமது உரிமைகளை நாம் அடையமுடியும்.

இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது:

இலங்கைத் தீவின் வரலாற்றில் தமிழர்களின் செங்குருதிக் கறைபடிந்த நாள்களில் 1983 ஜூலை 23ஆம் நாள் முக்கியமானது. புத்தரின் போதனைகளைக் கடைப்பிடிப்பவர்கள் என்று கூறிக்கொள்வோர் அன்று தென்னிலங்கையில் ஒருகையில் வாக்காளர் பட்டியலையும் மறுகையில் கத்திகள், கோடரிகள், வாள்கள் என்பனவற்றுடன் வீடுவீடாகச் சென்று தமிழர்களை வெட்டியும் எரித்தும் கொன்றொழித்த நாள். தமிழர்களின் உடைமைகளைத் தீயிட்டும் சூறையாடியும் சிங்கள பௌத்த பேரினவாதம் தாண்டவமாட வழிவிட்ட நாள். விடுதலை வீரன் குட்டிமணி தனக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டால் தனது கண்களைத் தானம் அளிக்கும்படியும் அப்போது மலரப்போகும் தமிழீழத்தைத் தனது கண்கள் காணும் என்று கூறியதற்காக வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிங்க எக்காடையர்களால் அவரின் கண்கள் பிடுங்கப்பட்ட நாள். குட்டிமணியுடன் தங்கதுரை உட்பட சிறையிலிருந்த 53 அரசியற் கைதிகள் கோரமாகக் கொன்றொழிக்கப்பட்ட நாள்.

இன்று நிலவும் சூழ்நிலையும் 1983 இல் இருந்த சூழ்நிலையும் ஒரேவிதமாகவே காணப்படுகின்றன. சிங்கள பௌத்த துறவிகள் எதற்கெடுத்தாலும் குருதி ஆறு ஓடும் என்று அச்சுறுத்துவது மீண்டும் எம்மீதோ அல்லது எமது முஸ்லிம் சகோதரர்களின் மீதோ எவ்வேளையும் ஒரு தாக்குதல் நடைபெறலாம் என்பதையே கட்டியம் கூறி நிற்கின்றது.


இந்தநாளில் படுகொலை செய்யப்பட்ட அனைத்து மக்களுக்கும் எமது அஞ்சலிகள் - என்றுள்ளது. (த)

# அமைச்சுப் பதவி கேட்டால் உதைவாங்கியே ஓடுவீர்கள்

## கருணா அம்மான் சாட்டை







மட்டக்களப்பு, ஜூலை 24

சுமந்திரனும் சம்பந்தனும் மஹிந்தவிடம் அமைச்சுப் பதவிகள் கேட்டுச்சென்றால் உதைவாங்கி ஓடவேண்டிய நிலையேற்படும் என்று தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அம்பாறை மாவட்ட சுயேச்சைக்குழு வேட்பாளருமான விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்த பரப்புரைக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை கோட்டைக்கல்லாறில் நடைபெற்றது.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு என்பது சிதறிப்போகும் என்று எனக்கு நன்றாகத் தெரியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் பங்கெடுத்தவனில் நானும் ஒருவன். தமிழர்களின் போராட்டம் உலகின் கவனத்தில் ஈர்க்கப்படுவதில்லையென்ற காரணத்தினாலேயே இது ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் சிறந்த முறையில் செயற்பட்டது. தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பொறுப்பாக சம்பந்தனை நியமித்தார். முன்னர் சிறந்த தலைவர்கள் இருந்து சிறந்த முறையில் கடமையாற்றினார்கள். இன்று கட்சி மாற்றமடைந்து தமிழ் மக்களை அடகுவைத்து தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை குழிதோண்டிப் புதைத்து மாற்று சமூகத்திடம் விற்றுவிட்டனர். அந்தளவுக்கு கேவலமான கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாறிவிட்டது.

மஹிந்த, கோத்தா அரசு குறைந்தது 20 வருடங்களுக்கு நீடிக்கும். இந்த 20 வருடங்களை நாங்கள் பயன்படுத்த வேண்டும். இந்த அரசுக்கும் எனக்குமிடையில் நல்ல நெருக்கம் இருக்கின்றது. எனக்கு எதிராக கூக்குரல் இட்டார்கள். எனினும், எதுவும் செய்யமுடியவில்லை.

கிழக்கு மாகாணத்தின் இருப்பை தக்கவைப்பதற்கான வழியை முதலில் பார்க்க வேண்டும். ஹிஸ்புல்லாவின் அரபுக்கல்லூரியை அரசு பொறுப்பேற்றிருக்கா விட்டால் அதன் ஊடாக பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கும். தற்போதும் உலமாக்கள் சபை ஊடாக அரேபிய நாடுகள் பெருமளவிலான நிதியை வழங்குகின்றது. கிழக்கில் காணிகளைக் கொள்வனவு செய்வதற்காக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது. ஹிஸ்புல்லா இன்று 800 ஏக்கர் காணியை வாங்கி வைத்துள்ளார். தமிழர்களின் பெயர்களிலேயே இந்த காணிகள் கொள்வனவு செய்யப்படுகின்றன - என்றார். (த)

# ரணில் ஒரு கோடரிக்காம்பு

## சாடுகின்றார் அப்துல்லா மஃறூப்



திருகோணமலை, ஜூலை 24

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் கோத்தாவின் வெற்றியின் பின்தான் தெரியவந்தது எங்களுக்குள் ஒரு புல்லுருவிக் கோடரிக் காம்பாக ரணில் விக்ரமசிங்க இருக்கின்றார் என்று. அவர் தற்போது மஹிந்த கோத்தாவுடன் டீல் வைத்து ஆட்டம் போடுகிறார். சஜித் பிரேமதாசவின் தோல்விக்கு இவரே காரணம்.

இவ்வாறு முன்னாள் பிரதியமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான அப்துல்லா மஃறூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுத் தேர்தலில் 52 வீதமான வாக்குகளைப் பெற்று 3/2 பெரும்பான்மை பெற முடியாது. ஆகக் குறைந்தது 80 தொடக்கம் 90 வரையான ஆசனங்களையே பெற முடியும். இதனுடன் இணைந்து ரணில் விக்கிரமசிங்க யானையை பூனையாக மாற்றி செயற்பட்டாலே எப்படியோ இவரால் ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள முடியாது.

சொற்ப ஆசனங்களைக் கூட ரணிலால் பெற முடியாது .ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் உடன் இன்றைக்கு சிறுபான்மைக் கட்சிகள் கைகோர்த்துள்ளன. மலையக மக்கள் முன்னணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஹெல உறுமய போன்ற கட்சிகள் இணைந்து அதிகூடிய ஆசனங்களைப் பெறலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 15 க்கும் குறையாத ஆசனங்களைப் பெறுகின்றபோது இது வாய்ப்பாக அமையலாம்.

தேசிய கிரிக்கெட் முன்னாள் வீரர்களான மஹேல சங்கக்கார போன்றவர்கள் கூட சஜித்துடன் இணைந்துள்ளனர்.

சிறுபான்மைக் கட்சிகளின் ஒன்றிணைவால் நாட்டிலுள்ள அனைத்து இனமக்களுடைய அபிலாசைகளையும் வெல்லக்கூடிய ஒரு வாய்ப்பாகவும் சுபீட்சமிக்க நாடாக மாற்றவும் இந்தத் தேர்தல் எமக்கு கைகொடுக்கும் - என்றார். (த)

# பாதாள உலகத்தினரை ஒழிக்க விசேட செயலணி

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 24
பாதாள உலகத்தினர் மற்றும் போதைப் பொருள் பிரச்சினையை ஒழிப்பதற்கு விசேட செயலணியொன்று நியமிக்கப்பட்டுள்ளது. கிராமிய பிரதேசங்களில் அத்தகைய செயற்பாடுகள் குறித்து பெயர் குறிப்பிடாது செயலணிக்கு தெரிவிப்பதன் மூலம் மக்கள் எதிர்பார்க்கும் இலக்கை விரைவாக அடைந்துகொள்ள முடியும். இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

காலி மாவட்டத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

உடுகம தள வைத்தியசாலையில் தீவிர சத்திர சிகிச்சைப் பிரிவு மற்றும் ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காலி மாவட்டத்தில் உள்ள அனைத்து வீதிகளையும் அபிவிருத்தி செய்யவுள்ளோம். முன் எப்போதும் இல்லாத வகையில் மக்கள் உற்சாகத்துடன் வாக்களிப்பதற்கு ஊக்குவிக்கப்படல் வேண்டும்- என்றார்.

சங்கைக்குரிய பத்தேகம சமித்த தேரோ மற்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரன ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். இந்துருவ பிரதேசத்தில் சுமார் 40 வீடுகளுக்கு இது வரையில் குடிநீர் கிடைக்கப் பெறாத காரணத்தினால் மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் குறித்தும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. (எ)

### தாக்குதல் குற்றச்சாட்டில் கைதானோருக்குப் பிணை

கொடிகாமம், ஜூலை 24
கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மிருசுவில் பகுதியில் குடும்பப் பிரச்சினை காரணமாக நபர் ஒருவரை தாக்கினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவர் நேற்று வியாழக்கிழமை பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஒரு மாதத்திற்கு முன்பு கணவன், மனைவியை தாக்கியதால் ஆத்திரமடைந்த மனைவியின் சகோதரர்களே மேற்படி தாக்குதலை நடத்தினர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. பொலிஸால் தேடப்பட்டுவந்த இருவரும் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் நேற்று பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ம-159)

### முன்வரிசை ஆசன சண்டையால் பெரமுன கூட்டத்தில் சலசலப்பு

கொழும்பு, ஜூலை 24
கந்தளாய் நகரில் பொதுஜன பெரமுன நேற்று நடத்திய மக்கள் சந்திப்பின்போது அமைதியின்மை ஏற்பட்டது. இம்முறை பொதுஜன பெரமுன சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற ஆரியவதி கலப்பதிக்கு முன்வரிசையில் ஆசனம் ஒதுக்கப்படாமையே இந்த அமைதியின்மைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பெரமுனவின் மக்கள் சந்திப்பு கந்தளாய் நகர மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்த மக்கள் சந்திப்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வந்த பொதுஜன பெரமுன பட்டியலில் போட்டியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் ஆரியவதி கலப்பதிக்கு மேடையில் பின்வரிசை ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்ததால் அவர் ஆத்திரமடைந்தார். அதையடுத்து அங்கு அமைதியின்மை ஏற்பட்டது. பின்னர் ஒருவாறு சுமுக நிலைமை ஏற்பட்டது. (எ)

### பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜூலை 24
வன்முறை அற்ற தேர்தல் தொடர்பான அறிவூட்டும் பொருட்டு தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்களாலும், நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தாலும் பயிற்சிப் பட்டறையொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் பொதுநூலக கேட்போர் கூடத்தில் நாளை காலை 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை இந்தப் பயிற்சிப் பட்டறை முன்னெடுக்கப்படவுள்ளது. (ம)

### கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி சாவகச்சேரி (248)
மத்தியஸ்தர் சபை உறுப்பினர்.
**வேலுப்பிள்ளை இராசதுரை**
அவர்கள் 22.07.2020 ஆம் திகதி அமரத்துவம் அடைந்தார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துப்படுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.
**தவிசாளர், உறுப்பினர்கள்,**
**மத்தியஸ்தர் சபை, சாவகச்சேரி.**

### 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னத்தம்பி
வடிவேலுப்பிள்ளை
(பங்குதாரர் நியூ சோபிதா நகைமாடம்)
மறைவு 01.08.2003
திதி:- 24.07.2020
தோற்றம் 08.10.1939

அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் பதினேழு ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயர்
இதயத்தை விட்டகலா நினைவுகளுடன்
இறைவனை வேண்டுகின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமகள்மார், பேரப்பிள்ளைகள்.**
**"திருவேரகம்"**
சுதுமலை தெற்கு, மானிப்பாய்
நியூ சோபிதா நகைமாடம்
74/1, (184), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(J.1260) (13.17)

### 20ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**அம்பலவாணர்**
**குலசேகரம்** (J.P)
(இளைப்பாறிய நூலகர்,
சாவகச்சேரி ட்ரிபேர்க் கல்லூரி.
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி
உறுப்பினர்)
என்றும் உங்கள் நினைவுடன்
ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்
**மனைவி, பிள்ளைகள்.**
**கைதடி, நுணாவில்.**
**சாவகச்சேரி.**
தோற்றம் 26.08.1937
மறைவு 24.07.2000

### இந்திய புலனாய்வுப் பிரிவுக்கு சஹ்ரானின் சகா தகவல்

கொழும்பு, ஜூலை 24
ஏப்ரல் 21தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹஷீமிற்கு நெருங்கிய ஒருவர் இந்திய புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் வழங்கியுள்ளார் என்று தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

அரச புலனாய்வுப் பிரிவின் அதிகாரியொருவர் நேற்றுமுன்தினம் ஆணைக்குழு முன்பாக சாட்சி வழங்கும்போதே இந்த விடயம் வெளியானது.

தற்போது இந்தியாவிற்கு தப்பிச் சென்றுள்ளதாக சந்தேகிக்கப்படும் புலஸ்தினி அல்லது சாரா என்ற பெண் மூலமாகவே இந்திய புலனாய்வுப் பிரிவிற்கு தகவல் வழங்கப்பட்டிருக்கலாம் என அரச புலனாய்வுப்பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார்.

அவர் இந்தியாவிற்கு தப்பிச் சென்றுள்ளதாக சந்தேகிக்கப்படும் தகவல்கள் கிடைத்துள்ளதாக ஆணைக்குழு முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவிக்கப்பட்டது. சாய்ந்தமருதில் வீடொன்றில் குண்டொன்றை வெடிக்க வைத்து உயிரிழந்த முஹம்மத் ஹஸ்துன் என்பவரின் மனைவியாகவே சாரா கருதப்படுகிறார். (எ)

### வல்லிபுர ஆழ்வார் கோவில் ஸ்ரீ சுதர்ஸன மஹா யாகம்!

யாழ்ப்பாணம், ஜூலை 24
அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் உலக மக்களின் நன்மைக்காக ஸ்ரீ சுதர்ஸன மஹா யாகம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி நடைபெறவிருந்த இந்த யாகம் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் பிற்போடப்பட்டு தற்போது நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு கோட்டு வாசல் ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி ஆலயத்திலிருந்து பால் குடம் எடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து காலை 8 மணிக்கு ஸ்ரீ சுதர்ஸன மஹா யாக பூஜை ஆரம்பமாகவுள்ளது. (ம-422)

# தஞ்சம்கோரும் தமிழ்க் குடும்பம் வரிப்பணத்தை வீணடித்துள்ளது!

## ஆஸி. உள்துறை அமைச்சர் பீட்டர் டெட்டன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 24

ஆஸ்திரேலியாவில் தஞ்சம் கோரிய இலங்கைத் தமிழ்க் குடும்பம் 10 மில்லியன் டொலர் வரிசெலுத்துவோர் பணத்தை வீணடித்துள்ளது என்று அந்த நாட்டு உள்துறை அமைச்சர் பீட்டர் டெட்டன் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் தஞ்சம் கோரிய இலங்கைத் தமிழ்க் குடும்பம் தொடர்பான வழக்கு அந்த நாட்டு நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு வரும் நிலையில், வழக்கு முடியும் வரை அவர்களை கிறிஸ்மஸ் தீவில் தங்கவைக்க ஆஸ்திரேலிய அரசு உத்தரவிட்டிருந்தது. நேற்று சிட்னி வானொலி நிகழ்ச்சியொன்றில் பேசிய ஆஸ்திரேலிய உள்துறை அமைச்சர் பீட்டர் டெட்டன், இந்த இலங்கை குடும்பத்தினர் ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோருவதை நிறுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

2012 முதல் தொடரும் இவ் வழக்கு காரணமாக, ஆஸ்திரேலியாவின் செலவு அநேகமாக 10 மில்லியன் டொலருக்கும் அதிகமாக இருக்கலாம். இந்தப் பணம் ஆஸ்திரேலிய குடிமக்களின் வரிப்பணம். அவர்கள் அகதிகள் அல்ல, அவர்கள் ஆஸ்திரேலியாவில் புகலிடம் பெறுவதற்காக சட்டத்திலுள்ள அனைத்து வழிகளையும் தந்திரத்தையும் பயன்படுத்தியுள்ளனர். இது அவர்கள் உருவாக்கிக் கொண்ட நிலைமை, இது நகைப்புக்குரியது. இது அவர்களின் குழந்தைகளுக்கு நியாயமற்றது. இது மற்றவர்களுக்கு மிகவும் மோசமான செய்தியை அனுப்புகிறது என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

2012ஆம் ஆண்டு படகு வழியாக இலங்கையிலிருந்து வெளியேறி ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்திருந்த நடேசலிங்கமும், 2013ஆம் ஆண்டு தஞ்சமடைந்திருந்த பிரியாவும் ஆஸ்திரேலியாவில் சந்தித்த பின் திருமணம் செய்துகொண்டனர். தஞ்சக் கோரிக்கையாளர்களான அவர்களுக்கு ஆஸ்திரேலியாவிலேயே இரு பெண் குழந்தைகள் (கோபிகா, தருணிகா) பிறந்தனர்.

ஆஸ்திரேலியாவின் பிலோயலா நகரில் வசித்து வந்த இவர்களின் விசா, கடந்த மார்ச் 2018இல் காலாவதியாகியதாக கைதுசெய்யப்பட்டு மெல்போர்ன் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டனர். ஆஸ்திரேலிய அரசால் அவர்கள் இலங்கைக்கு நாடுகடத்தப்பட இருந்த நிலையில் அம்முயற்சி கடைசி நிமிட நீதிமன்றத் தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டது. பின்னர், அவர்களை கிறிஸ்மஸ் தீவுக்கு கொண்டு சென்றது ஆஸ்திரேலிய அரசு.

கடந்த 2017 ஒகஸ்ட் மாதம் தருணிகாவின் தாயார் பிரியாவின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட போதே தருணிகாவுக்கான விசா வாய்ப்பு முடிந்துவிட்டது என நீதிமன்றத்தில் அரசு சார்பாக வாதாடிய வழக்கறிஞர் ஸ்டீபன் லாய்ட் தெரிவித்திருந்தார். இவர்கள் மீதான வழக்கு தொடரும் நிலையில் பெரும் இன்னல்களுக்கு மத்தியில் இவர்கள் கிறிஸ்மஸ் தீவில் வாழ்கின்றனர். (எ-ம)

# எம்.சி.சி விவகாரம்
# பொய் கூறுகிறார் ரணில்: எம் நிலைப்பாடு மாறாது

## பந்துல அழுத்தம் திருத்தம்

கொழும்பு, ஜூலை 24

எம்.சி.சி உடன்படிக்கையை கைச்சாத்திடுவது குறித்து அமெரிக்காவுக்கும் அரசுக்கும் இடையில் எந்தவித இணக்கமும் எட்டவில்லை. அரசாங்கம் ஆரம்பத்தில் கூறிய நிலைப்பாட்டில் இப்போதும் உள்ளது என்று தெரிவித்துள்ள பந்துல குணவர்த்தன இந்த விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க பொய்யுரைக்கின்றார் என்றும் தெரிவித்தார்.

அரசின் இறுதி அமைச்சரவை கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிலையில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எம்.சி.சியை கைச்சாத்திட அரசாங்கம் இணங்கியுள்ளதாகவும், அவ்வாறு செய்துகொள்ளவுள்ள உடன்படிக்கையை நாடாளுமன்ற அனுமதியின்றி மேற்கொள்ளும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும் முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் கூறியிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்த காரணிகளில் உண்மைத்தன்மை என்னவென்று இடம்பெற்ற அமைச்சரவை செய்தியாளர் சந்திப்பில் கேள்வி எழுப்பியபோது அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்ததாவது

அது பொய். அவ்வாறு எந்தவித உடன்படிக்கையும் செய்துகொள்ளவில்லை. நாட்டின் இறைமைக்கும் நாட்டின் சட்டத்துக்கும் முரணான விதத்தில் செயற்படும் எந்த நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்காது. வெள்ளைவானில் கடத்தியவர்களை முதலைகளுக்கு உணவாகப்போட ஜனாதிபதி பணித்தார் எனக் கூறியவர்கள் தானே இவர்கள். இப்போது தேர்தல் காலத்தில் ஒவ்வொரு பொய்களை கூறிக்கொண்டு அரசாங்கத்தை வீழ்த்த முயற்சிக்கும் முயற்சியே இவையெல்லாம். ஆனால் இதில் உண்மைத்தன்மை எதுவும் இல்லை என்றார். (எ)


### பெயர் மாற்றம்

இல, 41/1, நயாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியில் வசிக்கும் ஜெராட் அலெக்சாண்டர் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை அலெக்சாண்டர் ஜெராட் ஜெயரட்ணம் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் அலெக்சாண்டர் ஜெராட் ஜெயரட்ணம் என கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

அலெக்சாண்டர் ஜெயராட் ஜெயரட்ணம்

### வேலை வாய்ப்பு

இலங்கையில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொலைபேசி நிறுவனத்துக்கு அனுபவம் மிக்க Marketing Manager தேவை.

021 228 4998, 077 543 3436

Email: dnlankaservices@gmail.com

### வீடு வாடகைக்கு

அம்மன் வீதி, திருநெல்வேலியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உள்ளது.

வாடகை பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புக்கு:- 071 939 0060

### பகிரங்க கேள்வி அறிவித்தல்

வ/கனகராயன்குளம் ம.வி பாடசாலையினுடைய பழைய வகுப்பறைக் கட்டடத்தினை இடித்து அகற்றும் பொருட்டு கேள்வி கோரப்படுகின்றது. மேற்படி கட்டடத்தை 27.07.2020 ஆம் திகதியிலிருந்து 31.07.2020 திகதி வரை பார்வையிட்டு கேள்வி ஆவணங்களுக்கான கட்டணமாக ரூபா 500.00 இனை அலுவலக நாட்களில் பி.ப 03.00 மணிக்கு முன் வலயக்கல்வி அலுவலக கணக்காளரிடம் செலுத்தி கேள்விப் பத்திரத்தை வலயக் கல்வி அலுவலகம் - வவுனியா வடக்கு அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் 31.07.2020 முற்பகல் 10:00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். அதனுடன் மீளளிக்கக் கூடிய வைப்புத் தொகையினை வலயக் கல்வி அலுவலக கணக்காளரிடம் செலுத்திப் பற்றுச் சீட்டினை 03.08.2020 ஆம் திகதி முற்பகல் 11:30 இற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகள் யாவும் அன்றைய தினம் உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் சமர்ப்பித்த யாவரும் தவறாது சமுகமளித்தல் வேண்டும்.

தகைமையுடைய கேள்விதாரர்களுக்கான அனுமதி வழங்கப்பட்ட பின்னர் உரிய தொகையினை அலுவலத்தில் செலுத்தி 07 நாட்களுக்குள் குறித்த வேலையினைப் பாடசாலை நிர்வாகத்திற்கும், பாடசாலை கற்றல் செயற்பாட்டிற்கும், சுற்றுச் சூழலுக்கும் ,இடையூறு இன்றி முடிவுறுத்திப் பொருட்களை அகற்றுதல் வேண்டும்.

| விபரம் | கட்டடத்தின் அளவு | மீளளிப்பு வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|
| வ/கனகராயன்குளம் ம.வி பாடசாலையின் பழைய கட்டடத்தை இடித்து அகற்றல் | 80'x20' வகுப்பறைக் கட்டடம் | 20,000.00 |

தலைவர்,
கேள்விச் சபை, வலயக் கல்வி அலுவலகம்,
வவுனியா வடக்கு.


# ஆயிரம் ரூபா நிச்சயம் கிட்டும் நம்பிக்கையூட்டுகின்றார் ஜீவன்!



மலையகம், ஜூலை 24

பெருந்தோட்டங்களை, தோட்ட கம்பனிகள் மேலும் 25 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு கேட்கின்றன. அதற்கு உடன்பட முடியாது. எமது மக்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவதே எமது இலக்காகும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அக்கரப்பத்தனை எல்பியன் தோட்டத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதியால் ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுக்க முடியாது, அதற்கு சட்டத்தில் இடமும் இல்லை என்று சிலர் கூறியுள்ளனர். ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்கப்படும் என ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவரும் உறுதியளித்துள்ளனர். எனவே, கம்பனிக்குத் தேவையான சலுகைகளை வழங்கி, அழுத்தங்களைப் பிரயோகித்து உரிய நடவடிக்கை எடுப்பார்கள். மாபெரும் தொழிற்சங்கமான எமக்கும் பக்கபலமாக இருப்பார்கள்.

மேலதிக 2 கிலோ கொழுந்து, மேலும் 25 ஆண்டுகளுக்குக் குத்தகை காலத்தை நீடித்தல் உட்பட மேலும் சில நிபந்தனைகளை கம்பனிகள் முன்வைத்தன. அவற்றுக்கு நாம் உடன்படவில்லை. தற்போதே பாதித் தோட்டங்களை காடாக்கியுள்ளனர். இந்நிலையில் மேலும் 25 ஆண்டுகள் வழங்கினால் என்ன நடக்கும்? முழுத் தோட்டத்தையும் நாசமாக்கிவிடுவார்கள்- என்றார். (ம)

## விபத்தில்...

வர் வீதியைக் கடக்க முயன்றபோது, வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த அரச பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளானார். அவர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

அவருடைய உடைமைகளில் ஆள் அடையாள அட்டைகள் எதுவும் இல்லாத நிலையில் அவருடைய விவரத்தினைப் பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர் அறுபது தொடக்கம் 65 இற்கு இடைப்பட்ட வயதை உடையவராக இருக்கலாம் என்று அண்ணளவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

முதியவரை அடையாளம் காணும் நடவடிக்கையில் கிளிநொச்சி பொலிஸார் ஈடுபட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (எ-6)

## நல்லூர்...

8 மணிக்கு தேரில் எடுத்துவரப்படும். அலங்காரக் கந்தனுக்கு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றம் நடைபெறும். (எ-17)

## அங்கஜனின்...

படம் பொறிக்கப்பட்ட 270 ஸ்ரிக்கர்களும் மீட்கப்பட்டன. வட்டுக்கோட்டை டச்சு வீதியிலேயே இந்த வாகனத்தைப் பொலிஸார் மடக்கிப் பிடித்தனர். (ஒ.5,6,26)

## சமுர்த்தி...

ஆணைக்குழு தடை விதித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களை இன்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் சந்திப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு அதிகாரிகளுக்கு ஈ.பி.டி.பி. கட்சியின் 2020 நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளர் டக்ளஸ் தேவானந்தா தனது இணைப்புச் செயலர் ஊடாக கடிதம் அனுப்பியிருந்தார். கிளிநொச்சி மாவட்டச் செயலர் அதனை சமுர்த்தி உதவிப் பணிப்பாளருக்கு அனுப்பியிருந்தார். சந்திப்புக்குரிய அறிவித்தல் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கடற்றொழில் அமைச்சுடன் தொடர்புபடாத சமுர்த்தி உத்தியோகத்தர்களை தேர்தல் காலத்தில் வேட்பாளராகப் போட்டியிடும் டக்ளஸ் தேவானந்தா சந்திப்பது, தேர்தல் விதிமுறை மீறல் எனச் சுட்டிக்காட்டி கிளிநொச்சி மாவட்ட தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவில் இரண்டு முறைப்பாடுகள் நேற்று மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இது தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்கு உடனடியாகக் கொண்டு செல்லப்பட்டிருந்தது. கூட்டத்தை நிறுத்தும் உத்தரவை தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று மாலை, கிளிநொச்சி மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு வழங்கியுள்ளது. (ஒ.5)




வரலாற்றில் முதல் தடவையாக

# உலகத் தலைவர்கள் இல்லாது கூடுகிறது ஐ.நா.பொதுக்குழு



**நியூயோர்க், ஜூலை 24**
**ஐக்கிய நாடுகள் சபையின் 75 ஆண்டுகால வரலாற்றில் முதல் முறையாக உலக நாடுகளின் தலைவர்களின் நேரடியான பங்கேற்பு இல்லாமல் ஐ.நா. கூட்டத்தொடர் செப்ரெம்பர் மாதம் நடைபெற உள்ளது.**

கொரோானா வைரஸ் பரவல் காரணமாக 193 நாடுகளின் உறுப்பினர்களும் நேரடியாக இந்த முறை பங்கேற்காமல் காணொலி மூலம் தங்களின் அறிக்கையை முன்கூட்டியே பதிவுசெய்து அளிப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளனர்.
ஐ.நா.அவையின் பொதுக்குழுக் கூட்டம் வரும் செப்ரெம்பர் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. 193 நாடுகளின் தலைவர்களும் ஐ.நா. விவாதத்தில் பங்கேற்று தங்களின் கருத்துக்களையும், உரைகளையும் வழங்குவார்கள்.
ஆனால், உலகம்முழுவதும் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வருவதாலும், சர்வதேச விமானப் போக்குவரத்து முழுமையாக தொடங்காததாலும் இந்த முறை ஐ.நா. பொதுக்குழுக்கூட்டத்தில் உலகநாடுகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் பங்கேற்பதில் பெரும் சிக்கல் ஏற்பட்டது.
இதையடுத்து, காணொலி மூலம் கூட்டத்தொடரை நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ரி1)



## முடங்குகிறது ஓமான்

மஸ்கட், ஜூலை 24
மத்திய கிழக்கு நாடான ஓமானில் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் முழுமையான ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில் அரசாங்கம் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அதற்கமைய 25ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 5ம் திக்திவரை ஓமானில் அனைத்து வகையான செயற்பாடுகளுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு தரப்பினர் கடுமையான ரோந்துப் பணிகளில் ஈடுபடுத்தப் படுவார்கள் என ஓமான் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ரி1)

## இனவெறி பிடித்த முதலாவது ஜனாதிபதி ட்ரம்ப்

வொஷிங்டன், ஜூலை 24
இனவெறி பிடித்த அமெரிக்க முதலாவது ஜனாதிபதி என்னைப் பொறுத்தவரை ஜனாதிபதி ட்ரம்ப் மட்டும்தான் என்று ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் ஜோ பிடன் குற்றஞ்சாடியுள்ளார்.
வொஷிங்டனில் சேவைத்துறையில் உள்ள ஊழியர்களுக்கான சர்வதேச கூட்டமைப்பு சார்பில் நேற்று நடந்த நிகழ்ச்சியில் ஜனநாயக கட்சியின் வேட்பாளர் ஜோ பிடன் காணொலி மூலம் பங்கேற்றபோதே இதனைத் தெரிவித்தார்.
ட்ரம்ப் அமெரிக்காவில் இனவெறியைப் பரப்புகிறார். மக்களை அவர்களின் நிறத்தின் அடிப்படையில், அவர்கள் சாந்திருக்கும் நாடு, எங்கிருந்து வந்தார்கள் என்பதை வைத்து ட்ரம்ப் நடத்துகிறார் இது மோசமான போக்கு.
இதுவரை இருந்த எந்த ஜனாதிபதியும் இதுபோன்று மக்களை இனவெறியுடன் நடத்தியதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி1)



## ஊழியருடன் தகாத உறவு: அமைச்சர் பதவி நீக்கம்

*நியூசிலாந்து பிரதமர் அதிரடி*

வெலிங்டன், ஜூலை 24
முன்னாள் ஊழியருடன் தகாத உறவில் ஈடுபட்டார் என்று குற்றம்சாட்டுக்குள்ளான நியூசிலாந்து குடிவரவு அமைச்சர் இயன் லீஸ் கொலோவை பிரதமர் ஜெசின்டா ஆர்டன் பதவி நீக்கியுள்ளார்.
குடிவரவுத்துறை அமைச்சர் பொறுப்புடன் நடந்து கொள்ளத் தவறிவிட்டார் என பிரதமர் ஆர்டன் தெரிவித்துள்ளார். திருமணம் முடித்து மூன்று குழந்தைகளின் தந்தையான இயன், தமது நடத்தை முற்றிலும் முறையற்றது என்று சுருக்கமான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அதேசமயம் தமது குடும்பத்தினரிடமும் மன்னிப்புக் கேட்டுள்ளார். (ரி1)

## மலேசியா செல்வோருக்கு கட்டாய தனிமைப்படுத்தல்


கோலாலம்பூர், ஜூலை 24
மலேசியாவிற்கு வருகைதருவோர் நேற்று தொடக்கம் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள் என அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது. கொவிட் 19 தொற்றால் சர்வதேச நாடுகள் அதிக பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றன.
இந்நிலையில் மலேசிய அரசாங்கம் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.
இன்று தொடக்கம் மலேசியாவுக்கு வருகைதருவோர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட சிறப்பு மையங்களில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவுள்ளனர். (ரி1)

## அகதிகளைக் குற்றவாளிகள் போன்று நடத்தாதீர்கள்!

*மனித உரிமைக் கண்காணிப்பகம் கோரிக்கை*

கோலாலம்பூர், ஜூலை 24
ரோஹிங்கியா முஸ்லிம் அகதிகளை குற்றவாளிகளைப் போல நடாத்துவதை நிறுத்துமாறு மனித உரிமைக் கண்காணிப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது.
மியன்மாரைச் சேர்ந்த 27 ரோஹிங்கியா முஸ்லிம் அகதிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனையைத் தள்ளுபடி செய்யுமாறும் மனித உரிமைக் கண்காணிப்பகம் மலேசிய நீதிமன்றிடம் வலியுறுத்தியுள்ளது.
ரோஹிங்கியா முஸ்லிம் மக்களுக்கு எதிரான இந்தத் தண்டனையானது சித்திரவதைக்கு ஒப்பானது என்றும் விவரித்துள்ளது.
செல்லுபடியாகும் அனுமதி இல்லாமல் 40 ரோஹிங்கியா அகதிகள் படகு மூலம் மலேசியா வந்திருந்தனர். கடந்த ஜூன் மாதம் அவர்களுள் 27 ஆண்களுக்கு மலேசியாவின் லங்காவி தீவில் உள்ள நீதிமன்றம் ஏழு மாத சிறைத்தண்டனை விதித்திருந்தது. (ரி1)





## தூதரகத்தை மூடிய அமெரிக்கா; அதிருப்தியில் சீனா

பீஜிங், ஜூலை 24
அமெரிக்காவின் ஹுஸ்டனில் இருக்கும் சீன துணைத் தூதரகத்தை இன்று வெள்ளிக்கிழமைக்குள் மூடும்படி உத்தரவிட்டிருப்பது ஆத்திரத்தைத் தூண்டும் செயல் என்று சீனா குறிப்பிட்டுள்ளது.
அமெரிக்கர்களின் புலமைச் சொத்தை பாதுகாப்பதற்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க இராஜாங்க திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இந்தத் தூதரக வளாகத்தில் ஆவணங்கள் எரிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்திய நிலையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
எனினும் இது மூர்க்கத்தனமானது மற்றும் நியாயமற்றது என்று சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் வாங் வென்பின் குறிப்பிட்டுள்ளார். (ரி1)

## கூரை...

இந்தத் திருட்டுச் சம்பவம் வளலாய் வடக்கு பகுதியினைச் சேர்ந்த பெற்ரீரியர் நெல்சன் என்பவரது வீட்டிலேயே நேற்றுமுன்தினம் மாலை நடந்துள்ளது.
பருத்தித்துறை பகுதியில் உள்ள உறவினர் ஒருவரின் சுப நிகழ்வுக்காக வீட்டில் உள்ள அனைவரும் சென்றுள்ளனர். நிகழ்வு முடிந்து அவர்கள் இரவு 9:30 மணியளவில் மீண்டும் வீட்டுக்கு வந்த போது கூரை பிரித்து நகையும், கமராவும் திருடப்பட்டமை தெரியவந்துள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். மேலதிக விசாரணைகளை அச்சுவேலி குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-25)

## டில்லு...

னர். 'டில்லு குரூப்' என அழைக்கப்படும் சமூக விரோத செயற்பாட்டுடன் தொடர்புடைய குழுவைச் சேர்ந்த இளைஞனே நேற்றுமுன்தினம் புதன்கிழமை , யாழ்ப்பாணம் மடம் வீதி பகுதியில் ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவங்களுடன் இவருக்குத் தொடர்பு உள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபர் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ,25)

## கறுப்பு...

நடைபெற்றது.
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை வளாகத்தில் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் ஒன்று கூடி, அஞ்சலி செலுத்தினர்.
1983 ஆம் ஆண்டு ஜூலை 23 ஆம் திகதி , தமிழ் மக்களுக்கு எதிராக முடுக்கிவிடப்பட்ட இனவாதத் தாக்குதல்களில் உயிர்நீத்த பொது மக்களையும், வெலிக்கடைச் சிறையில் கொல்லப்பட்ட குட்டிமணி, தங்கத்துரை உள்ளிட்ட தமிழ்க் கைதிகளையும் நினைவு கூர்ந்து அஞ்சலிக்கப்பட்டது.
அஞ்சலி செலுத்துவதற்கான பொது ஈகைச்சுடர் தவிசாளரால் ஏற்றப்பட்டதுடன் பிரதேச சபையின் உறுப்பினர்கள் கைகளில் மெழுவர்த்தியை ஏந்தியவாறு அஞ்சலித்தனர்.
தொடர்ந்து "இனியொரு கறுப்பு ஜூலை வேண்டாம். இனவாதம் அரச இயந்திரம் முதல் சிவில் சமூகங்கள் வரையில் முற்றாக ஒழிக்கப்படவேண்டும்" என்ற தொனிப்பொருளில் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் உரைகளும் இடம்பெற்றன.
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கறுப்பு ஜூலை நினைவேந்தல் நடைபெற்றது. உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (அ-25)

## நாங்கள்...

இவ்வாறு மஹிந்த ராஜபக்ச தலைமையிலான சிறிலங்கா பொதுஜன பெரமுன கூட்டணியின் கம்பஹா மாவட்ட வேட்பாளரும், பிவிதுரு ஹெல உறுமயவின் பிரதித் தலைவருமான மதுமாதவ அரவித்த தெரிவித்தார்.
ராகமை பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கில் சின்னத்துக்காக அல்ல எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக தமது இனத்துக்கே மூன்று விருப்பு வாக்குகளையும் வழங்குகின்றனர். அவர்களிடமிருந்து சிங்களவர்கள் பாடம் கற்றுக்கொள்ளவேண்டும்.
இலங்கை சிங்கள, பௌத்த நாடு. தமிழ், முஸ்லிம், கத்தோலிக்க மக்களுக்கு வாழவழிவிட்ட இனத்தவர்களே சிங்களவர்கள். வயிற்றுக்கு சோறு இல்லாவிட்டால் கூட சேர, சோழ, பாண்டியனுடன் சண்டையிட்ட இனமே சிங்கள இனம். இவ்வாறு கௌரவம்மிக்க சிங்கள இனம் இன்று அவசர சிகிச்சைப்பிரிவில் இருக்கின்றது. எமது இனம் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளது என்பதை சிங்கள மக்களுக்கு அறியக்கூடியதாக இருக்கவில்லை. அதற்கான தேசியவாத அரசியலும் இருக்கவில்லை.
தமிழர்களுக்கு அவர்களின் இனம்சார் அரசியல் இருக்கின்றது. முஸ்லிம்களுக்கும் அதேபோன்றுதான். ஆனால் எமக்கு என்ன இருக்கின்றது? இனம் சார்ந்த அரசியல் இல்லை. சின்னங்கள் மாத்திரமே இருக்கின்றன. தமிழ், முஸ்லிம் அரசியலுக்கு நோக்கம் இருக்கின்றது. அதனை அடைவதற்காக தாக்குதல்கள்கூட நடத்தப்பட்டுள்ளன. ஆனால், நீங்கள் இன்னும் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள்?
குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சிங்களவரால் இடமொன்றை வாங்க முடியுமா? இலங்கை என்பது எமது அம்மா, உலகில் வேறு எங்கும் எமக்கு இடமில்லை. 2 ஆயிரத்து 500 வருடகால வரலாறு இருக்கின்றது. இப்படி இருந்தும் தேசவழமைச் சட்டத்தால் யாழ்ப்பாணத்தில் இடமொன்றை வாங்கமுடியவில்லை. இன்று வாழும் உரிமைகூட அங்கு இல்லை. 1981 இல் 21 ஆயிரம் சிங்களவர்கள் இருந்தனர். இன்று யாழ்ப்பாணத்துக்குச் செல்லக்கூட முடியவில்லை. நாம் செய்த தவறுதான் என்ன?
நாட்டின் பிரதான நகரங்களை இழந்துவருகின்றோம். கொழும்பு, தெஹிவளை, வெள்ளவத்தை, மோதரை ஆகிய நகரங்களை ஆக்கிரமித்து விட்டனர். இப்படி நடந்து கொண்டிருந்தால் எமது இனத்தை பாதுகாக்கமுடியுமா? கொழும்பை மாற்றியவர்கள், மல்வானை, திஹாரி, மாபொல மற்றும் மினுவாங்கொடை ஆகிய பகுதிகளையும் மாற்றுவதற்கு முயற்சித்துவரு கின்றனர். இவற்றுக்கு எதிராக நாம் குரல் கொடுக்கமுடியாதா? அவ்வாறு குரல் கொடுப்பது சாபக்கேடா? இனத்தை ஆதரிப்பது சாபக்கேடா? அது சாபக்கேடெனில் சாகும்வரை அதனைச் செய்வதற்கு நாம் தயார்.
மொட்டு என்பது சிங்களவர்களின் அடையாளம். சிங்கள இனத்துக்கான கட்சி என்பதை தமிழ், முஸ்லிம் அடிப்படைவாதிகள் புரிந்துகொள்ளவேண்டும் என்றார். (ஒ,5,44)

## சமல்...

வடமராட்சி களப்பு குடிநீர் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கும் நிகழ்வு கப்பூதுவெளியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அமைச்சர் சமல் ராஜபக்ச மற்றும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களான டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட அரசியல்வாதிகள் பங்கேற்றிருந்தனர்.
தேர்தல் காலத்தில் அரசியல்வாதிகள் இவ்வாறான அரச நிகழ்வுகளில் கலந்து கொள்ளலாமா என்று ஊடக சந்திப்பில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த ஓய்வுபெற்ற தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மொஹமட், வேட்பாளர்கள் கலந்து கொள்ள முடியாது. அப்படியானால் கலந்து கொண்ட வேட்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று மீளவும் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு, வேட்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாது. ஆனால் அந்த நிகழ்வை ஒழுங்கமைத்த அதற்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம் என்று குறிப்பிட்டார்.
யாழ்ப்பாணத்தில் இவ்வாறான நிகழ்வு நடைபெற்றுள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழுவிடமும் நிகழ்வுக்கான அனுமதி பெறப்படவில்லை. வேட்பாளர்கள் கலந்து கொண்டுள்ளனர். மேற்படி நிகழ்வை தனது தேர்தல் பரப்புரைக்காக வேட்பாளர் ஒருவர் பயன்படுத்தி வருகின்றார். இது சரியா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, அவ்வாறு பயன்படுத்த முடியாது என்று மொஹமட் பதிலளித்தார். இந்த விடயங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.
ஊடகங்களில் ஒளிப்படங்களுடன் இந்தச் செய்தி வெளியாகியுள்ளது. வேட்பாளர்கள் தங்கள் உத்தியோகபூர்வ முகநூலில் இவற்றைப் பதிவிடுகின்றார்கள். அப்படியிருக்கையில் இதன் பின்னரும் முறைப்பாடு செய்தால்தான் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேள்வி எழுப்பியபோது, ஊடகங்களில் வெளிவந்த செய்திகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எஸ்.அச்சுதன் தெரிவித்தார். (ஒ,5)

## வேட்பாளரின்...

சிறுவன் ஒருவனும், முதியவர் ஒருவருமாக 6 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். வட்டுக்கோட்டைச் சந்திக்கு அண்மையாக வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வாகனத்திலிருந்து சுரேன் குருசாமியின் படம் பொறிக்கப்பட்ட ஒரு தொகை துண்டறிக்கைகள் மீட்கப்பட்டுள்ளன. (ஒ,5,26)




## பிரபாகரனின்...

லணியின் உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையில் மூவின மக்கள் வாழ்ந்தாலும் பெரும்பான்மையினமாக சிங்களவர்களே விளங்குகின்றனர். 1815ஆம் ஆண்டுக்கு முன்னர் மூவின மக்களும் எவ்வித பிரச்சினைகளும் இன்றியே வாழ்ந்தனர். இனவாதம், மொழிப்பிரச்சினை எதுவுமின்றி சிங்கள ஆட்சியாளர்களை ஏற்றிருந்தனர். மன்னர்களும் மக்களுக்கு குறைவைக்கவில்லை.
1815 ஆம் ஆண்டு வெள்ளையர்களுக்கு நாட்டை வழங்கிய பின்னரே பிரச்சினை உருவெடுத்தது. தமிழர்கள் மத்தியில் தவறான கருத்துகள் விதைக்கப்பட்டன. இன்றளவிலும்கூட பிரச்சினைகள் அவ்வாறே தொடர்கின்றன. இதன் அடிப்படையிலேயே தமிழ் மொழி அரச கருமமொழி ஆக்கப்படவேண்டும் என்ற கோசம்கூட அன்று எழுப்பட்டது.
இந்நிலையில் தேர்தல்களில் வெற்றிபெற்று நாடாளுமன்றத்தில் பலத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக வடக்கு, கிழக்குக்கு தன்னாட்சி வேண்டும் என்றெல்லாம் தமிழ்க் கூட்டமைப்பு முழக்கமிட்டு வருகின்றது. இம்முறையும் பிரபாகரனின் பிரிவினைவாத கோரிக்கைகளையே கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. தீவிரவாதிகளின் கோரிக்கைகளையே கூட்டமைப்பு முன்வைத்துள்ளது.
நாட்டை கூறுபோட இடமளிக்கமுடியாது. ஒற்றையாட்சி தொடரவேண்டும். எனவே, கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்தை ஆட்சியாளர்கள் ஏற்கக்கூடாது. அது பற்றி பேசவும்கூடாது. முற்றாக நிராகரிக்கவேண்டும். நாமும் நிராகரிக்கின்றோம், என்றார். (ஒ,5,44)

## யாழ்...

நிலையங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதில் பணியாற்றுவதற்கு தென்னிலங்கையைச் சேர்ந்த அதிகாரிகள் வருகை தரவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.
ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இதுவரையில் 105 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றுள் 48 முறைப்பாடுகள் சட்டவிரோத தேர்தல் சுவரொட்டி ஒட்டுதல் தொடர்பாகக் கிடைக்கப் பெற்றுள்ளன.
இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் உள்ள தேர்தல் முறைப்பாட்டு மத்திய நிலையத்துக்கு மேலதிகமாக, சண்டிலிப்பாய், சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுகளிலும் முறைப்பாட்டு மத்திய நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.
இந்த நிலையங்களில் கண்காணிப்பு அலுவலர்களாகப் பணியாற்ற தென்னிலங்கையிலிருந்து அதிகாரிகள் வருகை தரவுள்ளனர். அவர்கள் உள்ளூர் அதிகாரிகளுடன் இணைந்து கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர். (ஒ,5)

# வெல்லப் போவது யார்?

லண்டன், ஜூலை 24

**இங்கிலாந்து மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் இடையிலான 3 ஆவது டெஸ்ட் ஆட்டம் இன்று மன்செஸ்டரில் உள்ள ஓல்ட் டிராபோர்ட் மைதானத்தில் ஆரம்பமாகின்றது.**

ஜேசன் ஹோல்டர் தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்க இங்கிலாந்து சென்றுள்ளது. ரசிகர்கள் இல்லாமல், கொரோனாத் தடுப்பு பாதுகாப்புடன் நடந்த இந்தத் தொடரின் முதல் டெஸ்ட் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. 2ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து 113 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. அதனால் தொடர் 11 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.



இந்த டெஸ்ட் தொடரை வெல்லப் போவது யார்? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. சொந்த மண்ணில் விளையாடுவதால் இங்கிலாந்திற்கு தொடரைவெல்ல அதிகமான வாய்ப்பு உள்ளது. கடந்த டெஸ்டில் 3ஆவது நாள் ஆட்டம் மழையால் ரத்து ஆகியிருந்தாலும் அந்த அணி வீரர்கள் சிறப்பாக ஆடி வெற்றியைப் பெற்றனர். ஒரு வேளை ஆட்டம் சமநிலையில் முடிந்தால் டெஸ்ட் தொடரும் சமநிலையில் முடியும்.

இங்கிலாந்து அணி துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் மிகவும் நல்ல நிலையில் இருக்கிறது. குறிப்பாக பென் ஸ்டோக்ஸ் அணிக்கு முதுகெலும்பாக உள்ளார். இந்த டெஸ்டிலும் அவர் மீதான எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கிறது.

கொரோனா பாதுகாப்பு விதிமுறைகளை மீறியதாக கடந்த டெஸ்டில் நீக்கப்பட்ட ஆர்ச்சர் அணிக்கு திரும்பி இருக்கிறார். அதனால் வீரர்கள் தேர்வு இங்கிலாந்துக்கு சவாலானது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் டெஸ்டை போலவே இந்த டெஸ்டிலும் வென்று 32 ஆண்டுகளுக்குப் பிறகு இங்கிலாந்து மண்ணில் தொடரை வெல்லும் ஆர்வத்தில் உள்ளது. அந்த அணியில் துடுப்பாட்டில் பிளாக்வுட், புரூக்ஸ், பிராத்வெயிட் ஆகியோரும், பந்துவீச்சில் கேப்ரியல், கேப்டன் ஹோல்டர், அல்ஜாரி ஜோசப், கேமர் ரோச் ஆகியோரும், ஆல் ரவுண்டரில் ராஸ்டன் சேஸூ நல்ல நிலையில் உள்ளனர். (ரி2)

# 14 நாள் கட்டாயம்

## கங்குலியின் கோரிக்கை நிராகரித்தது ஆஸி



புதுடெல்லி, ஜூலை 24

14 நாள்கள் தனிமைப்படுத்துதல் நடைமுறையை இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் கடைபிடிக்கப்பட வேண்டும் என்று அஸ்திரேலியக் கிரிக்கெட் சபை கண்டிப்புடன் தெரிவித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி இந்த ஆண்டு இறுதியில் ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இந்தத் தொடரின் போது இந்திய அணி வீரர்களை 14 நாள்கள் தனிமைப்படுத்துவது என்பது அதிகமானதாகும். அதைச் சற்றுக் குறைக்க வேண்டும் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையிடம், இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் சவுரவ் கங்குலி வேண்டுகோள் விடுத்து இருந்தார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் இடைக்கால தலைமை செயல் அதிகாரி நிக் ஹாக்லி இது தொடர்பாகத் தெரிவித்ததாவது

வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் கட்டாயம் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்பது ஆஸ்திரேலிய அரசின் விதிமுறையாகும். அதை இந்திய கிரிக்கெட் அணியும் கடைப்பிடித்தாக வேண்டும். அதேநேரத்தில் தனிமைப்படுத்துதல் காலத்திலும் பயிற்சி பெறும் வகையில் இந்திய அணியினருக்கு அனைத்து வசதிகளும் சிறப்பாகச் செய்து கொடுக்கப்படும். அடிலெய்டு மைதானத்தில் உள்ள ஹோட்டலில் தனிமைப்படுத்துதலுட்க்கு தேவையான வசதிகள் உள்ளன என்றார். (ரி2)

# முடிவுதான் சரியில்லை கும்ப்ளே வருத்தம்

புதுடெல்லி, ஜூலை 24

அந்த ஓராண்டில் உண்மையில் நன்றாக ஆடினோம். என்ன! முடிவு கொஞ்சம் நன்றாக அமைந்திருக்கலாம் என்று எனக்கு தெரிந்தது. ஒரு பயிற்சியாளராக அங்கிருந்து நகர வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்தேன். இவ்வாறு இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் அனில் கும்ப்ளே தெரிவித்துள்ளார்.

அனில் கும்ப்ளே இந்திய அணியின் பயிற்சியாளராக ஓராண்டு இருந்தார். விராட் கோலிக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடுகள் முற்ற கடைசியில் அனில் கும்ப்ளே தன் பயிற்சியாளர் பொறுப்பைத் துறந்தார்.

விராட் கோலிக்கும் இவருக்கும் இடையே என்ன தகராறு என்பது இன்று வரை இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. விராட் கோலி ஆஸிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஒரு ஆட்டத்தில் காயத்துடன் ஆடுவேன் என்று அடம்பிடித்ததாக செய்திகள் எழுந்தன. பயிற்சியாளர் கும்ப்ளே அதை விரும்பவில்லை. அதனால் ரஹானேயை அணித் தலைவராக்கி ஆடச் செய்தார்.

இது தொடர்பாக இருவருக்கும் இடையே வேறுபாடு வளர்ந்து முற்றியது. அப்போதைய கிரிக்கெட் சபைத் தலைமைக்கு தினமும் கும்ப்ளேவை பற்றி முறைப்பாடு எழுப்பிய வண்ணம் இருந்தார் விராட் கோலி. இதனையடுத்து விடயத்தை ஊதிப்பெருக்காமல், கும்ப்ளே தானாகவே பயிற்சியாளர் பொறுப்பிலிருந்து விலகினார்.

இது தொடர்பில் கும்ப்ளே தெரிவித்துள்ளதாவது

இந்திய அணிக்கு பயிற்சியாளராக பொறுப்பு ஏற்றுக் கொண்டமட்டில் எனக்கு மகிழ்ச்சிதான். அணியுடன் நான் செலவிட்ட அந்த ஓராண்டு பிரமாதமாக இருந்தது. பிரமாதமாக ஆடும் வீரர்களுடன் மீண்டும் ஓய்வறையைப் பகிர்ந்து கொண்டது ஒரு நல்ல உணர்வை ஏற்படுத்தியது.

அந்த ஓராண்டில் உண்மையில் நன்றாக ஆடினோம். என்ன! முடிவு கொஞ்சம் நன்றாக அமைந்திருக்கலாம் என்று எனக்குத் தெரிந்தது. ஒரு பயிற்சியாளராக அங்கிருந்து நகர வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்தேன். பயிற்சியாளர்தான் நகர வேண்டும். அந்த ஓராண்டில் குறிப்பிடத் தகுந்த பங்களிப்பு செய்ததில் எனக்கு உண்மையில் மகிழ்ச்சியே என்றார். (ரி2)

போட்டிப்பரீட்சை வகுப்புகள்
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (MSO)
பிரிவு - 1 சனி(25/7) 9.30am - 2.00pm
பிரிவு - 2 ஞாயிறு(26/7) 9.30am - 2.00pm
இறைவரிசேவை, பதிவாளர் சேவை, சட்டமானி நுழைவு.
SLAS, SLEAS
பிரிவு - 1 சனி(25/7) 9.30am - 3.00pm
பிரிவு - 2 ஞாயிறு(26/7) 9.30am - 3.00pm
0766885394, 0212215302

போட்டிப்பரீட்சை
முகாமைத்துவ உதவியாளர் MA/MSO
✓ உளச்சார்பு - உமாசங்கர்
✓ மொழித்திறன்- சூரியதாசன்
26.07.2020 ஞாயிறு
9am - 2pm
தொடர்ந்து பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் முற்றிலும் எதிர்பார்க்கை மற்றும் நவீன விடயங்களுடன்
நாவலர் கல்வி நிலையம்
மருத்துவத்துறை வீதி, ஆவரங்கந்தி
076 166 1986, 077 741 7143

சிலம்பம் வகுப்புக்கள் ஆரம்பம்
தமிழரின் பாரம்பரிய தற்காப்புக் கலைகளில் ஒன்றான சிலம்பம் வகுப்புக்கள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளன.
077 1396 895, 077 7471 525

# ஐ.பி.எல். சுவாரஸ்சியம்!

லண்டன், ஜூலை 24

ஐ.பி.எல். தொடருக்கு ரசிகர்கள் ஆதரவு எப்போதும் அதிகமாக இருக்கும். இதில் விளையாடுவது சுவாரஸ்யமானது என்று கேன் வில்லியம்சன் தெரிவித்துள்ளார்.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) தொடரின் 13 ஆவது சீசன் கொரோனா காரணமாக காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது. தற்போது ஆஸ்திரேலியாவில் நடக்க இருந்த ரி20 உலகக் கோப்பை ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் ஐக்கிய அரபு எமிரேட்யில் ஐ.பி.எல். தொடரை நடத்த இந்தியக் கிரிக்கெட் சபை முயற்சித்து வருகின்றது.

இது தொடர்பாக நியூசிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் தெரிவித்துள்ளதாவது

ஐ.பி.எல். தொடருக்கு ரசிகர்களின் ஆதரவு அதிகம் என்பதால் இதில் பங்கேற்பது சுவாரஸ்யமானது. அதற்கு முன் நிறைய விஷயங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதன் பினனர் தான் ஐ.பி.எல். தொடரில் விளையாடுவது குறித்து இறுதி முடிவு எடுக்க முடியும். கிரிக்கெட் எவ்வளவு முக்கியமானதோ, அதேபோல வீரர்களின் உடல் நலன், பாதுகாப்பும் அவசியம். - என்றார். (ரி2)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.